இந்துச் சட்டத் தொகுப்பு

# மாயையும்-எதார்த்தமும்

மதுகிஷ்வர்

# இந்துச் சட்டத் தொகுப்பு
# மாயையும் - எதார்த்தமும்

மதுகிஷ்வர்

விடியல் பதிப்பகம்

கோவை — 641015

## நூலைப்பற்றி

நூல் தலைப்பு : இந்துச் சட்டத் தொகுப்பு
மாயையும்—எதார்த்தமும்
முதற்பதிப்பு : டிசம்பர் 1994
ஆங்கில மூலம் : மதுகிஷ்வர்
தமிழாக்கம் : வெ. கோவிந்தசாமி,
பக்கங்கள் : 132
வெளியீடு : விடியல் பதிப்பகம்
3 மாரியம்மன் கோவில் வீதி,
உப்பிலிபாளையம்,
கோவை-641015.
அச்சிட்டோர் : அலைகள் அச்சகம்,
36, தெற்குச் சிவன் கோவில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-600 024
**விலை : ரூ. 20. 00**

# உள்ளே...


| | |
|---|---|
| முன்னுரை | 5 |
| இந்துச் சட்டத் தொகுப்பு | 19 |
| இந்து திருமணச் சட்டம் | 62 |
| காப்பாளர் சட்டத்தில் மாறுதல்கள் | 68 |
| புதிய பேணுதல் (பராமரிப்பு) சட்டம் | 80 |
| இந்து வாரிசுரிமைச் சட்டம் | 83 |
| பொது சிவில் சட்டத்திலிருந்து விலகிச் செல்லல் | 105 |
| அரசாங்கம் முன்னெடுக்கும் சீர்திருத்தத்தின் எல்லைகள் | 111 |
| தொகுப்புரை | 117 |

# முன்னுரை

முதலாளியத்தின் தோற்றத்தோடு மக்களை தமது மேலாண்மையின் கீழ்ப்பட்ட சிவில் சமூகமாய் ஒழுங்கமைக்கும் பொறியமைவை அதிகாரத்துவ சக்திகள் மிகவும் நுண்மையானதாயும் பரந்துபட்ட வலைப் பின்னலாகவும் மாற்றியமைத்தன. புவியியல் ரீதியான பல்வேறுபட்ட அலகுகளாக (கிராமம், தாலுகா, மாவட்டம், மாநிலம், நாடு...) சமூகத்தைப் பிரித்து அதிகாரங்கள் குவிக்கப்பட்ட மையத்தின் கண்காணிப்பிற்கும், வரிவசூல் நடைமுறைகளுக்கும் ஆட்படுத்தல்: மையப்படுத்தப்பட்ட கல்வி, மருத்துவ வரி அமைப்புகள் மற்றும் மையப்படுத்தப்பட்ட சட்டமியற்றும்/ நீதி வழங்கும்/நீதி பரிபாலிக்கும் நெறிமுறைகளையும் நிறுவனங்களையும் உருவாக்குதல் என்பன இப்பொறியமைவின் சில முக்கியமான கூறுகள். இந்நிறுவனங்கள் அனைத்தும் தம் செயல்பாடுகளினூடாகவே சில நியதிகளையும் (Norms) நியாயப்பாட்டுக் கருத்தியல்களையும் (Legitimising Idiologies) உருவாக்கிப் பதியவைக்கின்றன. இதனைச் சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

மத்திய காலத்திலும் அதற்கு முந்தியும்கூட வரிவசூல் அமைப்புகளும், கல்வி/மருத்துவ/நீதி வழங்கு நெறிமுறைகளும் அமுலில் இருந்திருந்தாலும் முதலாளியத்திற்குப் பிந்தியே அவை ஒரு மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தின் கீழ், படிநிலை வடிவில் ஒவ்வொரு சமூக உறுப்பினரையும் பின்னிப் பிணைக்கும் வலைப் பின்னலாய் உருவெடுக்கின்றன. எடுத்துக்காட்டாக நீதி வழங்கு நெறிமுறையை

எடுத்துக் கொள்வோம். ஒவ்வொரு சமூகக் குழுவும் அதன் உறுப்பினர்களுக்கிடையேயான பரஸ்பர உறவுக்கான நியதிகளை கீழிருந்து விருப்பபூர்வமாய் உருவாக்கிக் கொண்டு அவற்றை ஒரு உறுப்பினர் மீறும்போது அந்தச் சமூகம் அதனை விசாரித்து நீதி வழங்கும் இதில் கவனிக்க வேண்டிய அம்சங்கள்: 1. நியதிகள் அல்லது சட்டங்களை உருவாக்கும் மையப்படுத்தப்பட்ட சட்ட நிர்ணய அவை அல்லது சட்டமன்றம் போன்ற நிறுவனங்கள் கிடையாது. 2. உருவாக்கப்பட்ட நியதிகள் அல்லது சட்டங்கள் மேலிருந்து திணிக்கப்படுவதில்லை. 3. சமூகத்திற்கும் உறுப்பினருக்குமிடையே ''நடுநிலையான'' என்னும் பெயரிலான நீதி வழங்கு அமைப்பு இல்லை. 4. வழங்கப்பட்ட 'நீதியை' நிறைவேற்றுவதற்கான தனியான பொறியமைவு ஏதுமில்லை. ஆனால் நீதிமன்றம் என்கிற புதிய அமைப்பு உருவாகும்போது இவை அனைத்தும் வந்து விடுகின்றன என்பதை விளக்கத் தேவையில்லை.

நீதி அமைப்பின் உருவாக்கத்தோடு அதனை நியாயப்படுத்தும் கருத்தியல்களும் உருவாகிவிடுகின்றன. சட்ட ஒழுங்கு (legal order) இன்றி சமூக ஒழுங்கு (Social order) சட்ட மாயைகள் (legal fetishism) தோற்றுவிக்கப்படுகின்றன. சட்டமும் கண்காணிப்பும் இல்லாமல் எப்படி ஒரு சமூகம் இயங்கமுடியும்? சட்டம் குலைந்தால் அராஜகம் அல்லவா நிலவும்? 'சட்டம் — ஒழுங்கு' என்கிற கருத்தாக்கம் சிந்திக்கத்தக்கது. சட்ட மாயையின் அடுத்த பக்கம் 'சட்டத்தின் ஆட்சி' என்கிற கருத்தமைவு. இதன் மூலம் இரண்டு பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

1. நீதி × அநீதி; சரி × தவறு; உண்மை × பொய்; ஒழுங்கு × ஒழுங்கின்மை ஆகியவற்றை வரையறுத்து நீதி, சரி, உண்மை, ஒழுங்கு ஆகியவற்றை கண்காணித்து செயல்படுத்தும் கருவியாக அரசும் அதிகார நிறுவனங்களும் தம்மை நியாயப்படுத்திக் கொள்கின்றன.

2. இதுகாறும் ஒரு சமூகக் குழுவின் ஒட்டுமொத்த மான நியதி (Norm) யாகவும் வழமையாகவும் (Custom) உள்ளவை ஒரே கணத்தில் **குற்றமாக** வரையறுக்கப்படும் அவலம். எடுத்துக்காட்டாக அறுத்துக் கட்டும் வழக்க முடைய ஒரு சமூகக் குழுவின் மீது கணவன் உயிருடன் இருக்கும்போது பிரிதல் அநீதியானது, சட்ட விரோத மானது, என்கிற பொதுச் சட்டத்தை மேலிருந்து திணிக்கும்போது அச்சமூகம் முழுமையும் ஒழுக்கக் கேடான சமூகமாகவும் மாற்றப்படுகிறது. இன்னொரு எடுத்துக்காட்டு சொல்வதென்றால் காடுகள் பராமரிப்பு என்கிற பெயரில் சட்டமொன்றை இயற்றுவதன் மூலம் முதல் நாள்வரை மலையினச் சமூகம் ஒன்றின் தொழிலாக இருந்த மரம் வெட்டி விற்றல் என்பது அடுத்த நாள் முதல் 'குற்றமாகி' விடுகிறது.

இவ்வாறு குற்றவியல் சட்டங்கள் மூலம் குற்றங்களும் குற்றவாளிகளும் உருவாக்கப்படுகின்றனர். எல்லாவற் றையும் தொகுத்துப் பார்க்கும்போது நீதிமன்றம் என்பது **ஃபூக்கோ** சொல்வதுபோல பொது அதிகாரத்தின் கருவி என்பதும் அரசின் அங்கம் என்பதும் விளங்கும். இதனால் தான் வெகுசன எழுச்சிகள் உருவாகும் போதெல்லாம் அவற்றின் இலக்குகளில் ஒன்றாக நீதி மன்றங்கள், சிறைச் சாலைகள் ஆகியவை அமைந்துவிடுகின்றன. சிறைச் சாலைகள் உடைக்கப்பட்டு கைதிகள் விடுவிக்கப்படுவதை யும் நாட்டுப்புற நினைவுகளில் புகழ்பெற்ற திருடர்கள் நாயகர்களாக நிலைத்து விடுவதையும் நாம் இந்தப் பின்னணியில்தான் விளங்கிக் கொள்ளவேண்டும்; சட்டத் தொகுப்பு, சட்ட நிர்ணய அவை/நீதிமன்ற உருவாக்கம் ஆகியவற்றை சமூகத்தை ஒழுங்கமைத்து அதிகாரப் படி நிலைக்கு ஆட்படுத்தும் முயற்சியாகவே பார்க்க வேண்டும்.

ஃ ஃ ஃ

முதலாளிய நெறிமுறைகளின் பல்வேறு கூறுகள் இந்தியத் துணைக் கண்டத்திற்குள் ஆங்கிலேயரின் வருகையோடுதான் அறிமுகமாகின்றன என்பதை நாம் அறிவோம். மொழி, இன, மத, சாதி, புவியியல் ரீதியான எண்ணற்ற குழுக்களாய்ப் பிளவுண்டு கிடந்த இந்தியத் துணைக் கண்ட மக்களனைவரையும் பிரிட்டிஷ் ஆளுகைக் குட்பட்ட இந்திய அரசின் கீழான சிவில் சமூகமாக ஒழுங் கமைக்கும் பணியைத் தலையாயதாக அன்றைய ஆங்கில ஆட்சியாளர்கள் கருதிச் செயல்பட்டனர். ஆங்கில மாதிரி யிலான அரசு நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டது; மையப்படுத்தப்பட்ட மருத்துவக் கல்வி அமைப்புகள் உருவாக்கப்பட்டன. இதன் ஓரங்கமே மெக்காலே கல்வி முறை. சாதி, மத, பிராந்திய அடிப்படைகளிலானதாக இருந்தாலும் பன்முகத் தன்மைகளோடு ஓரளவு சுயேச்சையாகவும் இயங்கிக் கொண்டிருந்த கல்வி மற்றும் நீதி வழங்கு அமைப்புகள் 'முறைப்'படுத்தப்பட்டு அரசதிகார வலைக்குள் கொண்டு வரப்பட்டன. கல்வி நிறுவனங்களுக்கு மானியங்களை (aid) வழங்கி பதிலுக்கு அரசு நிர்ணயிக்கும் மையப்படுத்தப்பட்ட பாடத்திட்டம், மையப்படுத்தப்பட்ட தேர்வுமுறை ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளக் கட்டாயப்படுத்தப்பட்டன.

நீதித் துறையை பொறுத்தமட்டில் 1771 முதற் கொண்டே கிழக்கிந்தியக் கம்பெனியால் சிவில் மற்றும் கிரிமினல் தீர்ப்புவழங்கு அதிகாரிகள் அமர்த்தப் பட்டனர். நாடெங்கிலும் பல்வேறு பகுதிகளில் நீதி வழங்கும் பணியைச் செய்து கொண்டிருந்த பார்ப்பனர் களும் மவுல்விகளும் அரசில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென வற்புறுத்தப்பட்டனர். கீழ்க் கோர்ட்டுகள் மேல் முறையீட்டு நீதி மன்றங்கள் போன்ற அமைப்புகள் வடிவமைக்கப்பட்டன. மையப்படுத்தப்பட்ட நீதிமன்ற இயக்கத்திற்கு இயைபாக வழமையிலுள்ள சாதி மத

சாத்திர நெறிகளைத் தொகுத்துச் சட்டவடிவம் அளிக்கப் படும் என வாரன் ஏஸ்டிங்ஸ் அறிவித்தான். இந்த நோக்கில் இந்தியத் துணைக்கண்டத்தில் நிலவி வந்திருந்த பல்வேறு ஸ்மிருதிகளும், சட்ட விளக்க நூல்களும் தொகுக் கப்பட்டன; அச்சிடப்பட்டன; மொழி பெயர்க்கப் பட்டன. என். பி. ஹால்ஹெட் மொழி பெயர்த்த 'இந்துச் சட்டங்களின் தொகுப்பு', எச். டி. கோல்புருக் மொழி பெயர்த்த 'விவாத பஸ்கார் நவா' என்பன முக்கியமான சில தொகுப்புகள். 1802 முதல் மாவட்ட நீதிமன்றங்களில் நீதிபதிகளுக்குத் துணையாக சரித்திர விளக்கமளிக்க பார்ப்பனப் பண்டிதர்களும் இசுலாமியச் சட்டங்களுக்கு விளக்கமளிக்க மவுல்விகளும் அமர்த்தப் பட்டனர். 1860க்குள் இந்துச் சட்டத் தொகுப்பின் முதற்கட்டப் பணிகள் முடிவடைந்தன. *

முதற்கட்ட இந்து சட்டத் தொகுப்பிற்கு அடிப்படை யாக இருந்த நூல்களாவன: யாக்ஞவல்கிய ஸ்மிருதியின் வியாக்னமான மிதாட்சரம், தேவண்ணபட் எழுதிய ஸ்மிருதி சந்திரிகை, மாதவியா எழுதிய தாயவிபாகம், பிரதாப ருத்ர வேதன் எழுதிய சரஸ்வதி விலாசம் வரதராஜா எழுதிய வியவகார நிர்ணயம், மாதவாசார்யா எழுதிய பராசர மாதவ்யம், வைத்திநாத தீட்சதீயம், விஸ்வேஸ்வர பட்டா எழுதிய சுபோதினி, மித்ரமிஸ்ரா எழுதிய வீரமித்ரோதயம். இவை அனைத்தும் பார்ப்பன ரால் எழுதப்பட்டவை என்பவையும் வருணாசிரமக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டவை என்பதும் குறிப்

---

* 'இந்துச் சட்டத் தொகுப்பின் வரலாற்றை அறிய ஆங்கிலத்தில் பல நூல்கள் உள்ளன. தமிழில் ஒரு அறிமுகம் பெற விரும்புவோர் திரு.வே. ஆனைமுத்து அவர்கள் எழுதியுள்ள 'தமிழ்நாட்டில் பண்பாட்டுப் புரட்சி' (பெரியார் நூல் வெளியீட்டகம், 1980) என்கிற நூலைப் பார்க்கலாம்.

பிடத்தக்கன. ஸ்மிருதி சந்திரிகை, மனு ஸ்மிருதி போன்றவை ஆங்கிலத்தில் மட்டுமின்றி பிறதேசிய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டன. 1827இல் மதுரைகந்த சாமிப் புலவர் ஸ்மிருதி சந்திரிகையை விவகார சங்கிரகம் எனத் தமிழில் பெயர்த்து வெளியிட்டார். மயிலாடுதுறை முன்சீப் வேதநாயகம் பிள்ளை 1805-1861 காலகட்ட நீதிமனற முடிவுகளைத் தொகுத்துத் தமிழில் 'சித்தாந்த சங்கிரகம்' என வெளியிட்டார்.

ஆங்கிலேயரால் மேற்கொள்ளப்பட்ட இந்த முதற்கட்ட இந்துச் சட்டத் தொகுப்புப் பணியின் மூன்று குறிப்பிடத்தக்க அம்சங்களாவன: 1. இவை பிறப்பு அடிப்படையில் தொழில், உரிமைகள், ஏற்றத் தாழ்வுகள் ஆகியவற்றை அங்கீகரிக்கும் வருணாசிரமத்தை அடிப்படையாகக் கொண்டன. சர். தாமஸ் ஸ்ட்ரேஞ்ச் தொகுத்துள்ள 'பண்டிதரின் அபிப்ராயங்கள்' எனும் நூலைப் புரட்டினால் எந்த அளவிற்கு மனு தர்மமும், வருணாசிரம நெறிகளும் நீதிமன்றங்களில் கோலோச்சின என்பது விளங்கும். 2. ஸ்மிருதிகள் மற்றும் சாத்திர விளக்கங்களுக்கும் மேலாக சமூகக் குழுக்களிடையே உள்ள பழமைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்ற கருத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இந்த அடிப்படையில் சாதி/இனக்குழு பழமைகள் **எட்கார் தர்ஸ்டன்** (தென்னிந்திய சாதிகளும் பழங்குடிகளும்), **மார்ஷல்** (தோடர்களிடையே பயணங்கள்) **ராமச்சந்திரய அய்யர்** (மலபார் சடங்குகளும் வழக்கங்களும்) போன்றோரால் தொகுக்கப்பட்டன. மதுரை வழக்கொன்றில், (Collector of Madura Vs Muthu Ramalinga Sethupathy—12 M. I. A. 436 : 10 WR (P.C )-21 – Quoted in V. Anaimuthu, op. cit) "விவாதத்திற்குரிய பிரச்சினை பழங்கால ஆதாரங்களைப் பெற்றுள்ளதா எனப் பார்ப்பதைக் காட்டிலும் வழக்குக்கு உரியவர் எந்த மாவட்டத்தைச் சார்ந்தவரோ அந்த மாவட்டத்தில்

அமுலில் இருக்கும் இந்துச் சட்ட விளக்கப் பிரிவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா, அது அங்கே நெடு நாட்க ளாகப் பழக்கத்தில் உள்ளதா எனப் பார்ப்பதே முக்கியம். ஏனெனில் இந்து சட்ட முறைப்படி வழக்கத்திலிருந்து வந்தது என்பதற்குத் தெளிவான சாட்சியம் இருப்பின், வழக்கம் என்பது எழுதப்பட்ட சாட்சியத்தைக் காட்டி லும் வலிமையுடையதாகும்'' எனக் குறிப்பிடப்பட்டது

3. ஆங்கிலேயர் வருகையை ஒட்டி ஏற்பட்ட உரிமை எழுச்சிகளின் விளைவாகவும் வெள்ளையர் புகுத்திய பிற அரசியல், பொருளாதார நடவடிக்கைகளின் விளைவாக வும் அடிமை முறை (1811), உடன் கட்டை (1829), பார்ப்பனருக்கு மட்டும் மரண தண்டனையிலிருந்து விலக்கு (1817), மதம்/நிறம்/பிறப்பிடம் காரணமான சிறப்புரிமைகள் (1833), தாழ்த்தப்பட்டோருக்கு கல்வி பயிலுதலில் இருந்த தடைகள் முதலியவை சட்ட வழியாக நீக்கப்பட்டன. எனினும் இந்துச் சட்டத் தொகுப்பின் வருணாசிரம உள்ளடக்கம் முழுமையாக மாற்றப்பட வில்லை என்பதற்கு பார்ப்பனரல்லாத பிற வருணத்தவர் இன்றளவும் கோயில் கருவறைக்குள் நுழைய இயலாமல் இருப்பதொன்றே சாட்சியாகும்.

∴ ∴ ∴

இனி, மொழி வேறுபாடுகளையெல்லாம் கடந்து இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் ஒரே தேச மாகக் கட்டமைப்பது இந்திய தேசிய காங்கிரசின் தலை யாய பணியாக இருந்தது. இந்தக் கற்பிதத்திற்கான மையக் குவியமாக ஒட்டுமொத்தமான இந்தியப் பண்பாடு என்கிற பெயரில் இந்துப் பண்பாட்டை அது உயர்த்திப் பிடித்தது. இதற்காக துணைக் கண்டத்திலிருந்த இசுலா மியர் தனியே பிரிந்து பாகிஸ்தானாக உருப்பெற்றதையும் அது சகித்துக் கொண்டது. இந்த அடிப்படையில் செய்யப் பட்ட பல்வேறு முயற்சிகளில் இந்தியா முழுமைக்குமான

மேலும் இறுக்கமான, ஒரே சீரான இந்துச் சட்டத் தொகுப்பு ஒன்றை உருவாக்குதல், இந்தியை ஆட்சி மொழியாக்கும் முயற்சி ஆகியவை குறிப்பிடத் தக்கன.

இறுக்கமான இந்துச் சட்டத் தொகுப்பை உருவாக்கும் முயற்சிகள் 1940 களில் தொடங்கிய 'விடுதலைக்'குப் பிந்திய இந்தியாவில் 1950 களின் இறுதியில் முற்றுப் பெற்றன. **டாக்டர் அம்பேத்கர்** அவர்களின் பங்கு இதில் குறிப்பிடத்தக்கதாய் இருந்தது. 1940 களுக்குப் பிந்திய இந்த வரலாற்றைப் பெண்ணிய நோக்கில் விரிவான ஆதாரங்களோடு விளக்கும் முயற்சியே உங்கள் கைகளில் புரளும் இந்தச் சிறு நூல். இந்நூலாசிரியர் **மதுகிஷ்வார்** இந்து திருமணம்-வாரிசுரிமை, காப்பாளர் மற்றும் தத்தெடுத்தல் தொடர்பான சட்டங்களை ஆய்ந்து வந்தடையும் முடிவுகளைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கொள்ளலாம்.

1. இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் வசிக்கும் பல்வேறு மக்கட் பிரிவினரிடையே திருமணம், மணவிலக்கு, வாரிசுரிமை, தத்தெடுத்தல் தொடர்பான பல்வேறு விதமான வழமைகள் நடைமுறையில் இருந்தன. தொகுக்கப்பட்ட ஸ்மிருதி விளக்கங்களுக்கிடையேயும் கூட பல வேறுபாடுகள் இருந்தன. இவற்றில் பல ஒப்பீட்டளவில் பெண்களுக்கு எளிய மணவிலக்கு உரிமைகள், சொத்துரிமைகள், வாரிசுரிமைகள் முதலியவற்றை அளிக்கக் கூடியதாக இருந்தன.

2. இந்துச் சட்டம் தொகுக்கப்பட்டபோது இத்தகைய பன்முகத் தன்மைகள் அழித்தொழிக்கப்பட்டன. தனக்குச் சாதகமாக உள்ள தமது வழமையை தேர்வு செய்யும் உரிமை மக்களிடமிருந்து பறிக்கப்பட்டது. யாக்ஞவல்கிய விளக்கம், மனு ஸ்மிருதி, கௌடலீயம் போன்ற சட்டத் தொகுப்புகளிலும், ஆங்கிலேய ஆட்சி

யிலும் தேச வழமைகளுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவங்கள் நீக்கப்பட்டன.

3. இந்தியத் துணைக் கண்டம் முழுமையிலுமுள்ள 'இந்துக்களுக்கான' சட்டமாக உருவாக்கப்பட்ட இந்துச் சட்டம் என்பது இங்கிலாந்து மரபும் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் ஆதிக்கம் செய்த மக்கட் பிரிவின் வழமையாக இருந்த இந்து மரபும் கலந்த கலவைதான். பெண்ணிய நோக்கில் பார்க்கும் போது இங்கிலாந்து மரபு என்பது அப்படி ஒன்றும் முற்போக்கான ஒன்றல்ல. வடமேற்கு இந்தியாவின் ஆதிக்கப் பிரிவினரிடையே வழமையாக இருந்த இந்து மரபு என்பது பிற இந்தியப் பகுதிகளின் மரபுகளுடன் ஒப்பிடும்போது மிகவும் ஆணாதிக்கம் சார்ந்த மரபு ஆகும். எனவே ஆங்கில மரபும் வடமேற்கு இந்திய ஆதிக்க சக்திகளின் மரபும் கலந்த இந்துச் சட்டம் இந்தியாவின் பல பகுதிகளில் வழமையில் இருந்த ஒப்பீட்டளவிலான பெண்ணுரிமைகளைப் பறித்தது. வழமையில் இருந்த பிற மரபுகள் ஒழுக்கக் கேடுகளாகச் சித்திரிக்கப்பட்டன. ஆணாதிக்கத் தன்மையோடு வளர்ந்து வந்த இந்திய முதலாளியத்திற்கு புதிய இந்துச் சட்டத்தின் மூலம் கிடைத்த சொத்துரிமைகள் என்பன வரவேற்கத் தக்கதாய் இருந்தன. தொடக்கத்தில் அய்யத்தோடு இத் தொகுப்பு முயற்சியை எதிர்த்து வந்த இந்து வகுப்புவாத சக்திகள் இந்துச் சட்டத்தின் இறுதி வடிவை ஆதரிக்கவே செய்தன.

4. இந்துச் சட்டத் தொகுப்பு என்பது இந்து மரபுகளில் உள்ள முற்போக்கான கூறுகளின் தொகுப்பே எனக் கூறுவதும் இதன் மூலம் ஆண்-பெண் சமத்துவம் நிலை நாட்டப்பட்டு விட்டது எனச் சொல்வதும் அப்பட்டமான தவறுகளாகும். உண்மையில் மக்களை வகுப்புவாத நோக்கில் பிரித்து நிறுத்துவதற்கே இந்தத் தொகுப்பு பயன்பட்டது.

5. நீதி வழங்கு நெறிமுறைகளையும் நிறுவனங்களையும் மக்கள் அணுகுவதற்கு எளிமையாக்குவதற்கான எந்த முயற்சியையும் தொகுப்பாளர்களோ ஆட்சியாளர்களோ மேற்கொள்ளவில்லை.

6. **டாக்டர் அம்பேத்கர்** போன்றவர்களது ஆங்கிலேய மரபுகளின் மீதான மோகம், பன்முகத் தன்மையையே அசிங்கமானதாகக் கருதும் போக்கு ஆகியவை இந்நிலை ஏற்பட்டதற்கு முக்கியமான காரணங்கள்.

பொதுவான நோக்கில் அணுகும்போது **மது கிஷ்வாரின்** முடிவுகளை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டியிருக்கிறது. எல்லாவிதமான சட்டத் தொகுப்புகளும், இலக்கண உருவாக்கங்களும், தரப்படுத்தல்களும் அதிகாரமயமாக்கலுக்கே பயன்படுகின்றன; பன்முகத் தன்மைகளை மறுத்து ஏதேனும் ஒரு ஆதிக்கப் பிரிவின் வழமையை பொதுச் சட்டமாக ஆக்கி, பிற வழமைகளைக் கொண்டிருப்பவர்கள் மீது குற்ற உணர்ச்சியை ஏற்றும் அதிகாரத்துவச் செயல்பாடுகள் பற்றிய புரிதல்களோடு இந்தப் பிரச்சினையை அணுகும்போது பெண்ணிய நோக்கில் **மது கிஷ்வார்** முன் வைக்கும் முடிவுகளின் நியாயங்கள் மேலும் விளக்கமுறும். எனினும் **டாக்டர் அம்பேத்கர்** மீது அவர் வைக்கும் விமர்சனங்களைச் சற்று விரிவாக நாம் விவாதிக்க வேண்டியிருக்கிறது. அதற்கு முன் ஒன்றைச் சொல்ல வேண்டும். **மார்க்சுக்கோ** இல்லை **காந்திக்கோ** இல்லை **அண்ணாவுக்கோ** மாற்றான, விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட தலைவராக நாம் **அம்பேத்கரை** அணுகவில்லை. அப்படி அணுகுவதுதான் தலித்தியப் பார்வை என நாம் நம்பவுமில்லை. **அம்பேத்கராயினும்** சரி வேறு யாராயினும் சரி விமர்சனம் செய்ய வேண்டியவற்றை விமர்சித்தே ஆகவேண்டும். **மது கிஷ்வாரின்** விமர்சனத்தில் பொருள் இருக்கிறதா என்பதே இங்கு கேள்வி.

ஃ ஃ ஃ

நீதி வழங்கு நிறுவனங்களின் முன் வரும் வழக்கு களை நாம் மூன்றாகப் பிரிக்கலாம். அவை:

1. ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவின் இரு உறுப்பினர் களிடையே அல்லது குழுவின் ஒரு உறுப்பினருக்கும் குழுவுக்கும் இடையே ஏற்படும் பிரச்சினைகள்.

2. ஒரு சமூகக் குழுவின் உறுப்பினருக்கும் இன் னொரு சமூகக் குழுவின் உறுப்பினருக்கும் இடையே ஏற்படும் பிரச்சினைகள்.

3. ஒரு சமூகக் குழுவின் உறுப்பினருக்கும் அரசுக்கும் இடையே ஏற்படும் பிரச்சினைகள்.

ஆங்கிலேயர் வருகைக்கு முந்திய ஆசிய நிலவுடைமை இந்தியாவில் இம் மூன்று வழக்குகளும் எவ்வாறு அணுகப் பட்டன என ஊகிக்க இடமுண்டு.

ஒரே சமூகப் பிரிவின் இரு உறுப்பினர்களிடையே பிரச்சினை எழும்போது 'சாதி நியாயம்' 'சாஸ்திரப்படி' போன்ற அந்தந்தப் பிரிவின் தேச வழமைகளின்படி ஓரளவு சனநாயக பூர்வமான எளிய பஞ்சாயத்து முறை யில் அவை தீர்க்கப்பட்டன. ஆனால் இருவேறு சமூகப் பிரிவுகளின் உறுப்பினர்க்கிடையேயும் அல்லது அரசுக்கும் ஏதோ ஒரு பிரிவின் உறுப்பினருக்கிடையேயும் பிரச்சினை கள் வந்த போது அந்தந்தப் பிராந்தியத்தில் அல்லது புவியியற் பிரிவில் தொகுக்கப்பட்டு வழமையிலிருந்து ஸ்மிருதிகளினடிப்படையிலான சட்ட விதிகளின் அடிப் படையில் பிரச்சினைகள் அணுகப்பட்டன. இத்தகைய ஸ்மிருதிகளின் வருணாசிரம உள்ளடக்கத்தைப் பற்றி மிகவும் விரிவாக விளக்க வேண்டியதில்லை. உரிமை களிலும், வழக்கு நடவடிக்கைகளிலும், தண்டனை களிலும் பார்ப்பனர்களுக்கும் இதர உயர் சாதியினருக்கும் ஏராளமான சலுகைகளை வழங்கிய நமது வருணாசிரம

அடிப்படையிலான சட்டத் தொகுப்புகள் சூத்திரர்களையும் பஞ்சமர்களையும் கடுமையாக அணுகியதையும் ஒரே குற்றத்திற்கு பார்ப்பனனுக்கும் பறையருக்கும் வெவ்வேறு தண்டனைகளை மனுஸ்மிருதி போன்றவை வரையறுத்துள்ளதையும் இங்கே விரிவாக விளக்கிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. பெண்ணிய நோக்கில் பார்க்கும்போது ஒரு சில ஸ்மிருதித் தொகுப்புகள் ஒப்பீட்டளவில் முற்போக்கானதாய் இருந்தபோதிலும் தலித்திய நோக்கில் அணுகும் போது எந்த ஒரு ஸ்மிருதித் தொகுப்பையும் ஒப்பீட்டளவில் கூட உயர்ந்ததாகப் பார்க்க இயலாது. எனவே வருண ரீதியான ஏற்றத் தாழ்வைப் போக்கக் கூடிய ஒரு சீரான பொதுத் தொகுப்பொன்றை உருவாக்க நினைத்த அம்பேத்கரின் வேட்கையை நாம் அவ்வளவு எளிதாக ஒதுக்கிவிட இயலாது. புவியியல்அடிப்படையிலான வேறுபாடுகள் பற்றியெல்லாம் விரிவாய்ப் பேசி நமது ஸ்மிருதித் தொகுப்புகளின் பன்முகத் தன்மைகளையெல்லாம் வெகுவாய்ப் புகழும் **மது கிஷ்வார்** அவற்றின் சாதி / வருணா ரீதியான ஏற்றத்தாழ்வான பார்வை பற்றி எங்கும் விமர்சிக்காதது கவலைக்குரிய ஒன்று.

இந்தியச் சூழலில் ஆக ஒடுக்கப்பட்ட இரு பிரிவுகளாகிய பெண்களையும் தலித்களையும் எதிரெதிராக நிற்க வைத்து, ஒன்றிலிருந்து ஒன்றை விலக்கி இத்தகைய பிரச்சினைகளை அணுகி விட இயலாது. பாலாதிக்க ஒடுக்குமுறையையும் வருணாசிரம ஒடுக்குமுறையையும் ஒரு சேர நாம் கணக்கிலெடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்த நோக்கில் பார்க்கும் போது நமது சாதீயச் சமூகத்தில் ஆகக் கீழாக உள்ள சாதிப் பிரிவினரிடையே தான் பெண்ணிய நோக்கிலும் சரி, தலித்திய நோக்கிலும் சரி ஒப்பீட்டளவில் சமத்துவமான அணுகல் முறைகள் வழமையில் உள்ளன. ஆனால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட எந்தச் சட்டத்தொகுப்பு முயற்சிகளிலும் பஞ்சம வழமைகள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டதாகத்

தெரியவில்லை இவர்களது மரபுகளையும் வழமைகளையும் தொகுக்கப்பட வேண்டிய ஒன்றாகக் கூட இதுவரை யாரும் கருதியதில்லை.

* * *

சட்டத் தொகுப்புகளின் பின்னால் உள்ள அரசியல் மற்றும் அதிகாரத்துவ செயற்பாடுகளையும் தலித்திய மற்றும் பெண்ணியப் பார்வைகள் இணைந்து நிற்க வேண்டிய அவசியத்தையும் கணக்கிலெடுத்துக் கொண்டு பார்க்கும்போது மாற்று நீதிமுறை ஒன்றை உருவாக்க வேண்டியதன் அவசியம் புரியும். சட்டத் தொகுப்பு என்கிற உள்ளடக்கத்தை மட்டுமின்றி 'நடுநிலை' என்கிற பெயரில் பொது அதிகார நிறுவனமாக விளங்கும் நீதிமன்றத்தின் வடிவத்தையே நாம் மாற்றியாக வேண்டும் மாற்றுக்கல்வி, மாற்று மருத்துவம், மாற்றுக்கலாச்சாரம் என்கிற வரிசையில் **மாற்று நீதி** குறித்து நாம் சிந்திக்க வேண்டியதன் அவசியத்தையே தலித்தியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையே தோற்றம் கொள்ளும் இம் முரண் நமக்கு வற்புறுத்துகிறது. இந்த வகையில் ஃபூக்கோவுக்கும் மாவோயிஸ்டுகளுக்குமிடையேயான 'வெகுஜன நீதி' பற்றிய உரையாடல் (பார்க்க : நிறப்பிரிகை-5) கவனத்திற்குரிய தொடக்கப் புள்ளிகளில் ஒன்றாய்ப் படுகிறது.

27. 12. 94.
31, சேவியர் நகர்
தஞ்சாவூர் 613001

**அ. மார்க்ஸ்**

# இந்துச் சட்டத்தொகுப்பு மாயையும் - எதார்த்தமும்

அரசியலமைப்புச் சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஆண் / பெண் சமத்துவம், ஓரவஞ்சனையற்ற அணுகுமுறை ஆகிய கொள்கைகளில் புதிய அரசாங்கம் கொண்டுள்ள ஈடுபாட்டிற்கு ஓர் அடையாளமாகவே இந்து தனிச் சட்டத் தொகுப்பும், சட்டச் சீர்த்திருத்தமும் வரவேற்கப்பட்டன. இந்தியக் குடியரசின் முதல் பத்தாண்டுகளின் போது இது நடைபெற்றது. இந்துச் சட்டத் தொகுப்பின் வரலாறும், பின்வந்த ஆண்டுகளில் இவை பெற்ற முக்கியத்துவமும், அரசாங்கத்தின் பேச்சிற்கும், நடைமுறைக்குமுள்ள இடைவெளிக்கும், அரசாங்கம் தொடங்கி வைத்த சீர்திருத்தத்திற்கும் நல்ல மாதிரியாக பலவழிகளிலும் விளங்குகிறது. இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் ஆங்கில ஆட்சி நிலைநிறுத்தப்பட்ட பின்பு ஆங்கிலேயர்களால் இந்த அரசு ஆதரவு சீர்திருத்தம் தொடங்கப்பட்டது.

இந்துச் சட்டத்தைத் தொகுக்கும் முயற்சி 18ஆம் நூற்றாண்டின் பின்பகுதியிலிருந்துதான் தொடங்கப் பெற்றது. பல்வேறுபட்ட சமூகக் குழுக்களின் சமூக, அரசியல் வாழ்வை தனது நீதி நிர்வாக எல்லைக்குள் கொண்டுவர காலனிய ஆட்சியாளர்கள் விரும்பினார்கள்.

இதற்கு முன்னர் இருந்த ஆட்சியாளர்கள் எவரும் இம்மாதிரியான ஒரு அத்துமீறலை செய்யவில்லை. ஆங்கில ஆட்சி நிறுவப்பட்டதானது இந்தியா தன்னை கடந்த காலத்திலிருந்து மிகப்பெருமளவிற்கு முறித்துக் கொண்டதை குறிப்பதாய் இருந்தது. இதற்கு முன்னர் இருந்த ஆட்சியாளர்கள், மேல்மட்டத்தில் எவ்வளவு பெரிய மாற்றங்களை புகுத்திய போதிலும் 'சாதி' அல்லது பிராதரி (Biradari) என்றழைக்கப்பட்ட பல்வேறு சமூக நிறுவனங்களின் உள்பிரச்சனைகளில் தலையிட எண்ணியதேயில்லை. மாதிரிக்கு, மொகலாயர் ஆட்சியின் போது, வகுப்பு அடிப்படையிலான மரபு வழி நிறுவனங்கள் தங்கள் பிரச்சனைகளை தாங்களே தீர்த்துக்கொள்வதை இசுலாமிய சட்டம் வெளிப்படையாகவே அங்கீகரித்தது. ஆட்சியாளர்களுக்கு எதிரான குற்றம், நீதி நிர்வாகம் ஆகிய பிரச்சனைகளில் தலையிடுவதோடு மட்டுமே தன் பணியை முகலாய நீதி மன்றங்கள் நிறுத்திக்கொண்டன. குடும்ப குலப் பிரச்சனைகள் முசுலீம் அதிகாரிகள் முன் கொண்டுவரப்படவில்லை. பிரச்சனைகளை தீர்க்கும் விதிமுறைகள் சாதிக்கு சாதி, பகுதிக்குப் பகுதி பெருமளவு வேறுபட்டிருந்தன.[1]

பதினேழாம் நூற்றாண்டில், வணிகர்களாக வருகை தந்த ஆங்கிலேயர்கள், இந்திய சமூகத்தின் பன்+முக+ வேறுபாடுகளையும், சிக்கல்களையும் கண்டு திகைத்துப் போயினர். சட்ட ஆட்சியின் கீழ் குடும்ப/சமூகப் பிரச்சனைகள் கொண்டுவரப்பட்ட ஒரு சமூகத்திலிருந்து வந்ததன் காரணமாக அதே வழியிலான அதிகார முறையை இந்தியாவிலும் இவர்கள் நாடினர். ஆகவே தான் அன்றைய இந்தியாவை ஆட்சி புரிவதற்கான சட்டங்களை உருவாக்க ஆங்கிலேயர்களுக்கு உதவும் பொருட்டு பழம் சாத்திரங்களை ஆய்வு செய்யும் ஒரு புதிய வகைப் படிப்பு தொடங்கியது.

**வாரன் கேசுடிங்** ஆட்சிக் காலத்தின் போது, சொத்துரிமை பிரச்சனை, திருமணம் ,சாதி, மத பழக்கவழக்கங்கள் குறித்த சட்டங்கள் அல்லது நிறுவனங்கள் குறித்த இந்துமதச் சட்டங்கள் ஆகியன சாத்திர விதிகளின்படி நிறுவப்பட்டன. இந்தப் பிரச்சனைகள் மட்டுமே ஏன் எடுத்துக்கொள்ளப்பட்டன? மற்றப் பிரச்சனைகள் ஏன் எடுத்துக்கொள்ளப்படவில்லை? இதற்கு **டங்கன் டெர்ரீனை** மேற்கோள் காட்டுவோம். ''கேசுடிங்கும் ,அவர் கூட்டாளிகளும் அன்றைய பிரிட்டன் நாட்டு முறைப்படி (இங்கும்) சட்டத் தலைப்புகளை முன்திட்டமிட்டே தொகுத்தனர்.''

ஐரோப்பிய திருமணச் சட்டங்கள் பைபிளின் அடிப்படையில் அமைந்திருப்பதுபோல, பல்வேறு வகுப்புகளின் தனிச்சட்டங்கள் அடிப்படையான சில மதக்கொள்கைகளின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டுமென அவர்கள் அனுமானித்தனர்.

''திருமணம், மணவிலக்கு குறித்த அனைத்துப் பிரச்சனைகளும், மத நம்பிக்கை குறித்த அனைத்துப் பிரச்சனைகளும், மத ஒழுங்கு, வழிபாடு பற்றிய அனைத்துப் பிரச்சனைகளும் குடிவிலக்கு இன்னும் இதுபோன்ற பல விசயங்கள் பாதிரியாரின் நீதிமன்ற எல்லைக்குள் முழுக்கவும் அடங்கியிருந்தன. சட்டங்களும் மதச் சட்டங்களாக இருந்தன. இந்துச் சட்டம் குறித்து பண்டிதர்களிடம் ஆலோசனைக் கேட்டு அதன்படி ஆங்கிலோ-இந்திய நீதிபதிகள் செயல்பட்டனர். மற்ற பண்டிதர்களின் கருத்துக்களோடு இவை ஒத்துப் போகின்றனவா என்பதைப் பற்றி இவர்கள் கவலைப்படவே இல்லை. மன்னனின் நீதிமன்ற முறை அல்லது பழைய வழக்கு மன்றங்களின் நடைமுறைகளையே இவர்கள் பின்பற்றினார்கள். பார்ப்பனர் என்றாலே மதக்குருக்கள்தான்

என்ற திரு. வில்லியம் சோன்ஸின் தவறான நடைமுறையில் ஒரு பகுதியே இது. ஒரு சில பார்ப்பனர்கள் மட்டுமே மதக்குருக்களாக இருக்கிறார்கள். பார்ப்பனரல்லாதவர்களும் மதக் குருக்களாக இருக்கின்றனர். அதே போலவே மதக்குருக்கள் அனைவரும் அதிகாரப்பூர்வமான மதக் குருக்களல்ல''[2]

இந்தியாவின் பல்வேறுபட்ட வகுப்புகளுக்குமான ஒரு பொது சட்டத் தொகுப்போ அல்லது ஒரு சீரான சட்டத்தொகுப்போ இல்லை, அல்லது சீரான சட்டத்தை அங்கீகரிக்கக்கூடிய ஒரு இந்துப் போப்போ இங்கு இல்லை, நாடு முழுக்க ஆணை செலுத்தும் சங்கராச்சியார் ஒருவருமில்லை. ஆனால் இவை எல்லாம் ஆங்கிலேயரின் முயற்சிகளை தடுத்துவிடவில்லை.

வட்டார மரபுகளை அல்லது சாதி மரபுகளை திரட்டுவதற்கு ஆங்கிலேயர்கள் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவ்விசயத்தில் இவர்கள் செய்த மிகப்பெரும் தவறு இதுவே. இதன் விளைவு பல்வேறு நீதிமன்றங்களில் பண்டிதர்கள் வெளியிட்ட கருத்துக்களில் அல்லது அறிக்கைகளில் பெருத்த முரண்பாடுகள் காணப்பட்டன. சில பண்டிதர்கள் ஒரே பிரச்சனையில் வேறுபட்ட கருத்துக்களை சொல்வது அடிக்கடி நடைபெற்றது. இந்திய சட்ட முறையைப்பற்றிய ஒரு தெளிவான புரிதலை அடையும் நோக்கோடு கிழக்கிந்திய வணிகக்கழகம் தன் சொந்த வேலைகளுக்காகப் பண்டிதர்களுக்கு பயிற்சி தரத் தொடங்கியது. சாத்திரக் கல்வியை ஊக்குவித்தது. இதற்காக பனாரஸ், கல்கத்தா ஆகிய இடங்களில் சமஸ்கிருத கல்லூரிகளை நிறுவியது. இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில் இந்த முயற்சி தொடங்கப்பட்டதிலிருந்து வணிகக் கழகம் ஆதரித்த சாத்திரக் கல்வி ஒரு தெளிவான கிழக்கிந்திய சார்பைக் கொண்டிருந்தது. இங்கிருந்த மதப் பண்டிதர்கள் பெரும்பாலும் பனாரஸ், மிதிலா அல்லது

வங்காளச் சிந்தனை முறைகளின் அடிப்படையிலேயே சட்டங்களுக்கு விளக்கம் தந்தனர். தென்னிந்தியச் சிந்தனை முறைகள் இந்த விசயங்களில் இடம் பெறவே யில்லை.

1772இல் கேசுடிங் அவர்கள் இந்துச் சட்டத்தைப்புரிந்து கொள்ளும் நோக்கத்திற்காக 'மதப் பண்டிதர்களைக் கொண்ட ஒரு குழு'வை அமைத்தார். (அனைவரையும் கட்டுப்படுத்தும்) ஒரு அதிகாரம் கொண்ட சமய சாத்திர புத்தகத்தை உருவாக்குவதே இக்குழுவின் பணியாகும். இப்பண்டிதர்கள் குழு இந்த விசயத்தில் தன் ஆங்கில எசமானர்கள் அதிகாரப்படியே நடந்து கொண்டனர். நீதி மன்றங்களின் நன்மைக்காக மரபுச் சட்டங்களை விளக்க இந்த சமஸ்கிருத பண்டிதர்களைப் பயன்படுத்திக் கொண்டதனால் இது தவிர்க்க இயலாமல் ஆங்கிலோ-பார்ப்பனிய சார்பைக் கொண்டதாக ஆகிவிட்டது இந்தச் சாத்திரப் புத்தகம் பாரசீக மொழியில் மொழி யாக்கம் செய்யப்பட்டு, பின் அதிலிருந்து ஆங்கிலத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. 1775 மார்ச் மாதம் இப் புத்தகம் உருவான கலாச்சாரப் பின்னணி குறித்த ஒரு முன்னுரையோடு இப்புத்தகத்தை இலண்டனுக்கு கேசுடிங் அனுப்பி வைத்தார். 1776இல் 'மதப் பண்டி தர்களின் ஆணைகள்'[3] என்ற தலைப்பின் கீழ் இப் புத்தகம் அச்சானது. அனைத்து மட்ட நீதிபதிகளும் இந்துச் சட்டத்தை தொகுக்கச் செய்த ஒரு தீவிரமான முயற்சி என இதை அழைக்க முடியும். கடன், வாரிசு ரிமை, சிவில் சட்ட நடைமுறைகள், சேமிப்பு, அன்னியர் சொத்தை விற்பது, தொழில் கூட்டு, நன்கொடை, அடிமைமுறை, எசமான்-அடிமை, வாடகை, கூலி, நில விளைச்சலில் பங்கு, பயிர் சேதத்திற்கான தண்டனை, அவதூறு, தாக்குதல், திருட்டு, வன்முறை, கலப்படம், பெண்களின் வேலை முறைகள் ஆகியன இந்தப் புத்தகத் தில் அடங்கியுள்ள தலைப்புகள் ஆகும். பல முரண்பட்ட

கருத்துக்கள் வெளியாவதை இந்தச் சட்டத் தொகுப்பி னால் நிறுத்திவிட முடியவில்லை. ஆங்கிலேயர்கள் மதப் பண்டிதர்கள் மீது அவநம்பிக்கைகொள்வது அதிகரிக்கத் தொடங்கியது. இந்தப் பண்டிதர்கள் நீதிமன்றங்களை தவறாக வழி நடத்தினார்கள். அல்லது தங்கள் சொந்த சாதி நலன்களுக்குச் சாதகமாக நடந்துகொள்கிறார்கள் என்று ஆங்கிலேயர்கள் கருதினர். எந்த ஒரு சாத்திரப் பின்னணியும் இல்லாத பெரும் எண்ணிக்கையான மரபுப் பழக்க வழக்கங்களை கையாளுவதில் இவர்கள் பொறுமை யிழந்து வந்தனர். இம்மாதிரியான குழப்பங்களினாலும் ஊழல்களினாலும் **திரு. வில்லியம் சோன்ஸ்** ஒரு மிகத் தெளிவான இந்துச் சட்ட தொகுப்புக்கு முயற்சி செய் தார். இந்தியாவில் பணியாற்றிவரும் ஐரோப்பிய நீதிபதி களின் பயன்பாட்டுக்காக ''ஜெயஸ்டின் கார்பஸ் சூரின்'' என்பதற்கு இணையாக ஒரு இந்துச் சட்ட தொகுப்பிற்கு முயற்சி செய்தார். ''ஆங்கிலேயர்கள் நிர்வாகம் செய்வ தற்குத் தேவையான ஒரு சாத்திர சட்டம் இனிமேல் தான் கண்டுபிடிக்கவேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந் தார்.'' பண்டிதர்களை நம்பியிருப்பதிலிருந்து ஆங்கிலே யர்களை விடுவிக்கவேண்டுமென்பதில் அவர் உறுதியாய் இருந்தார். **வில்லியம் சோன்ஸ்** அவர்களின் வார்த்தைகளி லேயே மேற்கோள் காட்டலாம். ''இந்துச் சட்டத்தை மனம்போன போக்கில் கையாளுகின்ற பண்டிதர்களின் தயவில் (ஆங்கிலேயர்கள்) இருப்பதை இனிமேலும் என்னால் தாங்க இயலாது. தயார் நிலையில் வைக்கப் பட்ட ஒரு இந்துச் சட்டம் கிடைக்கவில்லையெனில் அதனை பகுத்தறிவு அடிப்படையில் உருவாக்கிக்கொள்ள வேண்டும்''[4]

பண்டிதர்களின் துணையோடு **சோன்ஸ்** தயாரித்த சட்டத் தொகுப்பானது வங்காளச் சிந்தனை முறையின் ஆழமான சாயலைப் பெற்றிருந்தது. பின் அவர் மனு சுமிருதியை மொழியாக்கம் செய்தார். இது ஆங்கிலே

யர்கள் வருகைக்கு முந்தைய இந்தியச் சட்ட நிர்வாகத்தில் இந்த மனுசுமிருதி விளைவித்த பாதிப்புகளைக் காட்டிலும் மேற்கத்திய நாடுகளில் நடைபெற்ற கீழையியல் ஆய்வுகளின் மீது இந்தப் புத்தகம் ஆழமான பாதிப்புகளைச் செலுத்தியது. மீண்டும், மீண்டும் தோல்விகள் ஏற்பட்ட போதிலும் ஒரு இந்து சாஸ்திரியால் எழுதப் பட்ட ஒரு உண்மையான இந்துச் சட்ட புத்தகத்திற்கான தங்கள் தேடலை ஆங்கிலேயர் கைவிடத் தயாராக இல்லை. **திரு. சோன்ஸ்** அவர்களுக்குப் பிறகு **திரு. கோல்புருக்கு** என்பவர் இம் மாதிரியான ஒரு முயற்சி செய்தார்[5]. சில ஆண்டுகளுக்குள் **திரு. கோல்புருக்** அவர்கள் **மிடக்சாரா** (Mitakshara), **டயாபகா** (Dayabhaga) என்ற சாத்திர நூற்களை ஆங்கிலத்திற்கு மொழியாக்கம் செய்தார்[6] இந்த இரண்டையும் தான் நீதி மன்றங்கள் அடிக்கடி மேற்கோள் காட்டுவதோடு அதைச் சார்ந்தும் இருந்தன. இந்த இடைவேளையில் ஆங்கிலேயர்கள் தேவைகளை தீர்க்கபல்வேறு சமஸ்கிருத புலமையாளர்கள் சட்டப் புத்தக வேலையில் ஈடுபட்டனர் ஆயினும் உண்மையான சமற்கிருத புத்தகங்களை காட்டிலும் சாத்திரங்கள், சட்டங்கள் குறித்து ஐரோப்பிய ஆசிரியர்கள் எழுதிய புத்தகங்களே நம்பிக்கைக்கும் முன்னுரிமைக்கும் உரியனவாக இருந்து வந்தன.

சாத்திரக் கட்டளைகள்தான் இந்துக்களை வழி நடத்துகின்றன என்ற மாயை இவ்வாறாகத்தான் வளர்க்கப்பட்டது. ஆங்கில நீதிமன்றங்களின் அதிகாரத்தை பின்னணியாகக்கொண்ட இந்தியச் சட்டங்கள் நடைமுறை மரபு வழக்கங்களில் மாறுதல்களைச் செய்ய ஆரம்பித்தன. ஆங்கிலேயரின் சட்டங்கள் நடைமுறை மரபு வழக்கங்களுக்குப் பாதுகாப்புகள் அளித்த போதிலும் இம் முயற்சிகள் நடைபெற்றன. ஆங்கிலேயர்கள் கட்டளைகளால் உருவாக்கப்பட்ட இந்துக்களின் தனிச்சட்டம் என்று அழைக்கப்படுகின்ற ஆங்கிலோ-சாத்திர சட்டத்

தோடு நடைமுறை மரபு வழக்கங்கள் போராடவேண்டிய கட்டாயம் அன்றிலிருந்தே தொடங்கிவிட்டது. சாத்திர விதிகளை எழுத்துக்கு எழுத்து அப்படியே பிடிவாதமாகப் பின்பற்றுவது அவற்றின் உண்மையான நோக்கங்களை தவறாகப் புரிந்து கொள்வது ஆகிய காரணங்களினால் உருவான ஆங்கிலோ-இந்துச்சட்டங்கள் சாத்திரங்களை விடவும் கடும் மோசமான இறுக்கத்தைக் கொண்டிருந்தன. சாத்திரங்களுக்கு ஒரு தெளிவான வடிவத்தைத் தரும் தங்களது முயற்சிகளினால் அவற்றை ஒரே சீரான பொதுத் தன்மைக்கு ஆங்கிலேயர்கள் தள்ளிவிட்டனர்.

இந்த கெட்டித் தட்டிப்போன ஆங்கிலோ-இந்துச் சட்டங்களைத்தான் குடியரசின் முதல் பத்தாண்டுகளின் போது இந்தியப் பாராளுமன்றம் சீர்திருத்த தீர்மானித்தது. ஆங்கிலச் சட்டங்களில் பயிற்சி பெற்ற வழக்குரைஞர்கள் அல்லது ஆங்கிலத்தில் சட்டம் பயின்ற நேரு, அம்பேத்கர் போன்றவர்கள்தான் அன்று காங்கிரஸ் கட்சியில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இவர்கள் வெறுமனே ஆங்கிலம் பயின்ற கனவான்கள் மட்டுமல்ல ஆங்கிலச் சட்டம் பயின்றவர்களும்கூட. ஆகவே அனைத்து காலனிய சார்பு நிலைகளுக்கும் ஆளானவர்கள், இந்தியச் சமூகத்தின் செயல்பாடு குறித்தும் இச்சமூகத்தை 'நவீனப்படுத்தத்' தேவையான மாற்றங்கள் குறித்தும் காலனிய சார்பு நிலையைக் கொண்டிருந்தார்கள். திருத்தப்பட்ட இந்துச் சட்டம் காலனிய ஆட்சியின்போது தொடங்கப்பட்ட சீர்திருத்தங்களையே ஒத்திருந்தது என்பதற்கு இதுவே மிகப்பெரும் காரணி ஆகும்.

1940களில் இந்துச் சட்ட முனவரைவு வரையப்பட்டது. இந்தச் சட்டத்திருத்த முயற்சிகளை முறியடிக்க முயன்ற பல்வேறு முயற்சிகளை உள்ளடக்கிய ஒரு நீண்ட ஏற்ற இறக்கமான காலங்களுக்குப்பின் ஒரு இந்துச்

சட்டத் தொகுப்பு 1947இல் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டது. 1948இல் அன்றைய சட்ட அமைச்சரான டாக்டர் அம்பேத்கர் தலைமையின் கீழான குழுவின் பார்வைக்கு இது அனுப்பப்பட்டது. பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இக்குழு பெரும் எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டியிருந்தது. மாதிரிக்கு 1945இல் இந்தக் குழுமுன் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துப்பூர்வ அறிக்கைகளில் மிகப் பெரும்பான்மையினர் சட்டத் தொகுப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். சட்டத் தொகுப்புக்கு ஆதரவான ஒரு சிலரும்கூட பெயரளவிற்கே தங்களின் ஆதரவைத் தந்தனர். காங்கிரஸ் கட்சியே இப்பிரச்சினையில் மிகக் கூர்மையாக பிரிந்து நின்றது. இந்த எதிர்ப்பின் காரணமாக இச்சட்டத் தொகுப்பை நான்கு பகுதிகளாகப் பிரித்து அதை கட்டம் கட்டமாக நிறைவேற்றுவது என அரசாங்கம் தீர்மானித்தது. இந்தப் போக்கின் காரணமாக சட்ட முயற்சிகள் கணிசமான மாற்றத்திற்கு உள்ளாகின. 1950களின் நடுவில் கடைசி நான்கு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டபோது அவை உண்மையான சட்ட முன்வரைவிலிருந்து மாறுபட்டு இருந்தன. அதோடு மட்டுமில்லை. அம்பேத்கர் தலைமையிலான குழு தொகுத்த சட்ட வடிவிலிருந்தும் அது மாறுபட்டு இருந்தது.

இச்சட்டத் தொகுப்பின் ஆதரவாளர்கள் பெரிதும் நீர்த்துப்போன இச்சட்டங்களைத்தான் புரட்சிகரமானவைகள் என தங்கள் மிகைப்படுத்தப்பட்ட சொல் அலங்காரங்களின் மூலம் பாராளுமன்றத்தில் வருணித்தனர். இந்து சட்டம் பற்றி பாராளுமன்றந்தில் விவாதிக்கும் போதெல்லாம் அதற்கு ஆதரவான சொல்லலங்காரங்கள் அடிப்படையில் மாற்றமில்லாமல் தொடர்ந்து ஒன்று போலவே இருந்து வருகின்றது. விவாதிக்கப்படும் உண்மையான சட்டங்களுக்கும் இந்த சொல் அலங்காரங்களுக்கும் தொடர்பே இருப்பதில்லை. செயற்கை

ஆரவாரம், சுயவெறுப்பு ஆகிய இரண்டின் விசித்திர கலவையைத்தான் இந்த சொல்லலங்காரக்காரர்கள் தன் சொந்த கருத்துக்களாக முன் வைத்தனர். இந்திய சமூகம் பற்றி ஆங்கில ஆட்சியாளர்கள் கொண்டிருந்த கருத்துக்களையே இந்த சொல் அலங்காரங்கள் ஒப்புவிக்கின்றன.

1948இல் உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த அரசியல் நிர்ணய சபை உறுப்பினரான **பி. வி. கேசுகர்** என்பவர் அம்பேத்கரின் இந்துச் சட்டத்தை பற்றி பின்வருமாறு வியந்து கூறுகிறார்: ''கடந்த ஆயிரம் ஆண்டுகளாக மாற்றமில்லாமல் தேங்கிப் போயிருந்த இந்துச் சமூகத்தைப் போன்ற ஒரு சமூகத்தை அடிப்படையிலேயே மாற்றுகின்ற இம்மாதிரியான மிகத் தீவிரமான மிகப் புரட்சிகரமான ஒரு சட்டம் வேறொன்றும் இருக்க முடியாது''[7].

1956இல் இந்து வாரிசுரிமைச் சட்டம் மிகவும் மாற்றப் பட்ட வடிவத்தில் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் மிகத் தீவிரமான ஆதரவாளர்களும்கூட இச்சட்டம் பெண்களை ஏமாற்றுகிறது என்றே உணர்ந்தனர். இந்தச் சூழ்நிலையிலும் கூட இச்சட்டத்தை ஆதரித்து உயர் நவிற்சியான சொல்லலங்காரம் தொடர்ந்தது. **திரு. எஸ். எஸ். மூர்** அவர்களையே மேற்கோளாகக் காட்டுவோம்.

''சாதி அமைப்பை உருவாக்கி அதனைத் தொடரச் செய்த நமது கடந்தகாலம், வெளிப்படையான அடிமை முறையில் சூத்திரர்களை இருக்கவைத்த நமது கடந்த காலம் இன்னும் நம்மை அழுத்திக்கொண்டிருக்கின்றது. ஆனால் நாம் நமது பண்டைய விலங்குகளை உடைத்தெறிந்து சமவுடைமை நிலவும் சமூக அமைப்பை நோக்கி, புதிய எல்லைகளை நோக்கி தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் முன்னேற முயன்று வருகிறோம்'[8].

இந்த வெற்று ஆரவாரப் பேச்சுக்கள் இரண்டு வழிகளில் பணியாற்றுகின்றன. முதலாவதாக, இந்தப் புதிய சட்டங்களின் கீழ் இந்தியப் பெண்கள் முழுக்கச் சம தகுதியில்இருக்கின்றனர் என்ற மாயை கட்டமைக்கப்படுகிறது. கிட்டப் பார்வையின் காரணமாக அல்லது இரட்டைப் பார்வையின் காரணமாக பெண்களுக்கு குறைவான உரிமைகளைக் கொடுத்துவிட்டு சமதகுதி கொடுத்ததாக ஒரே சமயத்தில் உரிமை கொண்டாடிக்கொள்ளலாம். **திரு. முல்லாவின்** 'இந்துச் சட்டத்தின் அடிப்படைகள்' என்ற புலமை வாய்ந்த ஒரு புத்தகத்தின் முன்னுரையில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது: ''திருமணம், வாரிசுரிமை, தத்தெடுத்தல் ஆகிய பிரச்சினைகளில் ஆண் / பெண் உரிமைகளில் காணப்படும் வேறுபாடுகள் அனைத்தும் இந்த சட்டத்தில் மாற்றப்பட்டு இருப்பதானது இதன் முதன்மையான அம்சமாகும்''.[9] மேலும் தொடருகிறது:

''ஆண் பெண் வாரிசுகள் எந்த வேறுபாடும் இன்றி இப்பொழுது சமமாகப் பார்க்கப்படுகிறார்கள்'' [10].

வெளிப்படையான ஏற்றத் தாழ்வுகளை அதிலும் குறிப்பாக வாரிசுரிமை, தத்தெடுத்தல் ஆகிய பிரச்சினைகளில் ஏற்றத் தாழ்வுகளை கொண்டுள்ள புத்தகத்தின் முன்னுரையில்தான் மேற்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

சாதாரணமக்கள் கூட திருத்தப்பட்ட இச்சட்டங்களை இலட்சியங்களாக கருதுவதோடுஅனைத்து அநீதிகளையும் நீக்கிவிடும் ஒரு மந்திரக் கோலாகவும் இதனைக் கருதுகின்றனர். 1956 மே10ஆம் தேதிய 'இந்துஸ்தான் டைம்ஸ்' நாளிதழில் ஜி. பி. சிப்பியின் 'திருமதி புகா' என்ற ஒரு திரைப்படத்திற்கு ஒரு விளம்பரம் வந்திருந்தது. அது பின்வருமாறு: ''சமூகச் சீர்திருத்த வரலாற்றில் இது ஒரு பொன் எழுத்தாகும். இந்து வாரிசுரிமைச் சட்டத்தை

பாராளுமன்றம் நிறைவேற்ற இருக்கிறது. இதனால் காலம்காலமாக பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி அகற்றப்பட்டுவிட்டது. இந்த லட்சியங்களை உயர்த்திப் பிடிக்கும் புரட்சி சமூகநாடகத்தில், புதிய சோதனைகளை சுடர்விட செய்யும் ஒரு திரைப்படம் இது''.

இந்தத் தன்னிறைவு உணர்வுக்கு எந்த நோக்கமும் இல்லை அல்லது இது ஒரு வெற்று ஆரவாரம்தான் என கருதிவிடமுடியாது. பெண்களுக்குச் சமத்துவம் என்ற விரும்பத்தகுந்த லட்சியத்திற்கு இந்திய ஆட்சிமுறை உறுதியளித்திருக்கிறது என்ற கருத்தை நிலைநிறுத்த இந்த ஆரவாரம் உதவும். இந்துச் சட்டத்தில் திருத்தம் செய்வதை எதிர்த்த அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்கள் காங்கிரஸாயினும் சரி அல்லது இந்து மகாசபை போன்ற பிற கட்சிகளை சார்ந்தவர்களாயினும் சரி பெண்களுக்கு நீதி வழங்குவதை எதிர்க்கும் நோக்கம் தங்களுக்குக் கிடையாது என தங்கள் பேச்சின் தொடக்கவுரையிலும், முடிவுரையிலும் தெளிவாகக் கூறியிருப்பதை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். பெண்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து குறைந்தளவிலாவது ஒத்த கருத்துக்கள் உருவாகியிருப்பது ஒரு பயனுள்ள வெற்றிதான். மிகுந்த பிரச்சினைக்குள்ளான சட்டமான இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956இல் இறுதியாக விவாதிக்கப்பட்டபோது சட்ட அமைச்சர் திரு. **படாஸ்கர்** இதன்மீது கருத்தை தெரிவித்தார். ''சில உணர்ச்சிகரமான உரைகள் இடம் பெற்ற போதிலும், ஏனைய கருத்து மாறுபாடுகள் இருப்பினும் பெண்களுக்கு நீதி வேண்டும் என்பதற்குச் சார்பாக இந்த அவையின் அனைத்து உறுப்பினர்களும் இருப்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது''.[11]

இருப்பினும் வெற்று ஆரவாரத்திற்கும், எதார்த்தத்திற்கும் இடையேயிருந்த பெரும் இடைவெளி கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவேயில்லை. இதன் எதிர்ப்பா

ளர்கள் மட்டுமல்ல, இதன் ஆதரவாளர்களில் ஒரு சிலரும் கூட இச்சட்டம் சமத்துவத்தைத் தருவதாக இல்லை யென்று தாங்கள் உணர்வதாகக் கோடிட்டுக் காட்டினார் கள். 1954இல் சட்ட அமைச்சர் **திரு. பிஸ்வஸ்** அவர்கள் 'தாமதம் முழுக்க நியாயப்படுத்தப்படுகிறது. காரணம் கடந்த ஆண்டுகளில் இந்த சட்டம் எதிர்கொண்ட எதிர்ப் புகள் மடிந்து போய்விட்டன,'' எனக் கூறினார்.[12] இதற்குப் பதிலாக திரு **உக்கம்சிங்** அவர்கள் பின்வருமாறு கூறினார்: ''பொது மக்கள் கருத்து மாறவில்லை. மாறாக, அரசாங்கத்தின் அணுகுமுறை மாறியிருக்கிறது. இது உண்மையான சட்ட முன் வரைவு அல்ல. நடை முறையில் உண்மையான சட்ட முன் வரைவு அரசாங்கத் தால் கைவிடப்பட்டுவிட்டது''.[13]

பிறகு ஏன் இந்துச் சட்டத் தொகுப்பிற்கும், சீரான பொதுச்சட்டத்திற்கும் அழுத்தம் தரப்படுகிறது. பொது வாக ஆங்கிலம் படித்த மேட்டுக்குடியினர் இடையிலும் குறிப்பாக சமூகச் சீர்திருத்தவாதிகள் இடையிலும் சீரான பொதுச்சட்டம் தேசிய ஒற்றுமைக்கு ஒரு கருவி என்ற ஒரு மோகம் நிலவி வருகிறது. பன்முகக் கடவுள் வழிபாட்டின் மீது ஆங்கிலேயர் வெறுப்புக் கொண்டிருந் தனர். ஒரே கடவுள் வழிபாட்டை இதைக்காட்டிலும் உயர்ந்ததாக ஆங்கிலேயர் சித்தரித்தனர். இந்த மனநிலை யையே சீர்திருத்தவாதிகளும் கொண்டிருந்தனர். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நடைமுறைகளிலிருந்த இந்துச் சட்டத்தின் பன்முகத்தன்மை மீதும் அதன் பன்முக வேறுபாடுகள் மீதும் சீர்திருத்தவாதிகள் வெறுப்பையே காட்டி வந்தனர். இந்துச்சட்டம் என்ற மர்மமான மூங்கில் காட்டைவெட்டி சீர்திருத்தும் நவீன மரச்சிற்பிகளாக சீர்திருத்தவாதிகள் தங்களை உணர்ந்து கொண்டார்கள். இவர்கள் உருவகமாக குறிப்பிட்டுள்ள மரங்கள் மண்களில் ஆழமாக வேரூன்றியிருப்பவை என்பது சொல்லாமலேயே விளங்கும். **பி.வி கேஸ்கர்** அவர்

களின் கருத்தே ஆர்வவெறி கொண்ட சீர்திருத்தவாதிகள் பெரும்பாலோர் இடையே நிலவி வருகிறது.

''தற்போதைய இந்துச் சட்டம் புதிரானதாக இருக்கிறது. தெராய் அல்லது சுந்தரவனக்காடுகளைப் போல அது இருக்கிறது. அனைத்து வகையான பழக்கவழக்கங்களும் மரபுகளும் இதில் இருக்கின்றன. இந்தப் புதிரான மரபுகளையும் எதிர் மரபுகளையும் முடிவுக்குக் கொண்டு வரவேண்டிய நேரம் வந்துவிட்டது. நாம் சட்டத்தை முறைப்படுத்தி வலுப்படுத்த வேண்டும்''[14]

மீண்டும் மீண்டும் ஒரே சீரான பொதுச் சட்டம் தேவை என்ற வாதத்தையே சீர்திருத்தவாதிகள் முன் வைக்கிறார்கள். ஏன் தேவை என்பதை விளக்குவதே இல்லை. சீரான பொதுத் தொகுப்பு நல்லது இதில் கேள்விக்கு இடமில்லை எனச் சாதாரணமாக கருதி விடுகின்றனர். திரு.எஸ்.சி.சா. அவர்களின் அறிக்கை அதற்கு ஒரு வகை மாதிரியாகும். ''இடத்திற்கு இடம், மாகாணத்திற்கு மாகாணம் வேறுபாடுகளைக் கொண்ட வட்டாரப் பழக்க வழக்கங்களையும், குடும்பப் பழக்க வழக்கங்களையும் உள்ளடக்கிய இந்துச்சட்டமே நம்மிடம் இருக்கிறது. குறைந்த பட்சம் இந்துச் சமூகத்திற்காவது முதன்முறையாக ஒரு சீரான பொதுச் சட்டத்தொகுப்பு கிடைத்திருப்பது பெரிய விசயமாகும்.''[15]

ஒரே சீரான பொதுச் சட்டத்தொகுப்பு ஒரு நல்ல விசயம் என்பதை கேள்விக்குள்ளாக்கிய அனைவரையும் பிற்போக்காளர்கள் என நேரு தலைமையிலான 'முற்போக்காளர்கள்' முத்திரைக் குத்தி நிராகரித்தனர். சட்டத்தொகுப்பிற்கு எதிரான எதிர்ப்புகளை கவனமாக ஆராய்ந்தால் அது ஒரு பலதரப்பட்ட விரிவான கலவையாக இருப்பதைக் காணலாம். இந்து மரபுச்சட்டங்களை முட்டாள்தனமாக ஆதரிப்பது ஒரு புறம், இந்தப்

பன்முகத்தன்மையை காப்பாற்ற வேண்டும் என்ற அறிவுப் பூர்வமான நிலைபாடு மறுபுறம். இன்னொருபுறம், வகுப்பு அடிப்படையிலான சட்டங்களில் காணப்பட்ட பெரும் நடைமுறைத் தன்மையை ஏற்றுக்கொள்வது, மக்களுக்கு மாற்று வாய்ப்புகளை அளிப்பது என்ற நிலைபாடுகளும் இதில் அடங்கும். பன்முகத்தன்மை என்பதாலேயே அது ஒரு தீமையாக இருந்துவிடாது. அதற்கும் மேலாக இச் சட்டம் ஒரு அரசாங்கத்தின் அல்லது வேறு ஒரு அதிகாரத் தின் மூலம் மேலிருந்து திணிக்கப்பட்டது அல்ல. மாறாக, மக்களின் கருத்தொற்றுமை அடிப்படையில் வளர்ந்தது. அதுவே இந்த அம்சம் பாதுகாக்கப்பட வேண்டும். இவ் வாறாக சிலர் வாதிட்டனர். பீகாரைச்சேர்ந்த காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான திரு **கமேஸ்வர்சிங்** இம்மாதிரியான ஒரு வாதத்தை முன்வைத்தார். ஆனால் அதனால் எந்தப்பயனும் விளையவில்லை. அவரின் கருத்து பின்வருமாறு:

''நாட்டின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் பன்முகத்தன்மையானது ஒரு உண்மையை நிருபிக்கிறது. இந்துக்களின் தனிச்சட்டங்கள் எந்த ஒரு மைய அரசியல் அதிகாரத்தினாலும் திணிக்கப்படவில்லை. மாறாக, மக்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டதாகும் என்ற உண்மையே அது. பன்முகத்தன்மையை உடனடியாக ஒழிக்கவேண்டிய ஒரு தீமையென நாம் பார்க்கக் கூடாது'' [16]

மக்களின் மதச் செயல்பாடுகளிலும், தனி நபர் வாழ்க்கையினுள்ளும், அரசாங்கம் எவ்வளவு எல்லை வரை தலையிட வேண்டும் என்ற ஒரு கேள்வியும் ஒரு கட்டத்தில் எழுந்தது. மக்களின் வாழ்க்கையை வழி நடத்தும் உரிமை அரசாங்கத்திற்கு உண்டு என்ற மதிமயக் கத்திற்கு உள்ளானவர்களில் அம்பேத்கரும் ஒருவர். அரசாங்கம் தலையிடாத துறை எதுவுமே இருக்கமுடி

யாது என அம்பேத்கர் அறிவித்திருந்தார். ''இந்நாட்டில் பண்பாடு, மரபுகள் பற்றி மக்கள் பேசி வருகிறார்கள். நல்லது, மரபுகள் ஏன் வளர்ந்தன? நமது நாட்டைப் பொறுத்தவரை, பாராளுமன்றம் என்ற ஒன்று இல்லா ததே இதற்குக் காரணமாயிருக்கும் என்பதே இதற்குப் பதிலாக இருக்கும் என நான் நினைக்கிறேன்''[17]

இங்கிலாந்தில் பாராளுமன்றம் இருந்த போதிலும் (சட்டங்களுக்கு சமமாக) மரபு முறைகள் மதிக்கப்படு வதைப்பற்றிய வியப்புகளை அவர் நிராகரித்துவிட்டு தொடர்ந்து கூறுகிறார்:

''பாராளுமன்றம் இல்லாத சமயத்தில் தங்கள் வாழ்க் கையை ஒழுங்குபடுத்திக்கொள்ள சொந்த மரபுகளை உருவாக்குவது தவிர அவர்களுக்கு வேறு என்ன மாற்று வழி இருந்தது? ஆனால் நமக்கு பாராளுமன்றம் என்ற ஒன்று இருக்கிறது. இதன் வேலை சட்டங்களை உருவாக்கு வது; பாராளுமன்ற அதிகாரத்திற்கு அப்பால் இருக்கும் மக்கள் தங்கள் மரபுச் சட்டங்களை உருவாக்கிக்கொள்வ தன் மூலம் பாராளுமன்றத்திற்கு இணையான அதிகார முறையை நாம் அனுமதிப்பதா என்ற பிரச்சனையை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.''[18]

மக்களிடையே சமூகக் கருத்தொற்றுமையை உருவாக் காமல் அரசாங்கத்தை ஒரு கருவியாக்கி சமூகச் சீர்திருத் தத்தை மக்கள் மீது திணிக்கும் இந்தப் புரிதலானது முக்கியமாக காலனிய அரசு எந்திரத்தின் செயல்பாடு களிலும் அதன் கொள்கைகளிலும் இருந்தே பெறப்பட்ட தாகும். ஆங்கிலம் கற்ற இந்திய மேட்டுக்குடியினர் காலனிய அரசின் கொள்கைகளை விசுவாசமாக உள் வாங்கிக்கொண்டனர். சமூகச் சீர்திருத்தத்தை செயல் படுத்தும் மிக முற்போக்கான கருவியாக அரசாங்கத்தை முன்னிறுத்தினார்கள். ஆனால் பெரும்பாலான சட்டங் கள் (சாரதா சட்டம் போன்றவை) காகிதப்புலிகளாவே

இருக்கின்றன. மக்கள் இச்சட்டங்கள் பற்றி அறிந்திருக்கவே இல்லை என்பதை இவர்கள் உணரத் தவறிவிட்டனர். இந்தியச் சமூகத்தின் மீது வெறுப்பு, அதனைப் பிற்போக்கான நாகரிகமற்ற சீர்கேடான ஒரு சமூகமாக முத்திரைக் குத்துவது ஆகியன பொதுவாக நீக்கமற பரவியிருக்கும் ஒரு கருத்ததாகும். **அம்பேத்கர்** பயன்படுத்தும் சொற்களைக் கவனியுங்கள்.

''இந்துச் சமூகம் போன்ற சில சமூகங்களுக்கு சில சீர்திருத்தங்கள் மிக அவசியமான ஒன்றாகத் தேவைப்படுகின்றது. குப்பைத் தொட்டியினை சுத்தம் செய்வது போல''[19]

மரபுச்சட்டங்கள் அராஜகமானவை, இங்கு பாராளுமன்றம் இல்லாததால் இவை உருவாகின என்ற வாதத்தை முன் வைத்த **அம்பேத்கர்** அவர்கள் கீழையியல் வாதிகளிடமிருந்து பெறப்பட்ட இந்திய சமூகம் ஒரு தேங்கிய சமூகம் என்ற சுய முரண் கொண்ட வாதத்தையும் முன் வைக்கின்றார்:

''இச்சமூகம் ஒரு இயக்கமற்ற சமூகமாகும். கடவுள் அல்லது சுமிருதிகள் தான் சட்டத்தை உருவாக்கவேண்டும். ஆகவே இந்தச் சட்டங்களை மாற்றுவதில் இந்துச சமூகத்திற்கு எந்த உரிமையும் இல்லை என்ற இந்தச் சமூகம் நம்பி வந்தது. இதனால் தான் இந்துச் சமூகத்தில் சட்டங்கள் தலைமுறைத் தலைமுறையாக மாறாமல் இருந்து வந்தன. தங்களின் சமூகப்பொருளாதார சட்ட வாழ்க்கையை உருவாக்குவதில் தங்களுக்குள்ள கடமை பற்றி, தங்கள் சொந்த அதிகாரம் பற்றி, இச்சமூகம் என்றும் ஒத்துக்கொண்டதே இல்லை. முதன் முறையாக இம்மாதிரியான நடவடிக்கைகளுக்கு இந்துச் சமூகத்தை நாம் தூண்டுகிறோம்.''[20]

ஆங்கில ஆட்சியாளர்களிடமிருந்து பெறப்பட்ட சொல்லாட்சிகளே இவை என்பது வெளிப்படையானது. இந்தியச் சமூகம் தேங்கிய ஒன்று. அது மாற்றத்தை எதிர்க்கும் என முத்திரைக் குத்துவது 19ஆம் நூற்றாண்டின் ஆங்கிலேயர்களிடம் பொதுவாக காணப்பட்ட கருத்தாக இருந்தது. ஐரோப்பாவின் ஒரேபடித்தான சமூகங்களுக்குப் பழகிப்போன ஆங்கிலேயர்கள் இந்திய சமூகத்தின் பன்முகத்தன்மையையும் கலாச்சாரத்தையும் பார்த்து திக்குமுக்காடிப் போனார்கள். மையப்படுத்தப்பட்ட அரசாங்கம் என்ற பணியை இது கடினமாக்கியது. ஆகவேதான் அவர்கள் இந்திய சமூகத்தையும் அதன் மரபுகளையும், நடைமுறைகளையும் ஒரே வார்ப்பாக உருவாக்கவும் அவர்களால் புரிந்து கொள்ள முடியாத அனைத்து பன்முகத்தன்மைகளையும் துடைத்தெறியவும் விருப்பம் கொண்டனர். சுதந்திர இந்தியாவின் ஆங்கிலம் கற்ற ஆட்சியாளர்களும் இந்த அணுகுமுறைகளை தங்களுக்கு சொந்தமாக்கிக் கொண்டார்கள். காலனிய அரசாங்க எந்திரத்தையும் அப்படியே சொந்தமாக்கிக் கொண்டார்கள்.

தாங்களே "முதலாவது" சீர்திருத்தவாதிகள் எனத் தகாத உரிமைகோரிய இவர்கள் நேரு அணியினரின் அறியாமையையே நிரூபித்து இருக்கிறார்கள். காலனி ஆட்சிக்கு முந்தைய இந்தியாவில் சட்டங்கள் மாறுதல்களுக்கும் சீர்திருத்தங்களுக்கும் உள்ளாகி இருந்தன என்பதற்குத் தெளிவான ஆதாரங்கள் இருக்கின்றன. வைதீகமான **மிடக்சாரா** சிந்தனை முறையைக் காட்டிலும் ஜிமுத்தவாகனரின் **டயாபகா** முறை அதிகத் தாராளப் போக்குவுடையாதாகவும், சீர்திருத்தப் பட்டதாகவும் இருந்தது. இருப்பினும் **மிடக்சாரா** சிந்தனை முறையும் தேக்கமுற்றதாக இல்லை. அதற்குள் முக்கிய நான்கு சிந்தனை முறைகள் இருந்தன.

இருப்பினும் அன்று நடைமுறையிலிருந்த தாராளப் போக்கு கொண்ட பல்வேறு மரபு முறைகள், இந்துச்

சட்டத் தொகுப்பினால் செரித்துக்கொள்ளப்பட்டன. இன்றளவும்அவை மறுநிர்மாணம் செய்யப்படவேயில்லை. இதற்குச் சில மாதிரிகளை நான் பின்னால் தருகிறேன். மரபு வழக்கங்களின் வளர்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைப்பது என்ற தங்களின் அறிவிக்கப்பட்ட கொள்கையின்படி, இச்சீர்திருத்தவாதிகள் உண்மையில் இந்து மரபின் சாராம்சத்திற்குத்தான் முற்றுப்புள்ளி வைத்தனர். இருப்பினும் தங்கள் சட்டத் தொகுப்பை 'இந்து என்றே பிடிவாதமாக பெயரிட்டழைக்கின்றனர்.

## அத்தியாயம் 2

ரிசிகளால் அதாவது முனிவர்களால் எழுதப்பட்ட நல்லொழுக்க விதிகளின் தொகுப்புதான் சுமிருதிகள் ஆகும். சுமிருதி தொகுப்பாளர் அனைவரும் பழக்க வழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். இந்திய நீதித்துறையின் தந்தைகளே இந்த சுமிருதித் தொகுப்பாளர்கள் என வலியுறுத்திய அதே ஆட்சியாளர்கள்தான் சட்ட கடமைப்பாட்டைக் காட்டிலும் தார்மீக அறநெறி சார்ந்த கடமைப்பாடுகளே முக்கியமானது என இந்து தர்மத்தின் காவலர்கள் கூறினார்கள் என்பதையும் ஒத்துக்கொள்கிறார்கள். இந்துச்சட்டம் பற்றிய முல்லாவின் ஆய்வுப் புத்தகத்திற்கு **நீதிபதி தேசாய்** எழுதியுள்ள அதிகாரப்பூர்வமான முன்னுரையில் பின்வருமாறு சொல்கிறார்:

''பண்டைய இந்தியாவில் இருந்த பெரும்பாலான மரபு வழிச்சட்டங்களை நல்லொழுக்கம், (Morality) என்றே பெயரிட்டு அழைக்கவேண்டும். காரணம் இந்த சட்டங்கள் இறையாண்மை கொண்ட அல்லது ஒரு பேரரசனின் நேரிடையான அல்லது வேறு ஒருவர் மூலமாக விடப்பட்ட ஆணைகள் அல்ல.''[21]

தர்ம சாத்திரங்கள் கறாரான மதசாத்திரங்கள் அல்ல; மதம், ஒழுக்கம், சமூகம், சட்டம் ஆகியன சம்பந்தப்பட்ட பணிகள், கடமைகள் ஆகியவற்றின் தொகுப்பே தர்மம் ஆகும். ஒவ்வொரு மனிதனிடமும் ஒரு சமூகபபங்களிப்பை இந்த ஒழுக்க விதிகள் கோருகின்றன. ஆனால் அனைத்து மனிதர்களுக்குமான ஒரு உலகளாவிய விதிகளை வலியுறுத்த இவை முயற்சித்ததில்லை. நிலையான சட்ட விதிகளைக் காட்டிலும் காலம், சூழ்நிலை, தனிநபர், இடம் ஆகியனவே கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள் என்பதே இதன் பொருள். புதிய மரபுகளை உண்டாக்குகிற அல்லது திருத்துகிற அதிகாரம் பிராதாரியின் கைகளில் மட்டுமே இல்லை. குலம் அல்லது குடும்பத்தின் கைகளிலும் அது இருந்தது. மரபுகள் சக்தி வாய்ந்தவை. புனிதச் சட்டங்களையும் ஒதுக்கி விடும் என நாரதர் சொல்லுகிறார்.[22] தலைமை அதிகாரத்தைக் கொண்டதென ஒளிவட்டம் சூட்டப்பட்டிருக்கும் **மனு சுமிருதி** கூட பின்வருமாறு வலியுறுத்தியுள்ளது. ''ஒரு அரசன் சாதிகளின் சட்டங்களை மாவட்ட சட்டங்களை (கணபதா), தொழில் பட்டறைகளின் சட்டங்களை (சிரினி), குடும்பத்தின் சட்டங்களை (குலம்) ஆய்வு செய்து தனித்தனியாக தீர்க்க வேண்டும்.'' அதுமேலும் கூறுவதாவது: ''இவ்வாறாக, நினைவுக்கெட்டாத காலகட்ட மரபுகளின் மீது சட்டம் குடிகொண்டு இருக்கிறது என்பதைப் புனித முனிகள் புரிந்து கொண்டு நீண்டகாலமாகவே வழக்கிலிருந்து வரும் அனைத்து நல்ல தெய்வீக மரபுகளையும் தழுவிக் கொண்டார்கள்.''[23]

பல்வேறு தலைப்புகளின் கீழ் சட்டத்தை விரிவாக ஆய்வு செய்துள்ள சில சுமிருதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டவிதிகள் கறாரான பொருளில் சட்டவிதிகளாக இல்லை. தற்பொழுது உள்ள சுமிருதிகள் கூட பல்வேறு காலகட்டங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தொகுக்கப்பட்டவையாகும். இதன் விளைவாக இவை

கணிசமான அளவில் ஒன்றுக்கொன்று வேறுபட்டு உள்ளன. ஆனால் தங்கள் சுமிருதிகள் தான் மிகவும் அதிகாரத்துவ விளக்கம் கொண்டவை என்ற முயற்சியில் சுமிருதி தொகுப்பாளர்கள் ஈடுபடவில்லை. மற்றவர்கள் அதிகாரத்தை மறுக்கவோ அல்லது அதற்காக சண்டையிடவோ இல்லை. மரபுகள் ஒன்றையொன்று சவாலுக்கு அழைக்காமல் பல்வேறு மரபுகளும் சமமாக நடைமுறையில் இணக்கமாக இருக்கவேண்டும் என்பதை ஒத்துக் கொண்டார்கள். சுமிருதிகள், சட்டமாக இயற்றுவதன் மூலம் கிடைத்த உண்மையான சட்ட நூல்கள் அல்ல அல்லது அரசாங்கத்தால் இயற்றப்பட்டவையும் அல்ல. எந்த ஒரு உச்ச அதிகாரத்தாலும் இவை திணிக்கப்படவில்லை. சுமிருதிகளின் தொகுப்பாளர்கள் கருத்துப்படி இந்த சுமிருதிகளின் செயலாக்கமான பொது நோக்கம் அறத்தைக்கடைபிடிப்பதே. மக்கள் தாங்களாகவே இதற்கு ஒரு புனிதத்தைக் கொடுத்துவிட்டார்கள். சட்ட விதிகளின் தோற்றம் பற்றி ஒரு தரப்பு கருத்து, மன்னனும் சட்ட நூல்களும் மக்களால் உருவாக்கப்பட்டவையே''.[24]

இந்தப் பொருளில்தான் பெரும்பாலான முன்னோடி சுமிருதி தொகுப்பாளர்கள் மிகத் தெளிவாக கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். மாதிரிக்கு மகாபாரதத்தையும் கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தையும் போலவே **மெகாதிதியும் விஷ்னேஸ்ராவும்** பின்வரும் கருத்தை வலியுறுத்துகிறார்கள். வேதங்களிலும் சுமிருதிகளிலும் காணப்படும் சட்டங்கள் மக்களிடமிருந்து தோற்றம் பெற்றவையாகும். இந்த சட்டங்களின் பின்னே காணப்படும் புனிதம் உச்ச தெய்வீக அதிகாரத்தின் ஆணையினால் உருவாகவில்லை.[25]

சட்டத்தைத் தந்தவர்கள் என்ற முறைகளில் இருபது முனிவர்களின் பட்டியல் ஒன்றை **யக்ஞவல்கியர்** சமிருதி தருகிறது. இதிலுள்ள விவரங்கள் எடுத்துக்காட்டு

கள்தான். ஏனையோரின் தர்ம சூத்திரங்கள் விடுபட வில்லை என மிட,ச்சாரர் விளக்குகிறார். சுமிருதி தொகுப் பாளர்கள் தங்கள் ஆசிரியர்களை படிநிலையிலான அதிகாரத்துவமுறையில் தொகுக்க முயற்சிக்கவில்லை.

இருபது முக்கிய சுமிருதித் தொகுப்பாளர்களில் ஒருவரான **பிரகஸ்பதி** என்பவர் பின்வருமாறு கூறுகிறார்: ஒரு முடிவு எடுப்பதற்காக சாத்திரங்களைத் தேடி பின்னோக்கிப் போக வேண்டியதில்லை. சாஸ்திரியின் துணை கொண்டோ அல்லது மரபுகளின் அடிப்படையா கவோ எடுக்கப்படாத எந்த முடிவுகளும் நீதியிலிருந்து தவறிவிடும். இந்தக் கொள்கைகளின் அடிப்படையில் தான் மக்களால் கண்டிக்கப்பட்ட நடைமுறைகளை முனிவர்கள் கைவிட்டுவிட்டார்கள். மக்கள் ஏற்றுக் கொண்ட அவர்களால் பின்பற்றப்பட்ட பழக்க வழக்கங் களையும் மரபுகளையுமே சாத்திர விதிகளாக முனிவர்கள் உண்டாக்கி வைத்தனர்.[26] எழுதப்பட்ட சாத்திர விதிக ளைக் காட்டிலும் அறிவுக்கும் நீதிக்குமே மிகுந்த மரியாதை தரப்பட்டது என்பதே மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படவேண்டிய ஒன்றாய் இருக்கிறது.

தற்போதுள்ள தர்ம சூத்திரங்களில் **கவுதமர், பதுகாயனர், அபாஸ்தம்பர், ஹரிதா, வசிட்டர்** ஆகியோரு டைய தர்ம சூத்திரங்களே மிகப்பழைமை வாய்ந்ததாக வும், மனித குலத்தின் பல்வேறு கடமைகளை கையாளுவ தாகவும் இருக்கிறது என்பது ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு விசயமாகும். இருப்பினும் கூட, சாதாரண மரபு விதிகளைத் தொகுத்ததைத் தவிர பெரிதாக தாங்கள் ஏதும் செய்து விட்டதாக இவர்கள் பாசாங்கு செய்ய வில்லை. தங்களிடம் ''கையளிக்கப்பட்ட மரபுகளை தொகுத்தது மட்டுமே தாங்கள் செய்த பணியென்றும் இம்மரபுகளை மாற்றுவதற்கும் சீர்திருத்துவதற்கும் தாங்கள் தயாராக இருப்பதாகவும்'', இவர்கள் தயக்க மின்றிச் சொல்லிக் கொண்டார்கள்.[27]

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல்வேறு கால கட்டங்களில் தொகுக்கப்பட்ட இந்தத் தர்ம சூத்திரங்கள் தங்களுக்குள் ஒன்றுக்கொன்று மேலாண்மை செய்து கொள்வதற்காகப் போட்டியிட்டுக் கொண்டதில்லை. ஒவ்வொரு ஆசிரியரும் மாற்று சிந்தனை முறையை மதிக்கவே செய்தனர். மாதிரிக்கு, தென்னிந்தியாவின் குறிப்பிட்டப் பகுதிகளின் மரபுகளின் தொகுப்பாக நம்பப்படும் அபாஸ்தம்பரின் தொகுப்பு மிகுந்த மரியாதைக்குரிய தர்ம சூத்திரங்களில் ஒன்றாகும். 'வேதங்களே அனைத்து அறிவின் அடிப்படையும் (பிராமணம்) கருவியுமாகும்' என்ற கருத்தை வலியுறுத்தும் இவர், தனது தொகுப்பின் முடிவில் தன் மாணவர்களுக்குப் பின்வரும் கருத்தை வலியுறுத்துவதில் கவனமாக இருந்தார். (இந்தத் தொகுப்பில் சொல்லாமல் விடப்பட்ட) ''மீதமுள்ள கடமைகளை அனைத்துச் சாதி பெண்களிடமிருந்தும் ஆண்களிடமிருந்தும் கற்றுக் கொள்ள வேண்டுமென சிலர் சொல்லியிருக்கிறார்கள்.'' அவர் தொடர்ந்து கூறுகிறார்: ''பெண்கள் பெற்றுள்ள அறிவே அனைத்து ஆய்வுகளின் முடிவாகும்''[28]

தர்மசூத்திரங்களிலேயே மிகப்பழமை வாய்ந்ததாக நம்பப்படுகின்ற கவுதம தர்ம சூத்திரம் பின்வரும் கட்டளையை அடிப்படையாக வைத்திருக்கிறது: பழம் நிறுவனங்களையும் உழவர்கள், வணிகர்கள், ஆயர்கள், வட்டியாளர்கள், கைவினைஞர்கள் ஆகிய பல்வேறு சமூகங்களின் மரபுகளையும் காப்பாற்ற வேண்டியது ஒரு மன்னனின் கடமை. ஒரு மன்னன் தன் சட்டத்தை மற்றவர்கள்மீது சுமத்த எண்ணக்கூடாது. மரபுகளை பாதுகாப்பதும், நடைமுறைப்படுத்துவதுமே அவன் வேலை. ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகளுக்கு விசுவாசமாக இருப்பது, மரபுகளுக்கு விளக்கம் தரும் தன் கடமையை நடைமுறைப்படுத்துவது என்பதன் பொருள் மரபுகளும், பழக்க வழக்கங்களும் குடும்ப மரபுகளை மற்ற விதிகளில் இருந்து பாதுகாப்பது என்பதே. புனித

நூலின் வடிவிலே கடவுள் தங்களை அடைந்ததாகக் கருதும் பிற சமூகங்களுக்கும் இந்து சூத்திரங்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுவே.

குறிப்பிட்ட சுமிருதி தொகுப்பாளர்கள் எந்த சாதி/ சமூகத்தின் மரபுகளைத் தொகுத்தார்கள் என்பதற்கான ஒரு தெளிவான ஆதாரம் கிடையாது. குறிப்பிட்ட சமூகக் குழுவினருக்கு இது பொருத்தமாக இருந்தாலும் வட்டாரத் தன்மை கொண்டிருந்தாலும் அது நடைமுறை பயன்பாட்டைக் கொண்டிருந்தது. சுமிருதிகளைத் தொகுத்தவர்கள் அப்பணிக்கு தங்கள் மத அதிகாரத் தைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. ஒரு இறையாண்மை பெற்ற சக்திக்கு தங்கள் அதிகாரம் கடமைப்பட்டதாகவும் சொல்லிக் கொள்ளவில்லை. ஆகவே, தங்களின் கட்டளை களை எந்த ஒரு சமூகத்தின் மீதும் மேலிருந்துத் திணிக்கும் நோக்கம் அவர்களுக்கு இல்லை. சமூகக்குழுக்களும், தனி நபர்களும் இந்த விதிகளின் கீழ்வரும் நீதியை ஏற்றுக் கொண்டு தங்கள் பிரச்சனைகளை முன்வைக்கத் தூண்டு வதைப் பொறுத்தே இந்தச் சுமிருதி விதிகளின் மதிப்புச் சார்ந்திருந்தது.

தங்கள் தீர்ப்புகளை மறுக்கின்ற அல்லது விமர்சிக் கின்ற மக்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடுத்து தண்டிப்பதாக அச்சுறுத்தும் தற்போதைய நீதிபதிகளைப் போல இவை ஒரு அதிகாரத்தின் கீழ் திணிக்கப்படவில்லை. இவையெல்லாவற்றைக் காட்டிலும் மிகமுக்கியம், சுமிருதி தொகுப்பாளர் கருத்துப்படி நல்ல மனசாட்சிக்கு ஒத்துப்போகின்ற ஒன்றுதான் தர்ம சூத்திரமாகும். இந்த சாதாரண கொள்கைகளைப் புரிந்து கொண்ட ஒரு சில நவீன சமூக சீர்திருத்தவாதிகளில் காந்தியும் ஒருவர் ஆவார். எழுதப்பட்ட பழம் சாத்திரங்கள், மதம் அல்லது மதகுருவின் சக்தி போன்ற அயலான அதிகாரத்தின் அங்கீகாரமின்றி அனைத்து சமூகங்களுக்கு மான ஒரு தீவிரமான சமூகச் சீர்திருத்தத் திட்டத்தை

காந்தி முன் வைத்தார் என்பதே இதன் பொருளாகும். நீண்ட விளைவுகளை உண்டாக்கக்கூடிய சமுகச் சீர் திருத்த இயக்கத்தை தொடங்கி வைத்து அவர் அறிவித்த தாவது: ''எனது கருத்துப்படி சாத்திரங்கள் என நாம் ஏற்றுக்கொண்ட விதிகளின் ஒவ்வொரு வரியும், கடவுளின் கட்டளைகள் அல்ல, ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகள் குறித்த விளக்கங்கள் பரிமாண மாற்றத்திற்குள்ளாகி வருகிறது. அவை எல்லையற்ற விளக்கங்களுக்கு தகுதி யுடையவை ஆகும். மனித அறிவும், மனமும்கூட பரிமாண மாற்றத்திற்குள்ளாகி வருகிறது. பிரபஞ்ச உண்மைக்கும், ஒழுக்க நெறிகளுக்கும் முரண்பாடான சாத்திர விதிகள் நிலைத்து நிற்காது. நியாயமானது எனத் தகுதி கொண் டாடும் விதிகள் கூட பகுத்தறிவோடு முரண்பட்டிருந்தால் நிலைத்து நிற்காது''[29]

அவர் மேலும் தொடர்ந்து கூறுகிறார்: ''இந்து சாத்தி ரங்களில் எனக்குள்ள நம்பிக்கையின் காரணமாக அதன் ஒவ்வொரு வரிகளையும், பாடல்களையும் தெய்வீகத் தன்மை பொருந்தியதாக ஒத்துக்கொள்ளவேண்டும் என எதிர்பார்க்க முடியாது. பகுத்தறிவிற்கு அல்லது ஒழுக்க வுணர்வுக்கு முரண்பாடு உடைய எந்த ஒரு விளக்கத்திற் கும் அது எவ்வளவு அறிவுள்ளதாக இருந்தபோதும் நான் கட்டுப்படமாட்டேன்''[30]

'நல்ல மனசாட்சிக்கு' எதிரான அல்லது சமத்துவத் திற்கும் நீதிக்கும் ஒத்துப்போகாத மரபுகளை தூக்கி யெறியும்படி மக்களுக்கு அறைகூவல் விடும் நவீன கால முனிவராக தன்னை முன்னிறுத்திக்கொண்டார். இதற்குக் காரணம் தன் சொந்த மரபு விதிகளை மாற்றிக்கொள் ளும் அதிகாரம் அந்தந்த மக்களுக்கு இருக்கிறது என்பதை காந்தி சொந்தமாக்கிக் கொண்டார் என்பதே.

இந்தியாவில் இது ஒரு வாழ்க்கை மரபாக சில முக்கிய விசயங்களில் தொடர்ந்து இருந்து வருகிறது.

ஒவ்வொரு சாதியும் உட்சாதியும், தொழில் குழுக்களும் தங்கள் சமூகங்களின் உள் விசயங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் அதிகாரத்தைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்தி வருகிறார்கள். பழங்கால சாத்திர விதிகளையோ அல்லது நவீன பாராளுமன்றச் சட்டங்களையோ இவர்கள் பெரிதும் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. இந்தியாவில் ஒரு தனி நபரோ ஒரு குழுவோ ஒரு குறிப் பிட்ட நடைமுறையை நியாயப்படுத்தும்போதோ அல்லது சில புதிய ஆலோசனைகளை எதிர்க்கும் போதோ பின் வரும் பதிலை முன்வைப்பதை நாடு முழுக்கப் பொது வாகக் கேட்கலாம். ''நமது சமூகத்தில் இப்படித்தான் நடந்து வருகிறது. அல்லது நமது சமூகத்தில் இந்த வழியில் நாம் செய்வதில்லை.'' இந்நாட்டு மரபுகளின் இயல்புகளுக்கு நேரெதிராக ஆங்கில ஆட்சியாளர்கள் செயல்பட்டனர். பழமையானதும் எந்த இடையூறுமின்றி பின்பற்றப்பட்டு வருகின்றதும் மக்களின் விருப்பப்பூர்வ மானதும் ஒரே சீரானதுமான மரபுகள் மட்டுமே சட்டத் தால் ஏற்றுக்கொள்ளப்படும். ஒழுக்கக்கேடான மரபுகள் அல்லது பொது மக்களுக்கு எதிரான மரபுகள் ஏற்றுக் கொள்ளப்படாது என ஆங்கில ஆட்சியாளர்கள் முடிவு செய்தனர். சுதந்திர இந்தியாவின் ஆட்சியாளர்கள் ஐயத்துக்கிடமின்றி இந்தக் கோட்பாட்டை இந்துச் சட்டப் தொகுப்பில் இணைத்து விட்டார்கள். அதன் மூலம் எந்த ஒரு மரபையும் 'ஒழுக்கக் கேடானது' என்ற முத்திரைகுத்தி அதனை தன்னிச்சையாக ஒதுக்கித் தள்ளு வது மட்டுமல்ல; மரபுகளையே செரித்துக் கொள்ளுவதற் கும் இவர்களுக்கும், நீதிபதிகளுக்கும் சாத்தியமானது. **அம்பேத்கர்** இதை மணிச்சுருக்கமாக பின்வருமாறு முன் வைத்தார்: ''நாம் என்ன செய்கிறோம். புதிய மரபு பழக் கங்கள் வளர்வதை தடுத்து வருகிறோம். தற்போது நிலவி வரும் மரபுகளை அழிக்கவில்லை.[81]

பிரிட்டன் ஆட்சிக்குழுவானது நடைமுறை மரபுகளின் மீது தன் சொந்த முடிவுகளைத் திணித்து அதனைப்

பயனற்றதாக்கியதோடு அம்மரபுகளுக்கு ஒரே சீரான வடிவத்தையும் தந்தது. இவ்வாறாக இந்திய நீதித்துறை தன் வளர்ச்சியை முழுமையாக்கிக் கொண்டது. இந்து அல்லது முசுலீம்) சட்டங்களுக்கு தாங்கள் விளக்கங்கள் மட்டுமே தந்ததாகவும் அதில் தலையிடவில்லையென்றும் ஆங்கிலேயர்கள் கூறிக்கொண்டார்கள். இருந்த போதிலும் சட்ட விளக்கத்திற்காக ஆங்கிலேயர்கள் நீதி மன்றங்களை ஏற்படுத்திய ஒரு போக்கே சட்டங்களை அடையாளந் தெரியாத அளவிற்கும், சீர் செய்ய முடியாத அளவிற்கும் மாற்றிவிட்டனர். இதற்கு எண்ணற்ற மாதிரிகளை எடுத்துக்காட்ட முடியும் என்றாலும், இரு மாதிரிகளை மட்டுமே பார்க்கலாம். **மிடக்சாரா** தொகுப்பிலுள்ள **விஜ்னேஸ்வராவின்** கருத்துப்படி **ஸ்திரீதானம்** (பெண்கள் செல்வம்) என்பது பெண்களின் பிறந்த வீட்டுச் சொத்தும், கணவன் வழியில் வந்த சொத்தும் சேர்ந்தது ஆகும்.

ஆனால் 1912இல் ஆங்கில ஆட்சிக்குழு இக்கருத்தை மறுத்துவிட்டது. ஒரு பெண் ஆணிடமிருந்தோ அல்லது பெண்ணிடமிருந்தோ, வாரிசாகப் பெற்ற சொத்து அப்பெண்ணின் சொத்தாக கருதப்படமாட்டாது. ஆகவே அப்பெண் இறந்த பின்னால், அச்சொத்துக்கள், எந்த ஆண் அல்லது பெண்ணிடமிருந்து பெறப்பட்டதோ அவர்களின் வாரிசுகளுக்கே அது உரியதாகும் என ஆட்சிக்குழு முடிவு செய்தது. பெண்களுக்கு உரிமைகளை தருவதில் மகாராஸ்டிரா சிந்தனை முறை சில அம்சங்களில் மற்ற இந்து சிந்தனை முறைகளைக் காட்டிலும் மிக முற்போக்கானது ஆகும். இந்த சிந்தனை முறையின் தந்தையான **திரு. நீலகண்ட பால்டா** அவர்கள் பிரச்சனைகளுக்கு மரபுவழி தீர்வுகளை மட்டுமே முன்வைக்கவில்லை; தற்போதைய சமூகத்தின் தேவையை கருத்தில் கொண்டு அதனை மேம்படுத்தவும் செய்ததாக சொல்லியிருக்கிறார். ஆரம்ப காலங்களில் நீதிமன்றங்கள் இந்தச்

சிந்தனை முறையை தீவிரமாக கருத்தில் கொண்டாலும் பின் மெதுவாக பழைமைவாத சிந்தனை முறைக்கு சா பாகச் செல்லத் தொடங்கிவிட்டன. ஏனைய மற்றைய மு போக்குச் சிந்தனை முறைகளுக்கும் இதே கதிதான் ஏ பட்டது. மாதிரிக்கு 1908 இல் மகாராஸ்டிராவின் சிந்தனை முறையைச் சேர்ந்த **பாலம் பத்தியை** பம்பாய் உயர்நீ மன்றம் மறுத்துவிட்டது. **பாலம் பத்தி** என்ற இந்த நூலை எழுதியவர் **லட்சுமி தேவி** என்பவர். பெண்களின் உரிமை களை உயர்த்துவதில் நல்ல விளக்கங்களையும், மிக மு போக்கான கருத்துக்களையும் இவர் வெளியிட்டிருக்கிறா ஒரு காலத்தில் இந்த ஆசிரியரின் கருத்துகளுக்கு பம்பாய் உயர்நீதிமன்றம் கணிசமான முக்கியத்துவம் தந்து வந்தது. ஆனால் பின் நாட்களில், இதே நீதிமன்றம் இந்நூலை, ''முறையான ஆய்வும், எச்சரிக்கையுமின்றி ஒத்துக்கொள்ள முடியாது''[32] என அறிவித்தது.

'சட்ட அவசியம்' பற்றிய விளக்கம் தொடர்பான மற்றொரு சான்று, ஒரு கர்டா (Karda) அல்லது கூட்டுக் குடும்பச் சொத்தின் காப்பாளர் அதனை விற்க முடியும்.[33]

சாத்திரங்களிலிருந்து தங்கள் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட இந்த நீதிமன்றங்களின் தீர்ப்புகள், காலப் போக்கில் சாத்திரங்களைக் காட்டிலும் மிகுந்த அதிகாரம் பெற்றவையாக மாறிவிட்டன. தொடக் கத்தில் இந்த தீர்ப்புக்கள், வழக்கு சம்பந்தப்பட்ட நபர் களை மட்டுமே கட்டுப்படுத்திய போதிலும், மெதுவாக முழுச்சமூகத்தையும் கட்டுப்படுத்துபவையாக வளர்ந்து விட்டன. ஆங்கில நீதி முறையானது, நீதிமன்ற தீர்ப்பு களுக்கும், சட்டத்தின் மதிப்பை தந்து வந்ததே இதற்குக் காரணமாய் அமைந்தது. இந்துச் சட்டத்தின் பெரும் இறுக்கத்தை அதிகப்படுத்த இதுவும் கூட ஒரு காரணியாக அமைந்துவிட்டது. ஆட்சிக்குழு. உச்சநீதிமன்றம், உயர்

நீதிமன்றம், ஆகியவற்றின் எண்ணற்ற தீர்ப்புகள் மரபு விதிகளை மட்டுமல்ல சாத்திரவிதிகளையும் ஒதுக்கித் தள்ளின. இந்த சாத்திரவிதிகளிலிருந்து தான் தாங்கள் தீர்ப்புகளை வெளியிட்டதாக இவை சொல்லிக் கொண்டன. தவறான விளக்கங்கள் மூலம் சட்டத்தை மறுவார்ப்பு செய்த ஆங்கிலேயர்களின் முயற்சியைக் காட்டிலும் மிகுந்த முக்கியமானது, மக்களின் சொந்த பஞ்சாயத்துக்களையும் வழிமுறைகளையும் நாசமாக்கியதே ஆகும். ஒவ்வொரு வகுப்பும் தன்னளவில் புரிந்துகொண்டு தானே தீர்மானம் எடுத்து நிர்வகித்துவந்த சாத்திரங்களின் இடத்தில் ஒரு அன்னிய மொழியில், அன்னிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அச்சமூட்டும் விதிமுறைகளின்படி ஒரு அன்னிய நீதிமன்றம் செயல்படலாயிற்று. மாதிரிக்கு, பம்பாய் சிந்தனை முறையைச் சார்ந்த **மிடக்சாரா** மற்ற மூன்று சிந்தனை முறைகளைக் காட்டிலும், பெண் வாரிசுகளை அங்கீகரித்து வந்தது. இதன் பொருள், அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தங்கள் பெண் வாரிசுகளின் கோரிக்கைகளை மதித்து வந்தனர் என்பதே. ஆங்கிலேயர்கள் நீதி முறையை கையிலெடுத்தவுடன் மக்களின் கையிலிருந்த அதிகாரத்தை முற்றாக நீக்கிவிட்டு ஆங்கிலம் படித்த வழக்குரைஞர்களின் கைகளில் மக்களை முற்றாக ஒப்படைத்தனர். இதன் பொருள், குறிப்பிட்ட சாத்திரங்களை பல சமயங்களில் தவறாக வியாக்யானப்படுத்தி பெண்களுக்கு சாதகமானவை உள்ளிட்ட சில சாத்திரங்களைப் புறந்தள்ளி விட்டனர்.

இந்துச் சட்டத்தொகுப்பு விவாதத்தின்போது பாராளுமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் ஒரு விசயம் அடிக்கடி வலியுறுத்தப்பட்டேவந்தது. இத்தொகுப்பானது மக்களுக்கு சொல்லொண்ணா துயரங்களையே தரும். இச்சட்டங்களை நடைமுறைப்படுத்த அரசுஎந்திரத்தை மென்மையும் எளிமையும் ஆக்கவேண்டும் என்பதே ஆகும்.

முதல் பெரும் தடையாக மொழி இருந்து வந்தது மாதிரிக்கு திரு. வெங்கட்ராய சர்மா பின்வருமாறு சுட்டிக் காட்டினார்: ''இந்துச் சட்டத் தொகுப்பை ஆங்கிலத்தில் செய்வதானது. அதற்கு ஒரு அன்னியத் தன்மையையே தரும்''[34]

நீதி மன்ற முறைகளில் ஏற்படும் தாமதமும் செலவும் இரண்டாவதுத் தடையாகும். மணவிலக்கு வழக்குகளில் இது மிகத் தெளிவாகத் தெரிகிறது. இந்துச் சமூகத்தில் முறையாக மணவிலக்கை அறிமுகப்படுத்துவதாக சீர் திருத்தவாதிதள் உரிமைப் பாராட்டிக் கொண்டாலும், பெரும்பான்மையான மக்களிடையே மணவிலக்கு வழக்கம் ஏற்கெனவே இருந்து வந்ததுதான். திருமணம் முறிக்கப் பட முடியாதது என்ற கொள்கையை கொண்டிருப்பதாக கூறிக்கொண்ட மேல் சாதியினர் இடையிலும்கூட மெய் யான மணவிலக்கு வழக்கம் இருந்து வந்தது.

மண விலக்குக்கென தனி நீதி மன்றங்களை நிறுவி செயல்படுத்தாதவரை பெரும்பாலான மக்களுக்கு சட்ட ரீதியிலான மணவிலக்கு கிட்டாது என திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்ட போதிலும், அரசாங்கம் எந்த ஒரு நட வடிக்கையையும் எடுக்கவில்லை. 1945இல் இந்துச் சட்டத்தை தீவிரமாக ஆதரித்து வெளியிட்ட ஒரு அறிக் கையில் சென்னை மாகாண பிற்பட்ட வகுப்புகளின் அமைப்பு பின் வருமாறு குறிப்பிட்டு இருந்தது: ''மண விலக்கை...... வரவேற்கிறோம். ஆனால் மணவிலக்கு பெறுவது சம்மந்தமான சட்ட நடைமுறைகள் எளிதாக்கப் படவேண்டும். இந்த மாகாணத்தில் இந்து மக்கள் தொகை யில் 65 சதமாக உள்ள வறிய பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்து மணவிலக்கு உரிமை எளிதாகக் கிடைக்கும்படி இருக்கவேண்டும். நாங்கள் ஏழைகள், மணவிலக்குக்காக நீதி மன்றங்களுக்குச் சென்று செலவுகளைச் செய்ய முடி யாத நிலையில் இருக்கிறோம். சில அரசாங்க அதிகாரி

களின் கைகளில் — மாதிரிக்கு, மாவட்டப் பதிவாளர், துணைப்பதிவாளர் அல்லது பஞ்சாயத்து அதிகாரிகளின் கைகளில்—இவ்விசயம் குறித்து சில அதிகாரங்களைக் கையளிக்கவேண்டும் என்பதே எமது ஆலோசனை ஆகும்.''[35]

இதற்குப் பின்னால் பாராளுமன்றத்தில் மணவிலக்குக் குறித்த விவாதம் வரும்போதெல்லாம், இந்த அம்சம் வலியுறுத்தப்பட்டு வந்தது. மாதிரிக்கு, 1951இல் பீகாரைச் சேர்ந்த **திரு பாபுராம் நாராயணசிங்** என்பவர் பின்வருமாறு கூறினார்:

''தொண்ணூறு விழுக்காடு சமூகங்களில் மணவிலக்கு ஒரு அன்றாட வழக்கமாக இருந்து வருகிறது என்பதை அறிவோம். இரண்டு, நான்கு அல்லது ஐந்துபேர் கூட்டாக அமர்ந்து கொண்டு சம்மந்தப்பட்ட இரு தரப்பினரையும் அழைத்துப் பேசி மணவிலக்கை அங்கீகரித்து விடுவர். இதற்கு ஒரு பைசாக்கூட செலவாவதில்லை. இதில் எந்த இடையூறும் இல்லை. இப்பொழுதோ மண விலக்குக்கோரி அனைவரும் மாவட்ட நீதிமன்றம் செல்லவேண்டி இருக்கிறது. இந்தச் சட்ட விதிகளால் எவ்வளவு பொருட்செலவும் இடையூறும் ஏற்படுகிறது''[36]

மேலும் அவர் தொடர்ந்து கூறுவதாவது: (சட்டங்களை) நடைமுறைப் படுத்தும் நிர்வாக முறைகளை உருவாக்காமல் இம்மாதிரியான சட்டங்களை மட்டுமே நிறைவேற்றி வருவதினால் மக்கள் இச்சட்டங்களை புறக்கணிப்பதோடு தங்களது சொந்த பஞ்சாயத்து முறைகளையே நம்பி இருப்பார்கள். நமக்குப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. நமது நாட்டு மரபுகளும் பழக்க வழக்கங்களும் நெகிழ்ச்சி உடையவையாய் இருக்கின்றன. அவை மக்களுக்கு நல்லது செய்து வருகின்றன. மக்கள் இயல்பாகவே இதை ஏற்றுக்கொள்வார்கள். இந்த நாடு என்ன

# இந்துத் திருமணச்சட்டம்

*1955*இல் இந்துத் திருமணச்சட்டம் நிறைவேற்றப் பட்டபோது அது கணிசமான மாற்றங்களுக்கு உள்ளாகி யிருந்தது. சிவில் திருமணம் குறித்த இதன் உண்மையான சட்டவிதிகள் நீக்கப்பட்டு அவை சிறப்புத் திருமணச் சட்டம் (1954) என தனியாக நிறைவேற்றப்பட்டது. கணவனும் மனைவியும் ஒரே சாதிகளைச் சார்ந்தவர் களாக இருந்தால்தான் அத்திருமணம் சட்ட மதிப்பு பெறும் என்ற அம்சம் நீக்கப்பட்டது. ஒருதாரச் சட்டத்தை நடைமுறைபடுத்தியது; அனைத்துச் சாதி களுக்கும் மணவிலக்கு விதிகளை பொதுவாக்கியது ஆகியன இதன் முக்கிய அம்சங்களாகும்.

இந்துச் சட்ட முன்வரைவு நிறைவேற்றப்பட்ட சமயத்தில் முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள முதலிரண்டு அம்சங்களும் நடைமுறை அளவில் இல்லாமல் கொள்கை யளவில் விரும்பத்தக்க அம்சங்களாக ஏறத்தாழ பொது வாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. முசுலீம்களுக்கு மட்டும் பலதார மணமுறை அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்ற காரணத்தை மட்டுமே முன்னிறுத்தி இதற்கு (ஒரு தார மணமுறை) பெரும் எதிர்ப்பு கிளப்பப்பட்டது. **கரிவா** (Karewa) திருமண முறை, பலதார மணமுறை பல கணவன்களை மணக்கும்முறை ஆகிய முறைகளில் முதல் மனைவி மலடாக இருந்தால் வேறு திருமணத்திற்கு மரபு வழிச்சட்டங்கள் ஆதரவளித்திருந்தன. ஆனால் ஒரு தார மணமுறைக்கு எதிராக இதை யாரும் சுட்டிக் காட்ட முன்வரவில்லை. மணவிலக்குக் குறித்த சட்டவழி

களைச் சுற்றியே விவாதத்தின் பெரும் பகுதி இருந்து வந்தது. 19ஆவது நூற்றாண்டு இங்கிலாந்தில் மிகுந்தத் தயக்கத்தோடும் மெதுவாகவும் வளர்ந்த மணவிலக்குக் கருத்துக்களையே இந்த சட்ட வல்லுநர்களும் முழுமையாக உள்வாங்கிக்கொண்டார்கள். ''கடவுளால் இணைக்கப்பட்டவர்கள் மனிதர்களால் பிரிக்கப்படாது இருப்பதாக'' என்ற **பைபிளின்** வாசகத்திற்கு விசுவாசமாக ஆங்கிலச் சட்டம் இருந்தது. அந்த அடிப்படையில் மணவிலக்குக்குறித்த விதிமுறைகள் கவனமாக கட்டமைக்கப் பட்டிருக்கிறது. மீண்டும் இணைவதற்கான வாய்ப்புகளும் தரப்பட்டிருந்தது. செல்லுபடியாகாத திருமணம், தாம்பத்திய உரிமைகளை கையளிப்பது (Restitution of Conjugar Rights) ஆகிய சட்டவிதிகள் இதைக்கருத்தில் கொண்டே சேர்க்கப்பட்டிருந்தன. மணவிலக்கு அல்லது பிரிந்து இருப்பது குறித்த பிரிட்டன் நீதிமன்ற சட்டச் சொல் 'விடுவித்தல்' என்பதே. மிகக் கடுமையான அளவில் உறவுகள் பாதிக்கப்பட்டத் தம்பதிகளுக்கே இது வழங்கப்படும். திருமணம் ஒரு தண்டனை, 'தவறு' செய்யும் தம்பதிகளுக்கு இதிலிருந்து 'விடுதலை' இல்லை என்ற தர்க்கமே இதன் அடிப்படையாகும். ஆகவே 'கணவன் அல்லது மனைவி' செய்யும் தவறைக் காட்டி ஒருவர் மணவிலக்குப் பெற முடியாதபடி சட்டவிதிகள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. தம்பதியர் இருவருமே மணவிலக்கை விரும்பினாலும் கூட அதை ஒரு மோசடியாகக் கருத்தில் எடுத்து மணவிலக்கு மறுக்கப்படுவது இதைவிட மோசமான அபத்தமாகும்.

இதற்கு நேர் எதிராக மணவிலக்குக் குறித்த இந்திய நடைமுறைகளில் இம்மாதிரியான எந்தக் கட்டங்களும் இல்லை. முறையான மணவிலக்கு இல்லாமலே பிரிந்து வாழ்வது என்பது இங்கு நடைமுறையில் வழக்கமாக இருந்து வந்தது. தம்பதிகளில் ஒருவர் காணாமல்

சென்று விட்டாலோ அல்லது சீரழிந்ததாக வகைப்படுத்தினாலோ மணவிலக்கு கொடுத்துவிடவேண்டும் என சில சாத்திரங்கள் கூறுகின்றன. பெரும்பாலான சமூகங்களில் மணவிலக்கும் மறுதிருமணமும் நடைமுறையில் இருந்து வந்தன. மணவிலக்கு என்பதை ஒரேநாளில் தீர்க்கப்படும் பிரச்சனையாகக் கையாண்டு வந்தனர். இதற்காகப் பல்வேறு கட்டங்களைக் கடக்க வேண்டியதில்லை. பஞ்சாயத்துகளே இந்தப் பேச்சுவார்த்தைகளைக் இணக்கமான வழியில் கையாண்டு வந்தன. சில குறிப்பிட்ட உயர்சாதிகளில் முகத்திரை (பர்தா), சொத்துரிமை இல்லாமை போன்ற எண்ணற்ற கட்டுப்பாடுகளின் கீழ் பெண்கள் அவதிப்பட்டு வந்தனர். அந்த சாதிகளில் பெண்களுக்குத் தேவையான பாதுகாப்புகளை மரபுச் சட்டங்கள் அனுமதித்ததில்லை. ஆண்களின் விருப்பத்திற்குப் பெண்களை விட்டுவிட்டதோடு மணவிலக்கை ஆணின் உரிமையாகவும், பலதார மணமுறையையும்கூட அச் சாதி மரபு விதிகள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன என்பதில் எந்த ஐயமுமில்லை. இருப்பினும்கூட சமற்கிருதமயமாகாத எண்ணற்ற சமூகங்களில் பெண்கள் எந்த வித சமூகப் பழிக்குமிடமின்றி மணவிலக்குப் பெற்று விட்டு செல்லும் உரிமை இருந்து வந்தது. மாதிரிக்கு இன்றும் கூட ராஜஸ்தானில் பல்வேறு சமூகங்களில் பெண்கள் மிக எளிதாத திருமண உறவில் இருந்துவெளி வந்துவிடலாம். ஒரே ஒரு நிபந்தனை, இரண்டாம் கணவர், முதல் கணவனுக்கு திருமணச்செலவை திரும்பத் தந்துவிடுவது என்பதே. கேரளாவில் உள்ள மருமக்கள் தாயம் என்பதைப் போன்ற சிலமுறைகளில் தம்பதிகளில் யாதேனும் ஒருவர் முரண்பட்டாலும் அதன் அடிப்படையில் மணவிலக்கு அளித்துவிடுகிறார்கள். சென்னையைச் சேர்ந்த அரசு வழக்குரைஞரான திரு. **கே. குட்டி கிருஷ்ணமேனன்** என்பவர் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

''சென்னை மருமக்கள் தாயச்சட்டம் (XXII of 1933) என்ற சட்டத்தை மாகாண சட்டசபை நிறைவேற்றியிருக்கிறது. திருமணம், மணவிலக்கு ஆகிய பிரச்சனைகளில் மற்ற இடங்களில் காணப்படும் நாகரிக சமூகங்களைக் காட்டிலும் மிக முற்போக்கான சட்டவிதிகளை இச்சட்டம் கொண்டிருக்கிறது. தம்பதிகளின் மணவிலக்கு ஒப்பந்தத்தின் மூலமோ அல்லது கணவனோ மனைவியோ உள்ளூர் நீதி மன்றத்தில் தரும் புகாரின் அடிப்படையிலோ மணவிலக்குத் தரப்படுகிறது. புகாரில் எந்தக் குறையையும் சுட்டிக்காட்ட வேண்டிய தேவையிலலை. தம்பதிகளின் வெறும் விருப்பமோ கூட போதுமான காரணமாய் இருக்கிறது. முழு விடுதலை மக்களின் குடும்ப அமைதியை எந்தவிதத்திலும் பாதிக்காத வண்ணம் இருந்து வந்தது.''[39]

பெரும் விவாதத்திற்குப் பின் இறுதியாக 29(2) என்ற விதியில் இந்த வடிவிலான மணவிலக்கிற்கு விதிவிலக்குத் தரப்பட்டது. அந்த விதி பின்வருமாறு: மரபுவிதிகளினால் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு உரிமையையோ அல்லது எந்த ஒரு சிறப்புச் சட்ட உரிமைகளையோ இச்சட்டம் பாதிக்காது. அவை இச்சட்டத்திற்கு முன்போ அல்லது பின்போ இருப்பினும் அவை பாதிக்கப் படாது.''

மணவிலக்குக் குறித்த இந்த விதிகளையும் தந்துவிட்டு இந்துத் திருமணம் மற்றும் மணவிலக்குச் சட்டத்திற்கு மாறாக சேர்ந்து வாழ்தல் என்ற உரிமையையும் சேர்த்து இருப்பதால் புதிய சட்டத்திற்கு எந்தப்பொருளும் இல்லை என்றாகிறது. இந்தியாவில் சிறு நகர்ப்புற மேட்டுக்குடியினரைத் தவிர ஒரு சில மக்களே மணவிலக்குக்காக நீதி மன்றத்திற்குள் செல்கிறார்கள் என்பதில் வியப்படைய ஒன்றுமில்லை. கணவனால் கைவிடப்படுகின்ற பெண்கள் எந்தவித சட்டவிதிகளுமின்றி மணவிலக்குப் பெற்று

விடுகிறார்கள் அல்லது பெரியவர்களின் பஞ்சாயத்தில் பிரச்சனைத் தீர்க்கப்படுகிறது.

இந்துத் திருமணச்சட்டத்தின் விதிகள் பின்வரும் விஷயங்களில் இருந்து பெறப்பட்டதாகும்.

(அ) திருமணம் பிரிக்கப்பட முடியாதது என்ற கருத்தை சாராம்சமாகக் கொண்ட விக்டோரியன் கால சிந்தனை மற்றும் பிரிட்டனின் சட்டம்.

(ஆ) இந்தியாவின் வடமேற்குச் சமவெளிகளில் வாழ்ந்து வந்த ஆதிக்கக் குழுக்களின் ஆதிக்கக் கலாச்சார மாகும் இது. இக்குழுக்கள் இந்தியாவின் ஏனைய பெரும் பாலானப் பகுதிகளில் இருந்த பண்பாட்டைக்காட்டிலும் மிகுந்த அடக்குமுறை பண்பாட்டைக் கொண்டிருந்தது. அபபகுதிகளிலேயே இருந்த தாழ்ந்த தகுதியில் இருந்த சமூகக் குழுக்களின் பண்பாட்டைக் காட்டிலும் மிகுந்த அடக்குமுறைப் பண்பாட்டைக் கொண்டிருந்தது.

பாதகமான மணவிலக்கு விதிகள், மணவிலக்கை சாத்தியமான அளவு சிக்கலாக்கும் விதிகள் ஆகிய இந்த இரண்டு கருத்துக்களையும் இந்துத் திருமணச்சட்டம் திணித்தது.

இவை இரண்டும் 19ஆம் நூற்றாண்டு காலத்திய பிரிட்டனிடமிருந்து பெறப்பட்டவையாகும். சட்டத்தை உருவாக்கும் பொழுது மணவிலக்குக் குறித்து சுதேசிய அணுகுமுறையை வரையறுக்கத் தவறிவிட்டார்கள். இதற்குக் காரணம் சுதேசிய முறைகளின் மீது இவர்களுக்கிருந்த வெறுப்பு முக்கியமாக, தென்னிந்திய மரபுகளின்மீது இச்சட்டத்தின்ஆதரவாளர்களும் எதிர்ப்பாளர்களும் வெறுப்பே கொண்டிருந்தனர். மாதிரிக்கு மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த திரு. எஸ். பி. முகர்ஜி அவர்கள் இச்சட்ட முன்வரைவிற்கு எதிராகப் பேசும்பொழுது

தென்னிந்தியாவில் காணப்படும் மாற்றுமுறைகளை மதிக்காமல் பேசினார். "தென்னிந்தியா முற்போக்கான தாய் இருக்கிறது. இப்பொழுது நாம் கருத்தில் கொண்டுள்ளஎண்ணற்ற சட்டங்கள் ஏற்கெனவே அங்கு இன்றும் கூட நடைமுறையில் இருக்கிறது என சிலர் சொல்கிறார்கள். தென்னிந்தியா அதிர்ஷ்டம் பெற்றதாகவே இருக்கட்டும். அது மேலும் மேலும் முன்னேறட்டும். ஆனால் அம்முறையை விரும்பாத மற்றவர்கள் மீது அதை ஏன் திணிக்கிறார்கள்"[40]

ஆங்கிலேயர்களின் கருத்துக்களும் நடைமுறைகளும் இந்தியாவைக் காட்டிலும் முற்போக்கானவை என சட்டத்தை உருவாக்கியவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கின்றனர் என்பதை எண்ணற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி இருந்தனர். திரு **எஸ் சி. மிஸ்ரா** அவர்களை மேற்கோளாகக் காட்டுவோம். "மிக முறபோக்கான நடவடிக்கைகளை தாங்கள் எடுத்திருப்பதாக சிலபேர் நினைத்திருக்கிறார்கள். உங்களைச் சுற்றி இருப்பவர்களைக் காட்டிலும் இது ஒன்றும் பெரும் முற்போக்கல்ல என்பது நிச்சயம். இநதுக்களாகிய நீங்கள் இருளில் இருக்கிறீர்கள். உங்களை நாங்கள் வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறோம் என இந்தியாவிற்கு வருகைபுரியும் அன்னியர்கள் சொல்வதுபோல் இருக்கிறது இது"[41]

இச்சட்ட முன்வரைவின் ஆதரவாளரான மேடப் பகுதியைச் சேர்ந்த **திரு ஜெயசூரிய** அவர்கள் தனது ஆழமான அறிவுபூர்வமான பேச்சில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"மணவிலக்குக் குறித்த சட்டவிதிகளை எங்கே தேடிப் பெறுவது என்பதில் வெளிப்படையாகவே மாண்புமிகு சட்ட அமைச்சருக்கு ஒன்றுமே தெரியவில்லை. நமது பண்டைய மரபுகளில் ஒன்றுமே இல்லை என்றே இவர்கள்

வசதியாகக் கருதுகிறார்கள். **கத்யாயனர், நாரதர்** முதலிய எண்ணற்றோர் இங்கு இருக்கின்றனர், மிக மிக காட்டு மிராண்டித்தனமான இந்திய மணவிலக்குச் சட்டத்தில் (1869) சட்ட அமைச்சகம் விழுந்து விட்டது. இச்சட்டம் பழம் விக்டோரியன் கால சிந்தனையில் உருவானது. பிரிட்டனின் சமூகச் சட்டங்கள் மிகவும் பிற்போக்கானவை என்றே ஐரோப்பியர்கள் கருதி வருகின்றார்கள். ஆனால் நாமோ பலதலைமுறைகளாக பிரிட்டனின் சட்ட முறையினால் பாதிக்கப்பட்டு வந்திருக்கிறோம். மணவிலக்கு குறித்த நியாயமான சட்ட விதிகளை உருவாக்க நம் சொந்த மூளையைப் பயன்படுத்தி, பண்டைய நாடுகளிலிருந்தாவது நகலெடுத்திருக்கலாம். மாதிரிக்கு, பிரிட்டனைக் காட்டிலும் முற்போக்கான நிலையிலுள்ள ஸ்காண்டிநேவியா நாட்டிலிருந்து பெற்றிருக்கலாம்.[42]

மேலும். அவர் தொடர்ந்து கூறுகிறார்: தம்பதிகளில் ஒருவர் ஏழு ஆண்டுகளுக்கு காணாமல் போயிருநதால் மட்டுமே மணவிலக்கு கிடைக்கும் என பிரிட்டன் நாட்டு சட்டத்தை அடியொட்டி சட்டம் இயற்றியிருக்கிறீர்கள். மூன்று ஆண்டுகளுக்கு காணாமல் போயிருந்தாலே மணவிலக்கை அளித்துவிட வேண்டுமென **நாரதரும் கௌடில்யரும்** சொல்லியிருக்கிறார்கள். ''கணவனுக்கும், மனைவிககும் இடையில் ஒருவர் மீது ஒருவர் வெறுப்புக் கொண்டிருந்தாலே'' பரஸ்பர சம்மதத்தின் பேரில் மணவிலக்கு அளித்திட **கௌடில்யர்** அனுமதிக்கிறார்.[43] பொது திருமணச் சட்டத்தின் கருவாக பகுத்தறிவான சட்டவிதிகளே இருக்கவேண்டுமென இவர் வாதாடியிருக்கிறார். 'நமது சட்டங்கள் என்றுமே பின்னடைந்த நிலையிலே இருந்துவருகின்றன. நீதிமன்ற ஆணையின்படி பிரிநதுவாழ்தல் மணஉரிமைகளை ஒப்படைப்பது ஆகிய அனைத்து பண்டைய பழம் மரபுகளும் காலத்தைஒட்டி ஒட்டித்துவரும்.[44]

மனச்சித்ரவதை, அவமதிப்பு, கன்னத்தில் அறைதல் போன்ற சிறுவடிவிலான வன்முறைகளை இச்சட்ட விதிகள், கணக்கிலெடுத்துக் கொள்ளாததால் ''சித்ரவதை, உயிருக்கும் உடலுக்கும் ஆபத்து ஏற்படுத்துதல்' போன்ற சட்டவிதிகள் போதாததாக இருக்கின்றன என்பதையும் இவர் சுட்டிக்காட்டினார். இவரும், ஏனைய உறுப்பினர்களும் எழுப்பிய உணர்ச்சிகரமான வேண்டுகோள்கள் செவிடன் காதில் ஊதிய சங்காக ஆனது. சட்டம் நிறைவேற்றப்பட்டது. பிரிட்டன் நாட்டு சட்டத்தின் அனைத்து பண்டைய அம்சங்களும் மட்டுமல்ல அதன் தவிர்க்கவியலாத விளைவான அவர்கள் நாட்டு நீதிமன்ற நடைமுறை விதிகளும் அச்சட்டத்தில் இடம் பெற்றன. இன்றளவும் இதுதான் நடைமுறையில் இருந்து வருகிறது. பின்வந்த காலங்களில் சில சட்ட மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மாதிரிக்கு, பரஸ்பர சம்மதத்தின் பேரில் மணவிலக்கு அளிப்பது, மனச் சித்ரவதை என்ற கருத்தாக்கம் போன்றவை சேர்த்துக்கொள்ளப்பட்டன. நீதிமன்ற முடிவுகளினால் ஏனைய (நல்ல) விதிகள் அமுக்கப்பட்டுவிட்டன. இந்த விதிகள், சாரமற்ற ஏனைய விதிகளோடு ஒரு இணக்கமற்ற சூழலில் நிலவிவருகின்றன. சீர் செய்யமுடியாத அளவிற்கு மணவாழ்வு நொறுங்கிவிட்டால் அவர்களுக்கு மணவிலக்கு அளித்துவிடவேண்டுமென பிரிட்டன் நாட்டு சட்டத்தில் மாற்றங்கள் செய்திருக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் இன்னும் இம்மாதிரியான மாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மணவிலக்கு குறித்த எதிர்மறையான கருத்துக்களே இன்னமும் ஆதிக்கநிலையில் இருந்து வருகிறது.

ஏழை மக்களைப் பொறுத்த அளவில், இந்த மணவிலக்கு முறைகள் அதிக செலவு ஏற்படுத்துவதாகவும் இன்னல்களைத் தருவதாகவும் இருக்கின்றன— என இச்சட்ட முன்வரைவின் எதிர்ப்பாளர்கள் ஒருபுறம் வாதாடினர். அதே சமயத்தில் இதன் ஆதரவாளர்களோ, இந்த

அம்சத்தை சாதகமானது என வாதிட்டனர். 'பண்புக் கேடான' மணவிலக்கையும், மறுமணத்தையும் மிகச் சாதாரணமாக அனுமதித்துவிடும் சமூகங்களின் மீது இவை இராணுவ ஒழுக்கத்தை சுமத்தும் என அவர்கள் வாதிட்டனர். இதில் வெளிப்படும் வெறுப்பும், இழிவும், ஆங்கிலேயரின் மதப் பிரச்சாரத்திலிருந்து பெறப்பட்ட தாகத் தெரிகிறது. **திரு. கமலா சௌத்திரி** என்ற பெண் உறுப்பினரின் பேச்சை மேற்கோளாகக் காட்டலாம்:

''நமது சமூகங்களில் பஞ்சாயத்து கூட்டப்பட்டு ஒரு சில நிமிடங்களில் மணவிலக்கு அளிக்கப்படுவதை நான் பார்த்து இருக்கிறேன். சில சமூகங்களில் பஞ்சாயத்துகூட கூட்டப்படுவதில்லை. அச்சமூகங்களில் பெண்களும் ஆண் களும் சுதந்திரமாக இருக்கிறார்கள். ஒருவரை ஒருவர் பிரிந்து தாங்கள் விரும்பும் யாரையாவது மறுமணம் செய்து கொள்கிறார்கள். இந்த சட்டத்தினால் நாம் அடையும் மிகப்பெரும் நன்மை என்னவென்றால் பண்பாட்டு பின்னணி இல்லாத நமது பிற்போக்கான சமூகங்கள் பண்பாட்டு மயமாகி அதன் தார்மீக நிலையும் உயரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதே''[45]

இந்த ஒரு பக்கச் சார்பு என்பது தனி நபரிடம் மட்டும் ஏற்பட்டது அல்ல. 'மரபு ரீதியான மணவிலக்குகள்' என இச்சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள விதியிலேயே இந்த ஒரு பக்கச் சார்பு உள் பொதிந்து இருக்கிறது. இதன்படி தனது மரபுகளை வலியுறுத்தி வரும் சில வகுப்புகள் தங்களது மரபான மணவிலக்கு உரிமைகளை தக்கவைத் துக்கொள்ளலாம். இச்சட்டத்தில் விளக்கி உள்ளபடி 'மரபு' என்பது 'ஒழுக்கக் கேடானதாகவோ' அல்லது 'பொதுக்கருத்துக்கு எதிரானதாகவோ' இருக்கக்கூடாது. ஆங்கிலேயர் காலத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளே இன்றளவும் முன்மாதிரிகளாகவே பின்பற்றப்பட்டு வருகிறது. இதன்படி ஒரு பெண் கணவனைப் பிரிந்து

அவன் சம்மதம் இல்லாமல் வேறுமணம் செய்து கொள்கின்ற ஒரு மரபு ஒழுக்கக்கேடானது என்ற காரணத்தைக் காட்டி செல்லாததாக்கப்பட்டது. தம்பதிகளில் யாரேனும் ஒருவரிடம் குறிப்பிட்டத் தொகையைப் பெற்றுக் கொண்டு மணவிலக்கு அளிக்கும் ஒரு சாதியின் மரபுகள் பொதுக்கருத்துக்கு எதிரானவை எனக் காரணம் காட்டி செல்லாத தாக்கப்பட்டது.[46]

மறுபுறம் ஒரு கணவன் இரண்டாவது திருமணம் செய்து கொள்ளுதல் அல்லது அவன் நம்பிக்கைக்கு உரியவனாக இல்லாதிருத்தல் அல்லது மனைவி மைனராக இருத்தல் ஆகிய காரணங்களை முன்வைத்து அவனது தாம்பத்திய உரிமையை (Restitutional of conjugal rights) தகுதி இழக்கச் செய்ய முடியாது.[48]

மணவிலக்கு குறித்த விசயத்தில் மரபுகளை காப்பாற்றுவது என்ற பெயரால் தனி நீதிபதியின் கருத்திற்கு அவற்றை விட்டுவிட்டது ஒரு ஏமாற்று முயற்சியாகவே இருந்தது. இவ்வாறாக, இம்மாதிரியான நேரங்களில் நீதிபதிகளே சட்டத்தை உருவாக்கிக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். திருத்தப்பட்ட சட்டத்தோடு, மரபுகளும் இணக்கமற்று இணைந்திருக்க பாராளுமன்றம் முடிவு செய்துவிட்டது.

இந்து திருமணச்சட்டத்தில் உள்ள ஏனைய விசயங்களிலும் பொதுச் சட்டம் என்ற முட்டாள்தனம் தெரிய வருகிறது. எண்ணற்ற வகையிலான திருமண முறைகள் பரவலாக நடைமுறையில் இருக்கும்பொழுது **சப்தபதி** (Saptapadi) திருமண முறையை மட்டுமே சட்டப்படி திருமண முறை என கருதப்படுவதன் அவசியம் என்ன? என்று கேரளப் பகுதி உறுப்பினர் **திரு. வி பி. நாயர்** கேட்டார். (மாதிரிக்கு **மருமக்கள் தாயத்** திருமண முறைகளில் எந்தப் புனிதச் சடங்குகளுமின்றி வெறும்

உடைகளை மட்டும் பரிமாறிக்கொண்டே திருமணம் நடைபெறும்) இதற்கு இச்சட்டத்தின் ஆதரவாளரான **திரு. சுஸ்கமா சென்** பின்வருமாறு பதிலளித்தார். ''சப்தபதி திருமண முறை மட்டும் தான் ஒரு முழுமையான திருமண முறை என்பதை அறிந்து கொண்டதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இம்முறை நவீன முற்போக்கான சமூகத்திற்கு பொருந்தக்கூடியதாய் இருக்கிறது''[49]

**மருமக்கள் தாயத்** திருமண முறையைக் காட்டிலும் இந்த **சப்தபதி** திருமணமுறை எப்படி மிக நவீனமானதாகவும் முற்போக்கானதாகவும் இருக்கிறது என்பது விளக்கப் படவே இல்லை. ஆனால் தனது செயல்களை மட்டுமே முற்போக்கானது என்றும், தனக்குப் பழக்கம் இல்லாத எந்த ஒரு நடைமுறையையும் பிற்போக்கானது என தன்னிச்சையாக முத்திரைக் குத்தும் ஒரு சீர்திருத்தவாத வகைக்கு இது ஒரு முன்னுதாரணம் ஆகும்.

அனைவருக்கும் ஒரே சீரான பொதுச்சட்டம் என்ற வளர்ச்சிப் போக்கானது எண்ணற்ற சமூகக் குழுக்களை இன்னலுக்கும் ளாக்கியது. அதனால், இதிலிருந்து சிலர் விலக விரும்பினர். (சீக்கியர்கள், கூர்க்குகள், வீர சைவர்கள் இன்னும் பலர்) சில வகுப்புகளில் பெண்களின் பாதுகாப்பற்ற வாழ்க்கை முறைக்கு காரணமான மரபு நடைமுறைகளை எந்தவிதத்திலும் மாற்றாமல் பெண்களுக்கிருந்த மேலதிக உரிமைகளை மட்டுமே இச்சட்டம் எடுத்துக்கொண்டது. இந்த வளர்ச்சிப்போக்கானது ஆங்கிலேயர் காலத்தில் இருந்தே தொடங்கிவிட்டது. மாதிரிக்கு இந்துப் பெண்கள் சொத்துரிமைச்சட்டம் (1937) பெண்களின் உரிமைகளை அதிகப்படுத்துவதற்கு என்ற வேடத்தைக்கொண்டிருந்தது. இதன்படி இந்து விதவை தனது கணவனின் சொத்தில் குறைவான உரிமை பெற முடிந்தது. (ஏற்கெனவே சுட்டிக்காட்டியது போல, உண்மையான **மிட்காசரா சாஸ்திர** விதிக்கு இது எதிரானது) சமணமத

விதவைகள் தங்கள் கணவனின் சொத்துக்களில் பெற்றிருந்த முழுஉரிமையை இந்தச்சட்டம் பறித்துக்கொண்டது. சமண மரபுச் சட்டப்படி இச்சொத்துக்களை விற்பதற்கு இருந்த முழு உரிமையையும் இச்சட்டம் பறித்துக்கொண்டது. இவவாறாக சமணப்பெண்களுக்கு கேடானதாகவே இந்த திருத்தப்பட்டச் சட்டம் அமைந்தது.

அதே சமயத்தில் சில சமூகங்களில் விதவைகளுக்கு இருந்த பலவீனமான பொருளாதார உரிமைகளை இச்சட்டம் ஒழிக்கவில்லை அல்லது மாற்றம் செய்யவில்லை. மாதிரிக்கு அரியாணா, பஞ்சாப் பகுதிகளைச் சார்ந்த ஜாட் சாதிகளிடையே உள்ள **ஹரிவா** திருமண முறைப்படி அவ்விதவைப்பெண்களுக்கு கணவனின் சொத்தில் எந்த உரிமையும் தரப்படவில்லை. இந்துப்பெண்கள் சொத்துரிமைச் சட்ட.த்தினாலோ அல்லது இந்து வாரிசுரிமைச் சட்டத்தினாலோ (1956) இந்நிலை மாறிவிடவில்லை. இந்த ஹரிவா திருமணமுறைப்படி விதவை இறந்துபோன கணவனின் தம்பிக்கு மனைவியாக ஏற்றுக்கொள்ளப்படுவாள். இது சாத்தியப்படவில்லையெனில் கணவனின் அண்ணன் மனைவியாக ஏற்றுக்கொள்ளப்படுவாள். அல்லது கணவனின் பங்காளிக்கு மனைவியாக ஏற்றுக் கொள்ளப்படுவாள். பெரும்பாலான நேரங்களில் இப்பெண் ஒரு குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்து வருவார். அதேபோல கணவனின் தம்பி ஏற்கெனவே திருமணமானவராக இருந்தால் இது இருதார மணமுறையில் முடியும். பெரும்பாலான நேரங்களில் விதவைகளின் கருத்துக்களை யாரும் விரும்புவதில்லை. ஆனால் அவர்களை நிர்ப்பந்திப்பர். காரணம், கூட்டுக்குடும்பச் சொத்தில் விதவைகளுக்கு உரிமை கோருவது நடைமுறைக்கு ஒவ்வாததாக இருந்தது.

இருதார மணமுறைக்கு அல்லது குழந்தைத் திருமணத்திற்கு எதிரானச் சட்டம் வெளிப்படையாகவே ஏளனத்

துக்குரியதாக இருந்த நேரத்தில் இதைமாற்ற அரசாங்கம் மாற்றுவழி செய்யவில்லை. மாறாக சில சமயங்களில் இதை ஊக்குவிக்கவே செய்தது. மாதிரிக்கு, போர்வீரர் களின் விதவைகள் மிகப்பெரும் தொகையை நட்ட ஈடாக பெற்றுவந்ததோடு நிலமானியம், இராணுவக் காப்புறுதி சிறப்பு ஓய்வூதியம், குழந்தைகள் வளர்ச்சி முதலிய கூடுத லான நன்மைகளும் பெற்றுவந்தார்கள். பாதுகாப்பு அமைச்சகம் அரியாணா பஞ்சாப் பகுதிகளைச் சார்ந்த விதிவைகள் கணவனின் சகோதரனை மறுமணம் செய்து கொள்ளும் பழக்கத்தைக் கட்டாயப்படுத்தியது. விதவை தன் கணவன் குடும்பத்திற்கு வெளியே திருமணம் செய்து கொண்டால் சிறப்பு சலுகைகள் அனைத்தும் நீக்கப்படும் என்ற விதியைக் காட்டி இதைச்செய்தது. திருமண முறை யில் இம்மாதிரி பாரபட்சம் காட்டுவது, இந்து வாரிசுச் சட்டத்தை கேலிக்குள்ளாக்குவதாக இருக்கிறது. காரணம் திருத்தப்பட்ட சட்டத்தின்படி கணவனின் சொத்தில் ஒரு விதவைக்கு முழுஉரிமை கிடையாது. கட்டுப்படுத்தப்பட்ட உரிமைகளே இருக்கிறது.[59]

மருமக்கள் தாய முறையைச் சார்ந்த பெண்களுக்கு ஏற்பட்ட கதி இந்துச் சட்டத் தொகுப்பின் பயனாகக் கிடைத்த பின்னடைந்த போக்குகளுக்கு ஒரு தெளிவான மாதிரியாக இருக்கிறது. எவ்வளவு பெண் குழந்தைகளை வேண்டுமானாலும் தத்து எடுத்துக்கொள்வது, இதற்கு மேலாக தமது பாட்டன், தகப்பன் சொத்துகளில் இப் பெண்களுக்கிருந்த முழுமையான மாற்ற முடியாத உரிமை ஆகியவை உள்ளிட்ட அனைத்து உரிமைகளையும் இழந்த னர். இச்சட்டத் தொகுப்பை ஆதரித்த **திரு ஏ.கருணாகர மேனன்** இச்சட்டத்தொகுப்பில் மருமக்கள்தாய முறை களையும் இணைத்துக்கொள்ளவேண்டும் என்றும், அவ் வாறு இயலவில்லை என்றால், மருமக்கள் தாய முறை சமூகங்களுக்கு இச்சட்டத்திலிருந்து விதிவிலக்குத் தர வேண்டும் எனவும் வாதிட்டார்.

''நாம் தற்போது இருக்கும் நிலைமையிலிருந்து கீழிறங்கி செல்லக்கூடாது. இந்த சட்ட விதிகள், ஆணாதிக்க கருத்துக்களிலிருந்து உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சகோதரிக்கோ அல்லது அவளின் குழந்தைகளுக்கோ வாரிசாக ஏன் ஒரு பேரன் அல்லது பேத்தி இருக்க வேண்டும்? மலபார் பகுதி மக்கள் நிச்சயம் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்''[51]

துரதிருஷ்டவசமாக மக்கள் குறிப்பாக, மலபார் பகுதி பெண்கள் வன்மமாக தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை. 'மிக கவனத்தோடு செய்யப்பட்ட இந்த மாற்றங்கள் தரும் தாக்கங்களை' இச்சமூகங்கள், போதுமான அளவு உணராமல் இருந்திருக்கலாம்[52] என **திரு. எம். வி. வல்லோடி** வாதிடுவது ஒரு பகுதி காரணமாக இருக்கமுடியும். உண்மையில், **மருமக்கள் தாயம், நம்பூதிரி அலியசந்தானம்** ஆகிய சமூகங்கள் இந்து சட்ட அதிகாரத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தன. ஆனால் **அம்பேத்கர்** தலைமையிலான தேர்வுக்குழு, இதை மாற்றி விதிவிலக்கை நீக்கிவிட்டனர். 'சட்டக் குழுவின் உற்சாகம் பகுத்தறிவின் எல்லைகளை தாண்டுவதாக'[53] அம்பேத்கர் குற்றம் சாட்டினார். ஆனால், இந்த அறிக்கை வெளியான போதிலும், அம்பேத்கரோ, அரசாங்கமோ இந்தப் பிரச்சனையை விவாதத்தின் மையப்பொருளாக்கவில்லை. தேர்வுக்குழுவின் முடிவை அப்படியே நடைமுறைப்படுத்திவிட்டனர்.

சட்டத்தொகுப்பில் வடஇந்திய முறைகளுக்கு காட்டியபெரும் சார்பையும் பொதுவாக தென்னிந்தியா குறித்த அலட்சியத்திற்கும் இது ஒரு அடையாளமாகும். 1948இல் இருநத தேர்வு கமிட்டியில் ஒருவரும்கூட மருமக்கள் தாய மரபுகளைப் பற்றி புரிந்து கொண்டவரில்லை. **திரு. வி.பி. நாயர்** அவர்கள் இதை சுட்டிகாட்டியுள்ளார்.[54] புதுக்கோட்டையைச் சேர்ந்த **வள்ளத்தாரர்கள்** போன்ற

# காப்பாளர் சட்டத்தில் மாறுதல்கள்

இந்துக்களுக்கு ஒரு சீரான பொதுச்சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் அரசாங்கத்தின் கைகள் வலுப்படுத்தப்படுகிறது. இதனால் ஏனைய சமூகங்களுக்கும் இதை விரிவுபடுத்த உதவியாய் இருக்கும். ஒரே சீரான சட்டத் தொகுப்பை நியாயப்படுத்த அடிக்கடி வைக்கப்படும் வாதம் இதுவே. ஆயினும், எதார்த்தத்தில் இந்துக்களுக்கு மதச்சார்பற்ற என்று சொல்லப்படுகின்ற சட்டத்தை (எதார்த்தத்தில் இந்துச் சட்டத்தின் சில வகைகளையும் பிரிட்டன் கிருத்துவ சட்டத்தின் சில வகைகளையும் சேர்ந்த ஒட்டே இது) நிறைவேற்றுவதன் மூலம் சீரான பொதுச் சட்டம் என்ற போக்கிலிருந்து விலகிச்செல்லும் எதிர்மறை விளைவே ஏற்பட்டிருக்கிறது. இவற்றிற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை கட்டுரையின் முடிவில் பார்ப்போம். பாராளுமன்றம் சட்டங்களைத் தொகுத்து அதற்கு இந்துச்சட்டம் என பெயரிட்டதன் மூலம் இதற்கு முன்னர் அனைத்து சமூகங்களுக்கும் நடைமுறையில் பொருந்தி வந்த பழம் சட்டங்களை அகற்றிவிட்டது. ஆகவே சீரான சிவில் சட்டம் எந்த எதிர்ப்புமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்துச் சிறுபான்மையினர் மற்றும் காப்பாளர் சட்டம் (1956) இதற்கு ஒரு முனைப்பான உதாரணமாகும்.

காப்பாளர் மற்றும் காப்புச்சட்டம் 1890 என்பது ஏற்கெனவே நடைமுறையில் இருந்துவந்தது. இது அனைத்துச் சமூகங்களையும் கட்டுப்படுத்தி வந்தது. இச்

சட்டத்திற்குத் துணையாக இந்து சிறுபான்மையினர் காப்பாளர் சட்டம் நிறைவேற்றப்பட்டது.[58]

பழம் சட்டத்தையே தேவைப்பட்ட இடத்தில் திருத்தாமல் இந்துக்களுக்கு ஒரு தனிச்சட்டம் இயற்ற வேண்டிய அவசியம் என்ன என்பது பற்றி விளக்கப்படவில்லை. இந்துச் சிறுபான்மையினர் மற்றும் காப்பாளர் சட்டத்தில் இந்து என்று சொல்வதற்கு குறிப்பாக ஒன்றுமில்லை. உண்மையில், இச்சட்டப்பிரிவு அரசு அதிகாரத்துவ மனநிலையில் இருந்தே உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்து அல்லது வேறு எந்த இந்திய சமூகத்திற்கும் தொடர்பில்லாத பெற்றோர்களின் அதிகாரத்தில் அரசாங்கம் தலையிடுவதற்கு இச்சட்டம் அதிகாரம் தருகிறது. சீரான சிவில் சட்டம் என்ற பாதைக்கு ஒரு சட்டம் வழி அமைத்திருக்கிறது என்றால் அது இச்சட்டமாகத் தான் இருக்கவேண்டும். இந்துக்களுக்கு மட்டுமே பொருந்தக்கூடிய இந்துமதக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்தது போல அதற்கு தன்னிச்சையாக இந்து என முத்திரை குத்தப்பட்ட சட்டங்கள் நிச்சயமாக சீரான பொதுச் சட்டத்திற்கு இதைப்போல வழியமைக்கவில்லை. **திரு. தாக்கூர்தாஸ்** பின்வருமாறு வாதிடுகிறார்:

''இது முற்றாகவே அவசியமற்ற சட்டமாகும். பொதுச் சிவில் சட்டம் என்ற கொள்கைக்கு இது எதிரானதாகும். இச்சட்ட விதிகள் அனைத்துத் தேசிய இனங்களுக்கும் சீராக பொருந்தாததால் இது ஒரு விசமத்தனமான சட்டமாகும். இதன்படி ஒரு இந்து மைனர் குழந்தை முசுலீம் மைனர் குழந்தையிலிருந்து, கிருத்துவ மைனர் குழந்தையிலிருந்து முழுக்க வேறுபட்டதாகும். இப்போதுள்ள சட்டத்தைக் காட்டிலும் இது மிகுந்த வேறுபாடுகளை உருவாக்குகிறது.''[59]

இதற்கு முந்தைய நடைமுறையில் அனைத்துச் சமூகங்களிலும் ஒரு குழந்தைக்கு காப்பாளர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்து வந்தது. காப்பாளர் மற்றும் காப்புச் சட்டம் பிற மத சமூக குழுக்களுக்கும் நன்மை அளிப்பதாய் இருந்து வந்தது. ஆயினும் இந்துச் சிறுபான்மையினர் மற்றும் காப்பாளர் சட்டத்தின் இயற்கையான காப்பாளர் (Natural Guardian) என்ற ஒரு செயற்கையான கருத்தாக்கம் அறிவிக்கப்பட்டது. இக்கருத்தாக்கமும் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகவே தெரிகிறது. ''இந்த நாட்டிலும் கூட (இங்கிலாந்து) இந்துக்களிடையே இருப்பதைப்போல தந்தை தான் குழந்தைகளின் இயற்கையான காப்பாளராவார்''[60]

தந்தை இல்லாதுபோய்விட்டாலோ அல்லது மன நிலை சரியில்லாது இருந்தாலோ தாய் தான் இயற்கையான காப்பாளராக இருப்பார். ஆனால் இச்சட்டத்தில் அப்படியேதும் குறிப்பிடப்படவில்லை. இந்தக் குறுகிய கருத்து மேற்கத்திய சமூக அமைப்பு மற்றும் கருக்குடும்ப முறையிலிருந்தே வந்திருக்க வேண்டும் என்பது தெளிவு. ஒரு உறுப்பினர் இதை பின்வருமாறு சுட்டிக்காட்டியிருந்தார்:

''இந்துச் சட்டப்படி இயற்கையான காப்பாளர் என்பதெல்லாம் ஒன்றும் கிடையாது. உண்மையில் சொல்லப்போனால் இயற்கையான காப்பாளர் என்பதிலிருந்து இயற்கையென்பதை எடுத்துவிடலாம். இந்துச் சட்டப்படி ஒவ்வொரு நபருமே நல்ல காப்பாளர் தான். உண்மையான ஒவ்வொரு காப்பாளருமே நல்ல காப்பாளர்தான்.''

''தந்தை தாய் உறவுக்கு அப்பால் வேறு எந்த உறவுகளுமே இல்லை என்ற நிலைக்கு இந்தியா வளர்ந்து

விட்டது என நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் தாத்தா, தாய்மாமன், இன்னும் எண்ணற்றோர் தந்தை, தாய், இறப்புக்குப் பின் குழந்தையை வளர்த்து வருகிறார்கள்''61

இந்தியக் கலாச்சாரம் என்று பெயரிடப்பட்ட இந்துக்களும் இந்துக்கள்-அல்லாதவர்களும் பொதுவாக பங்கு பெற்றுள்ள ஒரு குடும்ப சமூக அமைப்பு முறையே மேலே விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிறுபான்மையினர் மற்றும் காப்பாளர் சட்டத்தின் மூலமாகத் தேவையற்ற மனக்கசப்புக்களையே இச்சட்டம் உருவாக்கியிருக்கிறது, எந்தவிதத்திலும் இச்சட்டம் நடைமுறைக்கு ஒத்துவராது. தந்தையோ அல்லது தாயோ தங்கள் சொந்த முடிவின் கீழ் நியமிக்கும் ஒருவரோ அல்லது நீதிமன்றம் நியமிக்கும் ஒருவரோதான் காப்பாளராக ஏற்றுக்கொ[illegible]ர்கள் என இச்சட்டம் கூறுகிறது உயில் எழுதுவது என்பது இந்து மரபில் இல்லாத விசயம், ஆகவே, இந்த சட்டத்தில் 'இந்து' என்பதற்கு எந்த அம்சமும் இல்லை. காப்பாளர் மற்றும் காப்புச்சட்டத்தில் ஒரு பிரிவாகவே இவ்விதி இருந்திருக்க வேண்டும். இந்தியச் சூழ்நிலைக்கு இது பொருத்தமற்றது. இதை ஒரு உறுப்பினர் சுட்டிக்காட்டினார். 80% மக்கள் உயில் என்றால் என்னவென்று அறிந்திருக்காத ஒரு நாட்டில், எண்ணற்றோர் அறியாமையில் இருக்கும் ஒரு நாட்டில் தந்தையும் தாயும் இல்லாத ஒரு நிலையில் வழக்கு மன்றத்திற்குச் சென்று குழந்தைகளுக்கு காப்பாளர்களை நியமிக்க வேண்டும் என நீங்கள் சொல்ல விரும்புகிறீர்களா?''62

ஒரு காப்பாளர் அவர் தந்தையாக இருந்தாலும் கூட குழந்தைகளின் சொத்துக்களை நீதிமன்ற அனுமதியின்றி விற்க இந்துச் சிறுபான்மையினர் மற்றும் காப்பாளர் சட்டம் அனுமதிப்பதில்லை. இவ்விதி முழுக்கவே நடைமுறைக்கு ஒவ்வாதது. (தந்தை இறந்துபோன சமயத்தில்)

ஒரு உயிலின் மூலம் காப்பாளரை நியமிக்கும் உரிமையை தாய்க்கு இச்சட்டம் அளிக்கிறது. ஒரு தந்தை உயிலின் மூலம் தான் இறந்ததுக்குப் பின்னால் வேறொருவரை காப்பாளராக நியமிப்பதன் மூலம் தாயின் உரிமையை பறிக்கும் அதிகாரத்தை இச்சட்டம் பறித்துக் கொண்டது. இவை இச்சட்டத்தின் சாதகமான அம்சங்க ளாகும். இருப்பினும் நிச்சயமாக இவை பெண்களுக்கு சமஉரிமை தரவில்லை. சட்டத்தில் கூறியுள்ளதுபோல ஐந்து வயது வரை குழந்தை தாயின் பாதுகாப்பில் இருக்க வேண்டும் என்பதற்கு பதிலாக 12 லிருந்து 14 வயது வரை தாயின் பாதுகாப்பிலே இருக்கவேண்டும் என்ற மாற்றத்தை பல உறுப்பினர்கள் முன்மொழிந்தார் கள். ஆனால் சட்ட அமைச்சர் திரு. **பட்டாஷ்கர்** இத்திருத் தத்தை மறுத்துவிட்டார். ''பெற்றோர்களுக்கிடையே முடிவில்லா சச்சரவை இது ஏற்படுத்தும்'' என அமைச்சர் காரணம் கூறினார்.[63] இச்சட்டவிதியின்படி தாயோ அல்லது தந்தையோ மதம் மாறிவிட்டால் அவர்கள் குழந்தைகளின் இயற்கைக் காப்பாளர்களாக இருக்கமுடியாது. இதன் மூலம் இச்சட்டம் மதச்சார்பை உருவாக்கிவிட்டது. (இச்சட்டத்தின் ஆதரவாளர்கள் பலர் இந்த அம்சத்தை எதிர்த்தனர்) இந்துச் சட்டத்தில் இம்மாதிரியான ஒரு பிரிவு இல்லை. இந்த சட்ட முன் வரைவிலேகூட இயற்கை என்பதற்கு (காப்பாளர்) பெற்றோர்களின் உடலியல் அம்சங்களே அடிப்படையாக கூறப்பட்டிருக்கிறது. பெற்றோர்களின் மத அடிப்படை அல்ல. இச்சட்டத்தை எதிர்த்த இந்து மகா சபையின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இச்சட்ட விதியை மட்டுமே ஆதரித்தது குறிப்பிடத்தக்க ஒன்று. இந்துக்களை இந்துக் கள் என்ற தளத்தில் ஒருங்கிணைக்கும் ஒரு போக்கின் பகுதியே இச்சட்டம் என அரசாங்கத் தரப்பில் விளக்கப் பட்டுள்ளது. **அம்பேத்கர்** வார்த்தைகளில் சொல்வதானால் ''ஒரு இந்துத் தந்தை இறந்துபோனாலோ அல்லது மதம் மாறினாலோ தனது குழந்தையின் இயற்கைக் காப்பாளர்

என்ற அதிகாரம் பறிபோய்விடும் என்பதே இதில் ஏற்பட்ட முதல் திருத்தம். தந்தை தான் உண்மையான காப்பாளர். அவர் மதம் மாறினாலோ அல்லது வேறு ஏதேனும் மாற்றங்களோ இடம் பெற்றால்கூட அவர் தான் தன் குழந்தையின் இயற்கைக் காப்பாளராக தொடர்ந்து இருந்து வருவார் என்றே உண்மையான சட்டத்தில் இருந்தது. இந்துச் சமூகத்தையும் அதன் சட்டங்களையும் ஒருமுகப்படுத்தவே இப்புதிய சட்டம் என சட்ட ஆய்வுக்குழு உணர்ந்ததால் இந்த விதியை ஒரு தந்தை ஒரு இந்துவாக நீடிக்கும்வரையில் இயற்கைக் காப்பாளராக நீடித்துவருவார் என்ற நிபந்தனையை சுமத்துவது விரும்பத்தக்கதாக இருந்தது.[64]

இந்துத் தத்தெடுத்தல் & பேணுதல் (பராமரிப்பு) சட்டமும் (1956) இதே வகையான ஒரு ஒட்டு முயற்சி தான். **டட்டகா (DATTAKA)** என்ற இந்து தத்தெடுத்தல் வகைகளில் ஒன்றையும், ஆங்கிலேயர் தத்தெடுப்புச்சட்டத்தையும் கலந்ததே இச்சட்டமாகும். இதன் விளைவு இச்சட்டத்தில் பகுத்தறிவுக்கு ஒவ்வாத எண்ணற்ற குளறுபடிகள் இடம் பெற்றுள்ளன. ஒரு நபருக்கு சொந்த மகன் இருந்தாலோ அல்லது தத்துமகன் இருந்தாலோ புதிதாகத் தத்தெடுக்க அனுமதியில்லை. சொந்த மகளோ அல்லது தத்துமகளோ இருந்தால் ஒரு மகளைத் தத்தெடுத்துக்கொள்ள அனுமதியில்லை போன்ற குளறுபடிகள் இருக்கின்றன. இதனால் ஒரு நபர் ஒரு சிறுவன். சிறுமி ஆகிய இருவருக்கு மேல் தத்தெடுப்பதைக் கட்டுப்படுத்துகிறது.

ஒரு மகள் தத்தெடுக்கப்படுவதை இச்சட்டம் அனுமதிக்கிறதென அரசாங்கம் பீற்றிக்கொள்கிறது. **டட்டகா சந்திரிகா** என்ற சாத்திர நூலை ஒரு ஆங்கிலேயர் தவறாக மொழியாக்கம் செய்ததை வைத்து ஒரு ஆங்கில நீதிபதி பெண் தத்து எடுப்பது செல்லாதது என அறிவித்ததாகச்

சட்ட அமைச்சர் கூறுகிறார். இதற்கு முன்பு எண்ணற்ற நீதிமன்றங்கள் பெண்கள் தத்தெடுக்கப்படும் மரபை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. ஒரு நாட்டியக்காரி ஒரு பெண் குழந்தையை தத்தெடுப்பதை பம்பாய் கல்கத்தா நீதிபதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. தொழில்முறை நடனம் என்பது ஒழுக்கக்கேடானது என நீதிபதிகள் கருதியதே இதற்குக் காரணமாகும். சென்னை நீதிமன்றத்தின்இரண்டு தீர்ப்புகள் இம்மாதிரியான தத்தெடுப்பை ஏற்றுக்கொண்டன. அதுவும் ஒரே சமயத்தில் இரண்டு பெண்கள் தத்தெடுக்கப்படுவதை ஏற்றுக்கொண்டது. இம்மாதிரியானத் தத்தெடுப்பு விபச்சாரத்திற்கு அல்ல என்பதை மட்டுமே பார்த்தது. சில முன்னோடியான இந்து மரபு சிந்தனை முறைகள் பெண்கள் தத்தெடுக்கப் படுவதன்மீது எந்தக் கட்டுப்பாடும் சுமத்தவில்லை. **திரு. நந்தா பண்டிட்** என்பவர் தன் **தத்தக்காமிமான்ஸை** என்ற நூலில் பெண் தத்தெடுப்புக்கு ஆதரவாகவே இருக்கிறார். பெண்கள் தத்தெடுக்கப்படுவது, தத்தெடுப்பாளரின் (மற்றும் அவர் முன்னோர்களின்) மன அமைதிக்குப் பொருத்தமானது என்ற கருத்துக்கொண்டிருந்தார். எதார்த்தத்தில் பெரும்பாலான சமூகங்களில் மரபு வழக்கப்படி பெண் குழந்தைகளைத் தத்தெடுப்பது தொடர்ச்சியாக இருந்து வந்திருக்கிறது. மாதிரிக்கு தடுக்கப்பட்ட சகோதர மணத்தை சட்டப்படி செல்லுபடியாக்க மாற்று கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு உறவினர் அல்லது நபர் மணப்பெண்ணை தத்தெடுப்பதன் மூலம் அப்பெண்ணின் கோத்திரத்தை மாற்றிக் கொண்டார்கள். இதைப்போலவே இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் பெண்கள் தங்கள் விருப்பத்தின்படித் தத்தெடுப்பதை மரபுகள் அனுமதித்து இருக்கின்றன. ஆனால் திருத்தப்பட்ட இச்சட்டமோ திருமணமான ஒரு பெண் தன் சொந்த உரிமையின்படியோ அல்லது கணவனுடன் சேர்ந்தோ தத்தெடுப்பதை அனுமதிக்கவில்லை. ஆண் தன் மனைவியின் விருப்பத்தைக் கேட்காமலே தத்தெடுத்

துக்கொள்ளலாம். இவ்விதிகள் சமத்துவத்திற்கு எதிரானவை எனச் சுட்டிக் காட்டியபொழுது சட்ட அமைச்சர் **திரு. படாஸ்கர்** இம்மாதிரியான சம உரிமைகள் வெகுதூரம் கொண்டுபோய்விடும் என கூறினார்.

''கணவனும் மனைவியும் தனித்தனியாக தத்தெடுப்பார்கள் என நான் நினைக்கவில்லை. அம்மாதிரி செய்வது இச்சட்டத்தை கேலிக்குரியதாக்கும். மனைவிக்கு அந்த உரிமையைத் தரமுடியாது. இதுதான் உண்மை. அந்த அளவிற்கு முன்னோக்கிச் செல்ல நான் விரும்பவில்லை அல்லது சமூகத்தின் நலன் என்ற அடிப்படையில் கூட இது விரும்பத்தக்கது அல்ல. தத்தெடுப்பது என்பது முதன்மையாகக் கணவன் சம்பந்தப்பட்ட விசயமாகவே இருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன்.''[65]

மிதிலா பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் **'கிரித்திமா'** என்ற ஒரு தத்து மரபின்படி ஒரு மனைவி அல்லது விதவை தன் கணவனின் அல்லது மற்றவர்களின் சம்மதம் இல்லாமலேயே தனக்கு ஒரு மகனைத் தத்து எடுத்துக்கொள்ளும் முறை இருந்து வந்ததை **திரு. படாஸ்கர்** கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை.[66] இந்தத் தத்து முறைக்கு சடங்குகளோ எழுத்துபூர்வ அத்தாட்சியோ தேவையில்லை என்ற போதிலும் இது சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருந்து வந்தது. **'கிரித்தமா** தத்தெடுக்கும் முறை ஒரு மதச் சார்பற்ற தத்தெடுக்கும் வகையாகும். ஆனால் **'தாத்தாகோமம்'** என்ற தத்து முறையானது மதம் சார்ந்த ஒரு முறையாகும்'' என திரு. **டெக்சங்** சுட்டிக்காட்டினார்.[67]

வியப்படையும் வகையில் இந்துத் தத்தெடுப்பு & பேணுதல் சட்டம் **தத்தா கோமம்** அல்லது **தத்தாக்கா** வகைப்பட்ட தத்தெடுப்பை மட்டுமே ஏற்றுக்கொண்டது. வேறுவகை தத்தெடுப்பு மரபு வழக்கங்களான **கிரித்துமா**,

**கில்லோத்தம்** (தென்னிந்தியாவில் நடைமுறையில் இருந்த மருமகனை தத்தெடுக்கும் முறை) **துவாய முசயன்** (ஒரே சமயத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மகன்களைத் தத்தெடுத்துக்கொள்வது) ஆகிய முறைகள் செல்லாததாக்கப்பட்டன. இதற்கு எந்த விளக்கமும் தரப்படவில்லை. இந்தத் தத்துவ முறைகள் சட்டப் புத்தகங்களில் தெளிவாக எழுதப்பட்டிருக்கவில்லை. ஆனால் வாழ்க்கை நடைமுறையில் இருந்து வந்தவை. மாதிரிக்கு எனது நண்பர் திரு.**கிரி தேசிங்கர்** பின்வருமாறு நினைவு கூறுகிறார் : வடகர்நாடக கிராமப் புறத்தில் வந்த இவர் மனைவியின் மாமா விதவையான இவர் மாமியாரால் தத்தெடுத்துக் கொள்ளப்பட்டவர்தான். இதனால் கணவனும் மனைவியும் சகோதரன் சகோதரி ஆகிறார்கள். ஆனால் இது முழுமையான சட்டப்படியான தத்தெடுத்தலாகக் கருதப்பட்டு வந்தது. இம்மாதிரியான தத்தெடுக்கும் வழக்கங்களை சட்டப்படி செல்லாமல் செய்தற்கு அபத்தமான விளக்கத்தை அம்பேத்கர் முன்வைக்கிறார்.

''இந்தப் பேரத்தில் சம்மந்தப்பட்ட இரு குடும்பங்களும் தங்கள் சொத்தை காப்பாற்றிக்கொள்ளச் செய்த தந்திரமே இம்மாதிரியான தத்தெடுப்பு வழக்கங்கள். நாம் அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம். ஒரு சிலரின் கைகளில் சொத்துக்கள் குவிவதை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது வழிகாட்டும் கொள்கைகளில் ஒரு அம்சமாகும். ஆகவே இம்மாதிரியான தந்திரங்களை நாம் சகித்துக் கொள்ள முடியாது''[68]

மரபான தத்து முறைகளை செல்லாததாக்கியதன் மூலம் வாரிசு இல்லாத சொத்துக்கள் அரசாங்கத்திடமே சேர்ந்தது என்பதை இங்கே குறிப்பிட்டுக் காட்ட வேண்டியிருக்கிறது. அரசாங்கத் தலையீட்டிற்கு இம்மாதிரியான

ஒரு முட்டாள்தனமான நியாயத்தை கற்பித்ததால் இயல்பாகவே இவரின் முடிவு பின்வரும் நிலையில் இருந்தது. 'மேலும் உண்மையான தத்தெடுப்பை விரும்பும் நபர்கள் சட்டம் அனுமதித்த **தத்தாக்கா** தத்து முறையின் விதிகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் ஏன் உடன்படக்கூடாது என்பதற்கு எந்தக் காரணமும் கிடைக்கவில்லை.''[69]

**தத்தாக்கா** தத்துமுறையின் உண்மையான பெற்றோர்கள் அல்லது காப்பாளர்கள் ஒரு சடங்கைச் செய்து தத்து கொடுக்கவேண்டும். இதன் பொருள் தத்து தரும் சடங்கை செய்துதர ஒரு சட்டக்காப்பாளர் (இந்து சிறுபான்மையின் மாற்றும் காப்பாளச் சட்ட விளக்கத்தின்படி) இல்லாத அனாதைக் குழந்தைகளை யாரும் தத்தெடுத்துக் கொள்ள முடியாது. உண்மையான தத்து முறைகள் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதே இதன் பொருள். ஒரு பெற்றோர்கள் சிறுவயதிலிருந்தே குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்து வந்தாலுங்கூட இதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்காடலாம். தத்து சடங்குகள் நடத்தப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டியோ அல்லது அக்குழந்தையை தத்துக்கொடுத்தவர் சட்டப்படியான காப்பாளர் அல்ல என்பதைக் காட்டியோ இதை செல்லாததாக்க முடியும். இந்த **தத்தாக்கா** தத்துமுறை எண்ணற்ற சட்டச் சிக்கல்களுக்கு வழிவகுத்தது. பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்களும் இதைச் சுட்டிக் காண்பித்தனர். ஆனால் அரசாங்கம் இதை மறுக்கவில்லை. இந்தச் சட்டத்திற்கு இந்து என்ற முத்திரை குத்தவேண்டிய கவலையினால் அரசாங்கம் தத்துச் சடங்கை இந்துமயத்திற்கு ஒரு அடையாளமாகப் பார்த்தது. இந்துக்கள் பின்பற்றி வந்த மதச்சடங்குகள் இடம் பெறாத ஏனையத் தத்துமுறைகளை அரசாங்கம் பின்பற்ற விரும்பவில்லை.

இந்தியாவிலுள்ள அனைத்துச் சமூகங்களும் ஒன்றையொன்று மரபு வழக்கங்களினால் பாதித்து வந்திருக்கின்றன. அருகே வசித்துவந்த சமூகக்குழுக்கள் ஒரே

மாதிரியான மரபு வழக்கங்களை உருவாக்கிக்கொண்டன. இம்மாதிரியான ஒரு சூழலில் இந்துச் சிறுபான்மையினர் மற்றும் காப்பாளர் சட்டத்தைப் போலவே இந்த இந்துத் தத்து வளர்ப்புச் சட்டமும் எதிர்திசையில் செல்லும் ஒரு அவசியமற்றச் செயல் என திரு. **தாக்கர்தாஸ் பார்கவா** மீண்டும் சுட்டிக்காட்டினார்.

''தற்போது பஞ்சாபிலுள்ள இந்துக்கள் முசுலீம்கள் கிருத்துவர்கள் ஆகிய அனைவருமே தங்கள் வாரிசுகளை நியமித்துக்கொள்ளும் மரபு வழக்கத்தைப் பின்பற்றி வருகிறார்கள். இந்துக்களுக்கு தனிச்சட்டத்தை உருவாக்கு வது என்ற தவறை மீண்டும் செய்கிறோம். நீண்ட காலம் காத்திருந்து பின் அனைவருக்கும் ஒரு பொதுச் சட்டத்தை உருவாக்குங்கள். இந்து மதத்திலிருந்து ஒரு சில அம்சங் களை மட்டுமே எடுத்துக்கொண்டு மற்றவற்றை விட்டு விட்டீர்கள். ஒவ்வொருவரும் விருப்பப்பட்ட வழிமுறை களை பின்பற்றலாம் என நீங்கள் கூறினால் அது மிகுந்த நன்மை அளிப்பதாகவே இருக்கும்''.[70]

இதற்கு சட்ட அமைச்சர் திரு. **படாஸ்கர்** பின்வரும் பதிலைத் தந்தார். வாரிசுகளை நியமிப்பது என்ற பஞ்சாப் பகுதிமரபு வழக்கம், இந்துத் தத்தெடுத்தல் வளர்ப்பு சட் டத்திலுள்ள தத்தெடுக்கும் முறையிலிருந்து சாராம்சத்தில் மாறுபட்டது. ஆகவே இந்தத் தத்தெடுத்தல் & பேணுதல் சட்டத்தை பஞ்சாப் பகுதி மரபு வழக்கத்தை ஒழித்து விடாது ஆனால்,சட்டத்தில் காணப்படும் முரண்பாடுகள் பற்றிய தெளிவான கேள்விகளுக்கு அவை விடையளிக்க வில்லை. தத்தெடுத்தல் என்பது ஒரு குழந்தையை வளர்த்து வருவதற்காகவா அல்லது வாரிசுக்காகவா என்ற விசயத்தில் இச்சட்டக்காவலர்களுக்கு ஒரு தெளிவு இல்லாததினால்தான் இவ்வளவு முரண்பாடுகள் உருவாகி யிருக்கின்றன. மாதிரிக்கு, ஒரு நபருக்கு உயிரோடு ஒரு மகனோ அல்லது பேரனோ அல்லது ஒரு கொள்ளுப்

பேரனோ இருந்தால் அந்நபருக்கு ஒரு மகனை தத்தெடுத்துக்கொள்ள அனுமதியில்லை. ஆணாதிக்க வழியில் உயிரியில் ரீதியாக ஆண்வாரிசுகளில் ஒரு தொடர்பு விட்டுப் போகாமல் தடுப்பதற்கான ஒரு விருப்பமே இது என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது. ஒரு மனிதன் ஒரு மகனை தத்தெடுப்பதற்காக தன் மகளின் அல்லது தன் பேத்தியின் வாரிசுரிமையை கைவிடுவது என்பது பெண் சமத்துவ கருத்துக்கு எதிரானது என திரு. **தாபி** அவர்கள் வாதிட்டார்கள். இவர் இச்சட்டத்திற்கு ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார். இச்சட்டத்தின் எதிர்ப்பாளரான திரு. **தாக்குர் தாஸ் பார்கவாவும்** இச்சட்டத்தின்ஆதரவாளரான திரு. **சுஸ்மா சென்னும்**இத்திருத்தத்தை ஆதரித்தனர். ஆனால் **படாஸ்கர்** இதை மறுத்துவிட்டார். உயில் எழுதி வைப்பதன் மூலம் தத்துமகளின் வாரிசு உரிமையை நீக்கமுடியும் என்ற விதியானது, இச்சட்டத்திலுள்ள முரண்பாட்டிற்கு இன்னொரு எடுத்துக்காட்டாகும். பேணுகொண்டா பகுதியைச் சார்ந்த திரு. **இராகவாச்சாரி** சுட்டிக்காட்டியதுபோல இம்மாதிரியான ஒரு சலுகையை அளித்துவிட்டு தத்தெடுக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையை ஏன் கட்டுப்படுத்த வேண்டும்?

இச்சட்டத்தின் ஆதரவாளர்கள் எதிர்ப்பாளர்கள் ஆகிய அனைவரின் மறுப்புக்களும் திரு **என். சி. சட்டர்ஜியின்** பின்வரும் நியாயமான அறிக்கையில் தொகுக்கப்பட்டிருக்கிறது எனலாம். ''மாண்புமிகு சட்ட அமைச்சர் தன் லட்சியங்கள் குறித்து போதிய தைரியத்தில் இல்லை. மதச் சார்பற்றதாக இருக்கவேண்டும் என அவர் விரும்பினால் அவர் அதை ஒழுங்காகச் செய்யட்டும்''[71]

# புதிய பேணுதல் (பராமரிப்பு) சட்டம்

இச்சட்டத்தின் படி உள்ள பேணுதல் குறித்த சட்ட விதிகள் வருந்தத்தக்க அளவிற்குப் போதாக்குறையாக இருக்கிறது. ஒரு வைப்பாட்டியை பேணுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்துச் சட்ட உரிமையானது, 'இது ஒழுக்கக் கேட்டை ஊக்குவிக்கிறது' என்ற போர்வையின் கிழ் தன்னிச்சையாக நீக்கப்பட்டது. மிடக்சாரா மரபுகளுக்கு அடிப்படையான திரு. யஜ்ஞன வாக்கியரின் சாத்திரப்படி கணவனின் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு மனைவியின் பேணுதலுக்குத் தரவேண்டும். ஆனால் திருத்தப்பட்டச் சட்டத்தின் கீழ் பெண்ணின் பேணுதல் தொகையை நிர்ணயிப்பது ஒரு தனி நீதிபதியின் விருப்பத்திற்கு விடப்பட்டது. இதுவும்கூட மொத்த வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் செல்லக்கூடாது. இவ்வாறு தொகைக்கு உச்சவரம்பு விதிக்கப்பட்ட அதே நேரத்தில் குறைந்தபட்ச வரம்பு விதிக்கப்படவே இல்லை. இந்த மாற்றங்களுக்கும் இந்துச் சட்டத்திற்கும் என்ன உறவு? பெண்கள் சமத்துவத்தை மேம்படுத்துவதற்கும் இதற்கும் என்ன உறவு? என்பது பற்றி எந்த ஒரு தெளிவும் இல்லை. உண்மையில் இந்தச் சட்டமும் பெண்கள் சமத்துவமும் எதிர் எதிர் திசைகளிலேயே செல்கின்றன.

கொள்கைப்படி பார்த்தால் ஒரு பெண் தன் கணவன் வருமானம் தன் வருமானம் ஆகிய இரண்டையும் சேர்த்து அதில் மூன்றில் ஒரு பகுதியையே கோரமுடியும். இதன் பொருள் அப்பெண்ணின் வருமானம் ரூ. 5J0, கணவனின்

வருமானம் ரூ. 1000 என இருப்பதாகக் கொள்வோம் அப்பெண் பேணுதல் தொகையைக் கோரமுடியாது. காரணம், இருவரின் வருமானமான ரூ. 1500இல் மூன்றில் ஒரு பகுதியான ரூ. 500ஐ ஏற்கெனவே அப்பெண் சம்பாதித்து வருகிறார். ஆனால் எந்த வருமானமும் இல்லாத பெண்கள் இந்தத் தொகையை பெறுவதற்குக் கூட நடைமுறையில் மிகுந்த இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். இவ்வழக்கு சிவிலுக்கு உட்பட்டது ஆகவே, கணவன் அனைத்து வகையான காலம்கடத்தும் தந்திரங்களையும் கையாண்டு வழக்கை ஆண்டுக்கணக்கில் இழுத்தடிப்பார். ஒரு நியாயமான பேணுதல் தொகையைப் பெறுவதில் உள்ள மிகப்பெரும் தடை, ஒரு கணவனின் வருமானத்தையும் சொத்தையும் நிரூபித்துக்காட்டும் பொறுப்பு மனைவியைச் சார்ந்ததாகும்.

இந்தியச் சூழ்நிலையில் பெரும்பாலான மக்கள் விவசாய வேலைகளிலோ அல்லது சொந்த வணிகத்திலோ ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களின் உண்மையான வருமானத்திற்கு எந்த அதிகாரப்பூர்வமான ஆவணமும் கிடையாது. ஆகவே நீதிமன்றத்தை திருப்திப்படுத்தும் விதத்தில் தன் கணவனின் வருமானத்தை ஒரு பெண் நிரூபித்துவிடமுடியாது. அப்பெண் பெறவிருக்கும் ஒரு அற்பத்தொகையைக் காட்டிலும் பல மடங்கு நீதிமன்றச் செலவை அப்பெண் செய்யவேண்டியிருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக கணவன் தொடர்ச்சியாகத் அத்தொகையை கொடுத்து வருவதை உறுதிப்படுத்த எந்த ஒரு வழிமுறையும் இல்லை. நீதிமன்றம் நிர்ணயித்த தொகையை ஒரு சில மாதங்கள் அளித்துவிட்டு பின் நிறுத்திக்கொண்டால் மறுபடியும் அப்பெண் நீதிமன்றம் செல்வதைத்தவிர வேறு வழியில்லை. நீதிமன்றஆணையை நடைமுறைப்படுத்தித் தாருங்கள் என அப்பெண் காவல் துறையை அணுகமுடியாது.

மணவிலக்குச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடராமல் குற்றவியல் சட்டம் 125 பிரிவின் கீழ் வழக்குத் தொடர்வதையே பெரும்பாலான பெண்கள் விரும்புகிறார்கள். இதிலிருந்தே இச்சட்டத்தின் முழுத் தோல்வியும் வெளிப்படையாகத் தெரிகிறது. மணவிலக்குச் செய்யப்பட்ட ஒரு பெண் தன் கணவனிடமிருந்து பேணுதல் தொகையைப் பெற திருத்தப்பட்ட இந்துச் சட்டம் வழிவகுக்கிறது. ஆனால் குற்றவியல் சட்டத்தின் 125வது பிரிவோ கைவிடப்பட்ட பெண்கள், குழந்தைகள், வயதானப் பெற்றோர் ஆகிய அனைவரின பாதுகாப்பிற்கும் வழி வகுக்கிறது. மாதிரிக்கு இச்சட்ட விதியின் கீழ் கைவிடப்பட்ட ஒரு தந்தை தன் குழந்தைகளிடம் இருந்து பேணுதல் தொகை கோரலாம். பெரும்பாலானப் பெண்கள் இச்சட்ட விதியையே பயன்படுத்துகிறார்கள். காரணம், இது ஒரு குற்றவியல் வழக்காகும். ஆகவே மிக விரைவாக ஏதேனும் ஒரு தீர்வு கிடைத்து விடுகிறது. ஆயினும் இந்தப் பிரிவின் கீழ் அதிகப்பட்சத் தொகை ரூபாய் ஐநூறே கிடைக்கும். இந்தியாவின் குறைந்த சம்பள விகிதத்தைக் காட்டிலும் இத்தொகை மிகக் குறைவானதே மணவிலக்குக்குப்பின் ஏற்படும் (வாழ்க்கை) செலவோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இது மிகக்குறைவானதாகவே இருக்கும். இந்தத் தொகையான ரூ. 500ம் கூட நிர்ணயிக்கப்பட்டத் தொகையாகும். கணவனின் வருமானத்திற்கும் இந்தத் தொகைக்கும் எந்தத்தொடர்பும் இல்லை. அவன் இலட்சக் கணக்கில் சம்பாதித்தாலும்கூட அவன் மனைவி அதிகப்பட்சம் ரூ. 500 மட்டுமே கோரமுடியும். இந்துப் பேணுதல் சட்டத்தின் கீழ் இதற்கும் மேலாக அப்பெண் கோரமுடியும். ஆனால் இச்சட்டத்தின் விதிகளோ பெரும் இடையூறுகளைத் தருபவையாக இருக்கின்றன. ஆகவே இதன் கீழ் வழக்காடுவது மிக இடையூறான செயலாகும்.

# இந்து வாரிசுரிமைச் சட்டம்

**நா**ன்கு சட்டங்களிலுமே இந்து வாரிசுரிமைச்சட்டம் தான் (1956) மிக விவாதத்திற்குள்ளான சட்டமாகும். பெண்களுக்கு பொருளாதார உரிமைகள் கிடைக்காத வரை அவர்களால் வேறு எந்த ஒரு உரிமையையும் திறன் மிக்கவகையில் கோரமுடியாது. ஆகவே இந்தப்பொருளில் இச்சட்டம் மிக முக்கியமான ஒன்றாக உணரப்பட்டது. திரு. **இரகுராமையா** அவர்கள் இதை மிகத் தீவிரமாக சுட்டிக் காட்டினார்.

''சொத்தில் சமபங்கு இல்லாவிட்டால் மணவிலக்கு உண்மையில் பயனற்றதாகவே இருக்கும். சுதந்திரமான வாழ்க்கைக்கு வழியற்ற ஒரு பெண், மணவிலக்கு சட்டத்தைப் பயன்படுத்துவதில் மிக எச்சரிக்கையாகவே இருப்பார். பெண்களுக்கு சொத்தில் சமபங்கு அளிக்காத வரையில் இந்த சட்டத்தினால் அவர்களுக்கு எந்தப் பயனுமில்லை. இந்தச் சட்டத்திற்கு எந்த முக்கியத்துவமுமில்லை.''[72].

இந்து வாரிசுரிமைச் சட்டம் உண்மையில் பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை அளிக்கிறதா அல்லது அளிப்பதாக மட்டுமே சொல்லிக் கொள்கிறதா? மிடக்சாரா சாத்திர முறையில் கூட்டுக் குடும்பச் சொத்தில் அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கும் வாரிசுரிமை தரப் பட்டிருந்தது. இந்துச்சட்ட முன்வரைவில் இவ்வாரிசுரிமைதான் இருந்தது. ஆனால் சட்டத்தில் இது மாற்றப்

பட்டது. பரம்பரை வாரிசுகளுக்கு மட்டுமே சொத்துக்கள் தரப்பட்டன. இக்கருத்துக்கள் எதிர்ப்புப் புயலையே எதிர் கொண்டது. அன்றைய (1954) சட்ட அமைச்சரான **திரு. பிஸ்வஸ்** அவர்கள் பெண்களுக்கு பிறந்த வீட்டில் சொத்துரிமை அளிப்பதை தான் ஆதரிக்கவில்லை என பாராளுமன்றத்திலேயே சொல்லும் அளவிற்கு நிலைமை இருந்தது. இதிலிருந்தே காங்கிரஸ் கட்சிக்குள்ளிருந்த எதிர்ப்பை அனுமானித்துச்சொள்ளலாம். இச்சட்ட விதி களின்படி ஒவ்வொரு குடும்பத்திலுள்ள ஆண்மகனும் சொத்தில் தன் சகோதரிக்கு பங்குதரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதுஆண்களுக்குப்பாதகமானது. இச்சட்டம் எதிர்கொண்ட மிகக் கடுமையான எதிர்ப்பிற்கு இதுவே காரணமாகும். இச்சட்டத்தின் ஆதரவாளர்கள் பல நேரங் களில் இதைச்சுட்டிக் காண்பித்தனர். மத்திய இந்தியப் பகுதியைச் சேர்ந்த மார்வாரியான திரு. **சீத்தாராம் ஜஜீ** அவர்கள் எதிர்ப்புக்கான காரணத்தை மிகச்சரியாகஅடை யாளம் காட்டினார். 'இவ்விடத்தில் நாமே பாதிக்கப் பட்ட உணர்வைப்பெறுகிறோம். காரணம் இது நமது மடியிலே கை வைக்கிறது. இந்த அவையில் ஆண் உறுப் பினர்களே மிகப்பெரும் எண்ணிக்கையில் இருக்கிறோம். இந்த அவையில் உள்ள சிறுபான்மை பெண் உறுப்பி னர்கள் மீது நமது பெரும்பான்மை கொடுங்கோன் மையைத் திணிப்பதை நான் விரும்பவில்லை.''[72]

எப்படி இருப்பினும் உண்மையில் பெரும்பான்மை யினரின் கொடுங் கோன்மைத் திணிக்கப்பட்டது. 1956இல் இச்சட்ட முன்வரைவு சட்டமாக நிறைவேற்றப்பட்ட போது இவ்வெதிர்ப்புக்கான அடையாளமே தெரிய வில்லை. இச்சட்டத்தின் முக்கியத்திருத்தங்கள் பின் வரு மாறு:

1. ஆண்களுக்கு மட்டுமே கூட்டுச் சொத்தில் உரிமை உண்டு என்ற **மிட்கசாரா** கூட்டமை உரிமையை தக்க வைத்துக்கொண்டது.

2. கூட்டுக் குடும்பச் சொத்தில் உயில் எழுதி வைப்பதற்கான உரிமை. 1956இல் இச்சட்டவிதிகளை வரிக்குவரி விவாதித்துக் கொண்டிருந்த இறுதிக் கட்டத்தில் எதிர் பாராத விதமாக சட்ட அமைச்சர் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்தார். காங்கிரஸ் கட்சிக்குள்ளிருந்த இந்து மகாசபை உறுப்பினர்களுக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இவர்களுக்கு ஐந்தாம்படை என பெயரிட்டார்— அரசாங்கம் அடிபணிந்ததே இதற்குக் காரணம் என அன்றைய பொதுவான புரிதலாக இருந்தது.

3. கூட்டுடைமையில் பெண்களும் (ஆண்களுக்கு) சமமான உரிமை கொண்டிருந்த **மருமக்கள் தாயம், அலிய சந்தானம்** போன்ற மரபு முறைகளுக்கு இருந்த விதிவிலக்குகள் நீக்கப்பட்டன.

4. இறுதி உயில் எழுதாமல் இறந்துபோன தகப்பனாரின் சுய-சம்பாத்திய சொத்தில் பெண்ணுக்கும் சமஉரிமை உண்டு என சட்டமுன்வரையில் இருந்த விதி மாற்றத்திற்குட்பட்டது.

தன்னையும் பொருட்படுத்தாமல் இந்த மாற்றம் செய்து முடிக்கப் பட்டதாகவே அம்பேத்கர் கண்டார்.

''எனது எதிரிகள் எனது உற்சாகமான ஆதரவாளர்களோடு அணிசேர்ந்து விட்டனர். இச்சட்டமுன்வரையை உருக்குலைப்பதன் மூலம் இதை முறியடித்துவிடலாம் என என் எதிரிகள் நினைத்திருக்கலாம்.''[74]

ஒவ்வொரு சட்டப் பிரிவின் பின்விளைவுகளையும் இப்பொழுது பார்க்கலாம். **மிடக்சாரா** முறையில் இருந்த கூட்டுச் சொத்து வாரிசுரிமையை ஏற்றுக்கொண்டதால் பெண்களுக்கு எதிரான இந்துச்சட்டங்களின் பெரும் பகுதியை திருத்தம் செய்யாமல் அப்படியே ஏற்றுக்

கொண்டதாகவே பொருளாகிறது. இப்பிரச்சினைக்குத் தீர்வு பெண்களையும் கூட்டுச்சொத்து வாரிசுகளாக ஆக்குவதே. 1945 கால கட்டத்திலேயே இக்கருத்து முன் வைக்கப்பட்டது. எண்ணற்ற தனி நபர்களும், குழுக்களும் ஒன்பது மாணவிகளும் இளைஞர்களும் இதில் அடங்குவர். விவசாயக்கூலி சங்கத்தினரும் கையெழுத்திட்ட ஒரு அறிக்கை இந்துச்சட்டக் குழுவினரிடம் தரப்பட்டது. அவ்வறிக்கையில் பெண்களுக்கு சொத்தில் முழுப்பங்கும் சொத்தைப் பங்கிடுவதற்கான உரிமையும் கோரப்பட்டிருந்தது. (இவ்வறிக்கையை அளித்தவர்கள் அனைவருமே ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். பெண்களுக்கும் கூட்டுச் சொத்தில் வாரிசுரிமையைத் தரும் திருத்தத்தை இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் நடைமுறைப்படுத்திய முதல் மாநிலம் இதுவே என்பதை இங்கே குறிப்பிட்டுக் காட்டவேண்டும்) ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த சிக்காகோல் பகுதி துணைநீதிபதி திரு. ஜி **கிருஷ்ணமூர்த்தி** அவர்கள் பெண்களையும் கூட்டுச்சொத்தின் வாரிசுகளாக்கக்கோரினார். 1956இல் இச்சட்டம் நிறைவேற்றப் படுவதற்குமுன் நடந்த இறுதி விவாதத்தின்போது திரு **கே.சி சர்மா** என்பவர் ஒரு திருத்தத்தை முன்வைத்தார். மகன்/மகனின் குழந்தைகளும் கூட்டுச்சொத்தின் வாரிசுகளாக இருப்பதைப் போலவே பெண்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் வாரிசுரிமை தரவேண்டும் என்பதே அத்திருத்தம். அனைத்து இந்து மரபுகளில் இருந்தும் முற்போக்கான கூறுகளையும் இணைக்கும் முயற்சியே இது என இச்சட்டத்தின் தந்தைகள் உரிமை கொண்டாடியது உண்மையானால் இத்திருத்தம் அதன் தர்க்கரீதியான நடவடிக்கையாக இருநதிருக்கவேண்டும். உண்மையில் இம்முறை கேரளாவில் நடைமுறையில் இருந்து வந்தது. ஆயினும் சட்ட அமைச்சர் திரு. **படாஸ்கர்** அவர்கள் இதற்கு உணர்ச்சிகரமான மறுப்பையே பதிலாகத் தந்தார்.

''எனது நண்பர் திரு. கே.சி. சர்மா அவர்கள் மிக முற்போக்கான பார்வை கொண்டவர் என்பதை நான் உண்மையில் அறிவேன். பெண்களையும் அவர்களின் வாரிசுகளையும் கூட்டுச் சொத்தின் உரிமையாளர்கள் ஆக்குவதால் அக்குடும்பம் அமைதியாக இருக்கும் என நான் நினைத்துப் பார்க்கவில்லை. திருமணத்தின் மூலம் பெண்கள் குடும்பத்தைவிட்டு வெளியே செல்ல வேண்டியவர்கள் என்பது ஒத்துக் கொள்ளப்படாது என்பது தானே''[75]

பெண்கள் திருமணத்திற்குப் பின்பு குடும்பத்தை விட்டு வெளியேறுபவர்கள்தான். ஆகவே அவர்கள் பிறந்த வீட்டின் முழு உறுப்பினராக இருக்கமுடியாது என்ற இந்த அனுமானமே இந்து வாரிசுரிமைச்சட்டத்தில் பொதிந்துள்ள அனைத்துக் கொடுமைகளுக்குமான வேராகும். நிலம் சிதறுண்டு போவதை தடுப்பதற்கு மாநில அரசுகள் சட்டம் இயற்றத் துணை செய்யும் சட்டப்பிரிவானது இம்மாதிரியான கொடுமைக்கு உதாரணமாகும். பெண்களுக்கு வாரிசுரிமை தருவதிலிருந்து விவசாய நிலங்களுக்கு விதிவிலக்கு வேண்டுமென மிக எரிச்சலோடு வாதிட்டவர்கள் சட்ட அமைச்சரிடம் ஒரு கோரிக்கை விடுத்தனர். இப்புதிய சட்டப் பிரிவு உண்மையில் இம்மாதிரியான விதிவிலக்கைக் கொண்டிருக்கிறது என சட்ட அமைச்சர் தெளிவான அறிக்கை விடவேண்டும் என அவர்கள் கோரினர். திரு. பகவத்ஜா ஆசாத் அவர்கள் பின்வருமாறு கேட்டார்:

''இம்மாதிரியான சட்டங்கள் இதுவரை இல்லாத மாநிலங்களில், இச்சட்டத்தை புறக்கணித்து விட்டு விவசாய நிலங்களில் மகள்களுக்கு உரிமையில்லை என்ற சட்டப்பிரிவைச் சேர்த்து புதிய சட்டங்களை இயற்றிக் கொள்ளவேண்டும் என்பதுதான் உங்கள் புரிதலா? இச்சட்டத்தின்படி பெண் வாரிசுகள் விவசாய நிலங்களில்

வாரிசுரிமை கோர முடியாது என்பதுதான் உங்கள் விளக்கமென்றால் இதில் எனக்கு மறுப்பு ஏதுமில்லை''[76] இக்கேள்விக்கு சட்ட அமைச்சர் காட்டிய மவுனம் சம்மதத்திற்கு சமமானதுதான்.

இரண்டாவது முரண்பாடு, வாரிசுரிமைப்பட்டியலில் ஆண் பெண் ஆகியோரிடையே காட்டப்பட்ட வேறுபாடு ஆகும். இப்பட்டியலில் மருமகள்களுக்கு முதலிடம் இருக்கிறது. ஆனால் மருமகன்களைப் பற்றி எங்குமே குறிப்பிடவில்லை. பெண்களின் சொத்து, அதற்கு வாரிசுதாரர்கள் ஆகிய கருத்துக்கள் **'ஸ்திரீதானம்'** முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். ஆனால் **'ஸ்திரீதானம்'** முறையிலுள்ள வாரிசுரிமையைப் போல மருமகன்கள் உரிமை பெற முடியாது. மருமகள்களுக்கு ஆதரவான போக்கு புகுத்தப்பட்டதற்கு அன்றைய வட இந்திய நடைமுறையே சுத்தமான அடிப்படையாக இருந்தது. பெண்களின் பெற்றோர்கள் அப்பெண்ணின் புகுந்த வீட்டில் நீர்கூட இருந்தாத ஒரு நிலையில் அப் பெண்ணின் சொத்துக்களை ஏற்றுக் கொள்வார்கள் என்பது பற்றி பேசவே முடியாது என சில உறுப்பினர்கள் வெறுப்பு தரும் விதத்தில் திரும்பத்திரும்ப கூறினார்கள். தென்னிந்தியாவில் இம்மாதிரியான மூடநம்பிக்கை எதுவுமில்லை என திரும்பத்திரும்ப சொல்லியபோதிலும் வடஇந்திய உறுப்பினர்கள் வடஇந்தியக் கலாச்சாரத்தையே இந்து/இந்திய மரபாகவும், கலாச்சாரமாகவும் கருதுவதில் உறுதியாக இருந்தார்கள். (திருமணமான) மகள்களுடன் பெற்றோர்கள் தொடர்ந்து உறவு வைத்திருப்பதை அவர்கள் ஒரு நெறிதவறிய மரபு என நிராகரித்தார்கள். இந்த விவாதங்கள் அடிக்கடி கேலிக்குரியதாகவே இருந்தது. ஆனால் இதன் விளைவுகளோ, திட்டமிட்ட அராசகமானதாக- சோகத்தைத் தருவதாக இருந்தது.

எந்த ஒரு இந்துப் பெற்றோரும் மகளின் சொத்தை சொந்தம் கொண்டாட விரும்ப மாட்டார்கள் என

திரு. முகத் **பெகாரிலால் பார்க்கவா** அவர்கள் வாதிட்ட போது திரு. **எல். கிருட்டிணசாமிபாரதி** என்பவர் பின்வருமாறுகேட்டார். ''ஏன் கூடாது? இதனால் என்ன வந்து விடப்போகிறது?''

திரு **பார்க்கவா:** ஒரு வேளை நமது மதிப்பிற்குரிய உறுப்பினர் இந்தியாவிற்குள் இருந்து வந்திருக்கமாட்டார். வெளியில் இருந்தே வந்திருக்கவேண்டும்.

திரு. **பாரதி:** நான் தென்னிந்தியாவில் இருந்து வந்தவன்.

திரு. **பார்க்கவா:** இந்தியாவில் எந்த ஒரு தந்தையும் அல்லது தாயும் தன் மகளின் வீட்டில் (புகுந்த வீட்டில்) நீர் அருந்துவதை நினைத்துக்கூடப்பார்க்க மாட்டார்கள்.

திரு. **பாரதி:** பஞ்சாபில் அம்மாதிரி இருக்கலாம்

திரு. **பார்க்கவா:** வட இந்தியா முழுக்கவும் நிலைமை இதுதான். தென்னிந்தியாவைப் பற்றி அதிகாரப் பூர்வமாக என்னால்பேசமுடியாது. நமதுநாட்டில் தந்தையோ தாயோ பெண்ணின் புகுந்த வீட்டில் நீர்கூட அருந்த மாட்டார்கள்:

திரு. **பாரதி:** எங்கள் பகுதிகளில் நிலைமை அவ்வளவு மோசமாக இல்லை.

திரு **பார்க்கவா:** உங்கள் பகுதிகளில் இது நடைமுறை வழக்கமாக அல்லது மரபாக இருக்கலாம். ஆனால் எங்கள் பகுதியில் பெரும்பாலான மக்கள் இக்கருத்தை எதிர்ப்பர். ஆகவே முழு உரிமைகளை கைமாற்றுவது இந்து எதிர்ப்பு கருத்துக்களின் அடிப்படையில் தான் முடியும்.''[77]

ஒரு வடஇந்திய மரபு வழக்கம் ஒரு இந்து இலட்சியமாக இங்கு நிறைவேறியிருப்பது சுவையான விசயம் தான். **ஸ்திரீதானம்** போன்ற முறைகளில் மகளின்

(கணவன்வழி) சொத்தில் அவள் பெற்றோர்களுக்கு வாரிசுரிமை அளிப்பதையும் பல்வேறு சாத்திர விதிகளையும் சுட்டிக்காட்ட இதுவும் ஒரு இந்து இலட்சியமென ஒருவரும் நிரூபிக்கவில்லை. இதற்குப் பதிலாக **மருமக்கள் தாயம் அரிய சந்தானம்** ஆகிய சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் ஒரு சலுகையாக வாரிசுரிமை பட்டியலில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆனால் தென்னிந்தியா முழுக்கவும் இந்தப் புதிய சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. பெண்களை வாரிசுரிமை அற்றவர்களாக்கியதே இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் தர்க்கரீதியான பயனாய் அமைந்தது. பெண்களுக்கு பெற்றோரின் சொத்தில் வாரிசுரிமை இல்லை என்பதை புதிய சட்டம் ஒத்துக்கொண்டதால் பெண்களின் சொத்துக்கள் உயிரோடு இருக்கும் பெற்றோர்களின் கைகளுக்கு மாற்ற முடியாமல் ஆயிற்று.

இச்சட்டப் பிரிவின் மற்றொரு கொடுமையைப் பார்க்கலாம். ஒரு பெண் விதவையாக இருந்தாலோ அல்லது கணவரால் கைவிடப்பட்டாலோ அன்றி வேறு காலங்களில் தன் பெற்றோர் வீட்டில் வசிக்க அப்பெண்ணுக்கு உரிமையில்லை. பெற்றோரின் சொத்தை ஆண் வாரிசுகள் அனுபவிக்கையில் பெண்கள் அதில் உரிமை கோர முடியாது.

பெற்றோரின் வீட்டில் ஒரு விதவைப் பெண் வாழ்வதற்கு உரிமை இருக்கிறதா அல்லது கணவனால் கைவிடப்பட்ட அல்லது கணவனைப் பிரிந்து வந்த ஒரு பெண்ணிற்கு தன் பெற்றோர் வீட்டில் வாழ உரிமை இருக்கிறதா என்பது குறித்து நீண்ட விவாதங்களே நடைபெற்றது. இறுதியில் குறிப்பிட்ட பிரச்சனை குறித்து சட்ட அமைச்சரின் பதில் தெளிவாய் இருந்தது.

"கணவனை கைவிட்டப் பெண்களுக்கு உதவவேண்டியத் தேவை இருக்காது. அதற்காக, இச்சட்டப் பிரிவு

ஏற்படுத்தப்படவில்லை. கணவனைக் கைவிட்டப் பெண்ணுக்கு பாதுகாப்புத் தரவேண்டியது அவசியம்தானா? என்றே நான் கருதுகிறேன். காரணம், அப்பெண் வேறு ஒருவரைத் திருமணம் செய்வதற்காகக்கூட கணவனிடமிருந்து பிரிந்து வந்திருக்கலாம் அல்லது தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு வேறு வழி வைத்திருக்கலாம்''[78]

தன் மனைவியைக் கைவிட்ட ஒரு மகன் தன் பெற்றோர்களுடன் வாழும் உரிமையைப் பற்றி யாருமே இங்கு கண்டிக்கவில்லை. தன் பெற்றோர்களுடன் வாழும் உரிமை ஒரு மகனுக்கு இருப்பதைப் போலவே தன் மகளுக்கும் இருக்கவேண்டும் என்பதை விட்டுவிட்டு, தேவைப்பட்ட பெண்களுக்கு தரப்படும் ஒரு கருணைச் சலுகையாகவே இந்த உரிமை பார்க்கப்பட்டிருக்கிறது. நீண்ட விவாதத்திற்குப் பின்பு கணவனை விட்டுப் பிரிந்துவந்த பெண்களுக்கும் இந்த உரிமை வழங்கப்பட்டது.

கூட்டுக்குடும்ப சொத்தின் மீது ஒரு தந்தை தன் விருப்பத்திற்கு உயில் எழுதுவதை அனுமதித்து, அதை நியாயப்படுத்திய சட்ட அமைச்சர், அப்பொழுதும் இதே வாதத்தை— உதவி அவசியப்படும் மகள் அல்லது உதவி அவசியப்படாத மகள்— தான் முன் வைத்தார். இந்த ஆலோசனை மிகுந்த சூடான விவாதத்திற்குள்ளான ஒன்றாக இருந்தது.

ஒரு மகள் நல்ல முறையில் திருமணம் செய்து வைக்கப்பட்டிருக்கலாம் அல்லது நல்ல பணியில் இருக்கலாம். மற்றொரு மகள் வறுமையில் இருக்கலாம். ஆகவே யாருக்குச் சொத்து தர வேண்டும் என்பதை தந்தையே முடிவு செய்ய வேண்டும் என திரு. படாஸ்கர் வாதிட்டார். இது மாதிரியான வாதத்தை மகனுக்கும் முன் வைக்கலாம். ஆனால் அவர்களுக்கு கூட்டுச் சொத்திலுள்ள உரிமை பிறப்புரிமையாகும். மகள்களுக்கிடையில் இம்மாதிரி

யான கற்பனை செய்யப்பட்ட வேறுபாடுகள் சில குறிப்பிட்ட இந்துச் சிந்தனை மரபிலிருந்து பெறப்பட்டவையாகும். மாதிரிக்கு மகன் இல்லாத மகளைக் காட்டிலும், மகன் இருக்கும் மகளுக்கு முன்னுரிமை தரப்பட்டது. அல்லது திருமணமான மகளைக் காட்டிலும், திருமணமாகாத மகளுக்கே முன்னுரிமை தரப்பட்டது. இம்மாதிரியான வேறுபாடுகளை ஒழித்து மகன்களுக்கு சமமாக மகள்களை முன்னிறுத்துவதுதான் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் நோக்கம் என பறைசாற்றப்பட்டது. இருப்பினும் இவ்வேறுபாடுகள் தொடர்கின்றன,

இச்சட்டத் தொகுப்பின் தொடக்கத்திலேயே இவ்வாதத்தில் பங்கு கொண்டவர்கள் ஒரு விசயத்தைச் சுட்டிக் காட்டினர். புதிய உயில் விதிகள் மகள்களின் வாரிசுரிமையை பறிக்கப் பயன்படுத்தப்படலாம் என்பதையே அவர்கள் சுட்டிக் காண்பித்தனர். சிலர் இவற்றை வரவேற்றனர். மற்றவர்கள் இதன் அபாயம் குறித்து எச்சரித்தனர். மாதிரிக்கு திரு. பி. என். ராவ் குழுவிடம் தரப்பட்ட எழுத்துப்பூர்வ அறிக்கையில் சென்னை மாகாண உயர்நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவர், எப்படி இந்தச்சட்டம் உயிரற்றே இருக்கும் என்பதைத் தெளிவாக முன்னச்சரிக்கை செய்திருக்கிறார்.

''இச் சட்ட விதிகளை ஒத்துக்கொள்ளாத ஒரு இந்துக் குடிமகன், இதனை மீறுவதற்கு வாய்பபு இருக்கிறது. அவர் ஒரு உயில் எழுதி வைப்பதன் மூலம் பெண்களுக்கு சொத்தில் வாரிசுரிமை தருவதை தவிர்க்கமுடியும், ஆகவே பொதுவாக இச்சட்டவிதிகள் தீவிரமான விளைவுகளைக் கொண்டிருக்கும் என நான் நினைக்கவில்லை''.[79]

இந்துச் சட்டக்குழுவிடம் அளிக்கப்பட்ட எழுத்துப்பூர்வ அறிக்கையில் மேகொ பகுதியைச் சேர்ந்த ஒரு பட்டதாரி மேலும் கூறுகிறார். ''மகன்களுக்கு சாதகமான,

மகள்களுக்கு எதிரான ஒரு எளிமையான, கேள்விக்கிடமில்லா உயில் முறையை ஆலோசனையாக வைத்தார்''[80] பெண்களின் பராமரிப்பு உரிமை, வாரிசுரிமை ஆகியவற்றை பாதுகாக்கும் விதத்தில், உயிலின் மீது சில கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டும் என பலர் கருத்து தெரிவித்தனர். இந்துச் சட்டக்குழுவினரிடம் தரப்பட்டிருந்த ஒரு எழுத்துப் பூர்வ அறிக்கை பின்வருமாறு சுட்டிக்காட்டியிருந்தது: ''உயில் எழுதுவதன் மூலம் சொத்தை கைமாற்றும் உரிமை பண்டைய மரபுகளிலோ அல்லது தற்போதைய இந்துப் பழக்க வழக்கங்களிலோ இல்லை. உயில் என்ற கருத்தே அன்னிய நாட்டைச் சார்ந்தது. இறக்குமதிச் செய்யப்பட்டது. உயில் எழுதுபவரின் உரிமைகளை கட்டுப்படுத்தும் விதத்தில் ஒரு முன்னிபந்தனைப் பகுதிகள் சேர்க்கப்படவேண்டும்''[81]

முசுலீம் சட்டங்களில் சொத்தில் மூன்றில் ஒரு பகுதிக்கு மட்டுமே உயில் எழுதமுடியும் என்று இருப்பதைப் போலவே ஒரு மனிதனுக்கு உயில் எழுத அனுமதி தரவேண்டும் என்ற ஆலோசனையும் முன் வைக்கப்பட்டது. ராவல்பிண்டியைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் சங்கம் இம்மாதிரியான ஒரு தடை நடைமுறையில் பயனற்றது என்றும்; காரணம் ஒருவர் சொத்தை தன் வாழ்நாளிலேயே தன் மகனுக்கு அன்பளிப்பாகத் தந்துவிடலாம் என்றும் சுட்டிக்காட்டி இருந்தது.[82].

இம்மாதிரியான விவாதங்கள் பாராளுமன்றத்தில் மீண்டும் மீண்டும் எழுப்பப்பட்டு விரிவாக விவாதிக்கப்பட்டது. ஆகவே இந்து மரபின் அறிந்திராத ஒரு உரிமையான உயில் எழுதும் உரிமையானது பெற்றோர்களின் சொத்துரிமைகளில் கொண்டுவரும் தாக்கங்களைப்பற்றி இந்த அரசாங்கம் அறிந்திருக்கவில்லை என வாதிட முடியாது.

சொத்துரிமைச் சட்டங்களில் செய்யப்பட்ட இந்த மாற்றங்களுக்குப் பின்னணியாக இருந்தவர்கள். பெண்

உரிமை ஆதரவாளர்கள் அல்ல; மாறாக தொழில் அதிபர்களே. ஒரு தனி ஆணின் கைகளில் சொத்துக் குவிவதால் கிடைக்கும் பொருளாதார நலன்களை அறிந்தவர்கள் இவர்களே. **ஈஸ்டன் எக்கனாமிஸ்ட்** என்ற பத்திரிக்கையில் இடம்பெற்ற அன்றையக் கட்டுரைகளில் (1949 முதல் 55) இக்கருத்துக்கள் மிகத் தெளிவாக வெளிப்பட்டது. இந்திய வணிகத் தொழிற் கழகங்களின் கூட்டமைப்பின் இதழாகும் இது. ஆகவே பெரும் முதலாளிகளின் முக்கியப்பிரிவினரின் கருத்துக்களை இது பிரதிபலிக்கிறது எனச் சொல்லலாம். இப்பத்திரிக்கை அதன் தலையங்கங்களில் பின்வரும் நிலையை எடுத்தது. இச்சட்ட முன்வரைவின் நன்மைகளில் மிகப்பெரிதானது, பெண்களின் உரிமையல்ல; மாறாக, ஆண்களுக்கு சொத்தில் உரிமை அளித்ததன் மூலம் அச்சொத்து பங்கிடப்படாமல் தடுத்ததே ஆகும். இந்த அம்சம் மிகக் குறைவாகவே கவனிக்கப்பட்டிருக்கிறது. சொத்தில் பெண்களுக்கு வாரிசுரிமை தருவதை இப்பத்திரிக்கை ஆதரிக்கவில்லை. பெண்களின் உரிமைகளைப் புறக்கணிக்க இந்த உயில் எழுதும் உரிமையைப் பயன்படுத்தக் கூடும் என இப்பத்திரிகை பலமுறை சுட்டிக்காட்டியது.

1949 மார்ச் 18ம் தேதிய இதழில் வெளியான **'இந்துச்சட்டத்தின் பொருளாதாரம்'** என்ற தலைப்பிட்டக் கட்டுரையில் பின்வருமாறு இருக்கிறது:

''அடிப்படையான பொருளாதாரக் காரணிகளை மையப்படுத்தி எவ்வளவு குறைவான விவாதங்கள் நடந்திருக்கிறது என்பதை அறிய வியப்பாக இருக்கிறது. இந்தப் பிரச்சனைகளில் பொருளாதாரத்திற்கு எந்த சிறிய பங்கும் இல்லை என்றே உண்மையில் ஒருசிலர் நினைக்கின்றனர். ஒரு தனி நபரின் பிறவி குணத்திற்கான காரணிகளை இந்த இந்துச்சட்டம் குறைத்து சுதந்திரமான உறவுகளின் மூலம் தன் தலைவிதியை நிர்ணயித்துக்

கொள்ள அவனை ஊக்குவிக்கிறது. மகனுக்குச் சமமாக மகளுக்கும் சம சொத்துரிமை அளிக்கப்படுவதால் விவசாய நிலங்கள் சிதறுண்டு செல்வது அதிகரிக்கும் என சொல்லப்படுவதில் நியாயமில்லாமல் இல்லை. ஆனால் உயில் அதிகாரத்தை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதன் மூலம் இதைத் தவிர்க்கலாம். ஒரு நகர்ப்புற குடும்ப நடிவடிக்கைகளோ அல்லது விவசாய குடும்பச் செயல்பாடுகளோ இதனால் இடையூறுக்குள்ளாக வேண்டிய அவசியம் இல்லை. இறுதி ஆய்வில் ஒரு சரியான சொத்து முறையின் அடிப்படை அதன் இயக்கத்தில்தான் இருக்கிறது. சுதந்திரமாக சொத்தை விற்பதற்குள்ள தடைகளை நீக்குவதில் ஒரு நல்ல சொத்து முனறயின் அச்சம் இருக்கிறது.''

''பழைமைவாதிகளை வெற்றிகொண்டதாக பகுத்தறிவான சமூக சீர்திருத்தவாதி பெருமை பாராட்டிக் கொள்ளலாம். கடுமையாகப் போராடிப் பெற்ற தங்கள் உரிமைகளைப் பற்றி பெண்கள் வீண் பெருமிதம் கொள்ளலாம். சொத்துரிமை வாரிசுரிமை ஆகியவற்றில் சில நன்மைகள் இருப்பதாக பொருளாதாரவாதிகள் உணரலாம். *மிகக்குறைவாக கவனிக்கப்பட்ட ஒரு அம்சமே மிகப் பெரும் பொருளாதார நலனுக்கு சாதகமாக இருக்கிறது*''[83] (அழுத்தம் ஆசிரியர்)

ஆறு ஆண்டுகளுக்குப் பின்பு விவாதம் திசை மாறியது, **மிடக்சாரா** குடும்ப முறைக்குப் பதிலாக **டயாபகா** முறையை புகுத்தும் பொழுது உடனடியாக மகள்களுக்கு சொத்துரிமை தந்துவிடக் கூடியது. மாறாக 'மிகுந்த முற்போக்கான அரசாங்கங்கள்' இதை படிப்படியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என அப்பத்திரிக்கை வாதிட்டது.[84] பெண்களின் உரிமைகளை ஒழிக்கவே தந்தைகளுக்கு உயில் எழுதும் அதிகாரம் தரப்பட்டது.

1956இல் நடந்த இறுதி விவாதத்தில் இது மையப் பொருளானது. ஒரு ஆண் தன் பெண் மக்களைமட்டு மல்ல பரம்பரையாக வாரிசுரிமை பெற்று வந்த விதவை மருமகளைக்கூட வாரிசுரிமையற்றவராக்க முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு முன்பு இந்த விதவைகளுக்கு குறைவான வாரிசுரிமையாவது இருந்தது. ஆனால் அது உறுதிப்படுத்தப்பட்ட உரிமையாக இருந்தது. ஆனால் இப்பொழுதோ அனைத்துச் சொத்துக் களும் ஒரு மனிதனின் உயிலையே சார்ந்திருக்கிறது. பெண்களுக்குச் சொத்துரிமையில் சமவுரிமை அளிக்க வேண்டும் என்ற சட்டவிதியானது இந்தச்சட்ட முன்வரை வையே பயனற்றதாக்குகிறது என பலஉறுப்பினர்கள் வாதிட்டார்கள். பெண்களுக்கு கூட்டுச் சொத்திலிருந்து மரபு உரிமையாக வரும் சிறு பங்கைக்கூட தன் சகோதரர் களுக்குச் சாதகமாக விட்டுவிடவேண்டும் என இச்சட்ட விதியில் காணப்படுகிறது. இது இச்சட்ட முயற்சியையே முழுக் கேலிக்குள்ளாகி இருக்கிறது. திரு. **எஸ் எஸ் மூர்** அவர்கள் தன் மனக்கசப்பை பின்வருமாறு வெளியிட் டார்:

"உங்கள் மகள்களுக்கு கணிசமாக ஏதேனும் தருகிறீர் களா? இல்லை என்றே நான் சொல்கிறேன். இநத சட்ட முன்வரைவை எதிர்ப்பவர்களும் தங்கள் மகள்களுக்கு உரிய|பங்கு போய்ச் சேரக்கூடாது என்று விரும்புபவர் களும் உயில் பத்திரங்களை வாங்கி அதில் பெண்வாரிசு களிடம் கையெழுத்து வாங்கி வந்துவிட்டால் போதும். வேறொன்றும் செய்யவேண்டியதில்லை. குறிப்பிட்ட இந்துச் சட்ட விதியானது மிகவும் மோசடியானது. மகள்களுக்கு நமது இடக்கையில் கொடுப்பதை இது வலதுகையால் எடுத்துவிடுகிறது. இம்மாதிரியான சட்ட ஓட்டைகளை வைத்திருப்பது நல்லதல்ல நாம் நேர்மை யாக இருக்கவேண்டும். மகள்களுக்கு ஒன்றும் தர நாம் விரும்பவில்லை என்றால் அதை வெளிப்படையாகச்

சொல்லிவிடவேண்டும். தேர்தல்களை கருத்தில் கொண்டு நாம் இப்படி சுற்றிவளைத்துச் செல்லக்கூடாது.''[85]

மறுபுறமோ இச்சட்டப் பிரிவை இணைத்தது குறித்து சில உறுப்பினர்கள் வெளிப்படையாகவே கொண்டாடினர். திரு. **இரகுவர்சகாய்** வெளிப்படையாகவே கூறுகிறார்: 'இந்த உரிமையை அளித்ததன் மூலம் இந்த சட்ட முன்வரைவில் இருந்த மிகப்பெரும் கசப்பு அகற்றப்பட்டது. விசப்பல்லை அகற்றிவிட்டோம். ஒரு இந்துவிற்கு உயில் எழுதும் அதிகாரத்தை நீங்கள் அளித்துவிட்டாலே போதும் இந்த சட்டமுன்வரைவில் உள்ள அனைத்துத் தவறுகளும் நீங்கிவிடும் என நான் நினைக்கிறேன்.''[86] தான் ஆரம்பத்தில் இச்சட்ட முன்வரைவை எதிர்த்ததாகவும் பின் படிப்படியாக தன் நிலையை மாற்றிக்கொண்டதாகவும் அதற்குக் காரணம் இரண்டு எதிர்முனைகளுக்கு இடையில் இச்சட்ட முன்வரைவு நடுவழியில் நிற்கிறது என்பதாகவும் இவர் தொடர்ந்து கூறினார். கூட்டுச் சொத்தின் மீது உயில் எழுதிக்கொள்ளும் உரிமை இதில் சேர்க்கப்பட்டது இவர் நிலையை மாற்றிக் கொண்டதற்கு தூண்டுதலாக இருந்திருக்கிறது.

இச்சட்ட முன்வரைவின் மிகக் கொடூரமான எதிரியான திரு. **பி. டி. பாண்டே** அவர்கள் பின்வருமாறு சொன்னார்: 'பெண்களின் பக்தியும், சொத்துக்களை பெண்கள் பெற மறுப்பதும், குடும்பத்தை உடைக்க மறுப்பதும் இந்து மதத்தின் அடிப்படையாக உள்ளன. கடவுள் இயற்கையிலேயே ஆண்களையும் பெண்களையும் ஏற்றத் தாழ்வுடனேயே படைத்திருக்கிறான்.' தான் ஏற்கெனவே உயில் எழுதிவிட்டதாகவும் தன் சொத்தில் தான் பங்கு கோரவில்லை என தன் மகள் எழுதித்தந்துவிட்டதாகவும் இவர் பாராளுமன்றத்தில் சொன்னார். இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் உயில் எழுதும் உரிமையை ஒரு சட்ட விதியாக சேர்த்ததன் நோக்கம், பெண் மக்களின்

உரிமையை பறிப்பதே என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. முசுலீம்களின் தனிச்சட்டத்தில் இருப்பதைப் போலவே பெண்களுக்கு குறைந்த அளவு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சில கட்டுப்பாடுகளை இச்சட்ட முன் வரைவில் சேர்க்கவேண்டும் என சில உறுப்பினர்கள் விரும்பினார்கள். மாதிரிக்கு திரு. **கேளப்பன்** அவர்கள் சொத்தில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் உயில் எழுத முடியாது என ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார். தன் சொத்தில் பாதியை தன் மனைவி அல்லது குழந்தைகளுக்கு உயில் எழுத வேண்டும் என்ற திருத்தத்தை திரு. **ஜெயசிரி** கொண்டு வந்தார். சட்ட அமைச்சர் இத் திருத்தங்களை ஏற்க மறுத்துவிட்டார்.

திரு. **தக்குருதாஸ் பர்கவா** அவர்கள் ஆங்கிலச் சட்டத்தை ஒட்டி ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தார். ஒரு மனிதன் தனது விதவை மனைவி, மைனர் மகன்கள் அல்லது திருமணமாகாத மகள்கள் ஆகியோருக்கு பங்கில்லாத வகையில் ஒரு உயில் எழுதி வைத்திருந்தாரானால் இவர்கள் அச்சொத்தில் ஜீவனாம்ச உரிமை கேட்பதற்கு வழியமைக்கும் ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தார். திரு. **ரேணு சக்கரவர்த்தியும்** இச்சட்ட முன்வரைவின் தீவிர ஆதரவாளர்களும் இத்திருத்தத்தை ஆதரித்தனர். ஆனால் திரு **படாஸ்கர்** இதை மறுத்துவிட்டார். இந்துத் தத்தெடுப்பு வளர்ப்புச் சட்டத்திலேயே ஜீவனாம்ச உரிமை இருப்பதாக அவர் காரணம் கூறினார். இது ஒரு ஏமாற்று வேலையாகும். இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் திட்டமிட்டு சேர்க்கப்பட்ட ஓட்டைகளைக் காட்டிலும் புதிய ஜீவனாம்ச சட்ட விதிகள் அதிக அளவில் போதாக் குறையாக இருக்கின்றன. இந்துச் சட்டத் தொகுப்பிற்கு முன்பு பெண்கள் பெற்றிருந்த குறைந்த அளவு உரிமைகளைக்கூட இச்சட்டம் பறித்துக்கொள்கிறது என சட்டத் திருத்தம் கொண்டுவந்த அனைவரும் மிகத்தெளிவாகச் சுட்டிக்காட்டி இருந்தனர். ஆயினும் அரசாங்கம் திட்ட-

மிட்டே சட்டத்தில் இந்த ஓட்டையை இணைக்கிறது. திரு. **கேளப்பன்** பின்வருமாறு வாதிட்டார்:

''32ஆம் சட்டப் பிரிவு உண்டாக்கும் தெளிவான அநீதியைக் கண்டு இவ்வரசாங்கம் எப்படி அலட்சியமாக இருக்கிறது என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. நீதியின் நலன்களுக்காகவும், சமூகத்தின் நலனுக்காகவும் ஒரு மனிதன் தன் சொத்தில் அவன் சுயமாக சம்பாதித்திருந்தாலும் கூட உயில் எழுதிக் கொள்ளும் உரிமையின் மீது சில கட்டுப்பாடுகளை சுமத்த வேண்டும்.''[87] சட்ட அமைச்சர் கொண்டுவந்த திருத்தம் வைதீக வாதிகளுக்கு கொடுத்த ஒரு சலுகையாகும் என அன்றைய பத்திரிக்கைகள் எழுதியிருந்தன.[88] அவை பின்வருமாறு விமர்சனம் செய்திருந்தன:

''மரபு வழியிலான இந்துச் சமூகத்தை கட்டிக்காக்க விரும்பியவர்கள், இந்த சட்டமுன் வரைவுக்குத் தாங்கள் காட்டிய எதிர்ப்பின் பயன்களைக் கண்டு அதிருப்தியடைய காரணமேயில்லை. ஆகவே, இவர்கள் எதிர்ப்பு குறைந்துபோய்விட்டது.''[89]

**மிடக்சாரா** சாத்திரப்படி கூட்டுச் சொத்தில் ஒரு ஆண் மரபு ரீதியாகப் பெற்று வந்த அதிகாரத்தைக் காட்டிலும் இந்த உயில் எழுதும் உரிமை அதிக அதிகாரத்தைத் தருகிறது. பெண்களுக்கு அதில் ஆதரவான மற்ற மரபுகளைப் பற்றி இங்கு பேசவேண்டாம். **மிடக்சாரா** முறையிலும்கூடகூட்டுச் சொத்தில்ஒரு ஆணின் உரிமை ஒரு கட்டுப்பாட்டுக்குள்தான் இருக்கிறது. அதன் மூலம் குடும்பத்திலுள்ள ஊனமுற்ற குழந்தைகள், கருவில் இருக்கும் குழந்தைகள் உட்பட பெண்கள், சட்ட விரோத வாரிசுகள் ஆகிய அனைவரின் உரிமைகளும் பாதுகாக்கப்பட்டிருந்தது. குடும்ப உறுப்பினர்கள் அனைவர் நலன்களையும் கருத்தில்கொண்டு சொத்தை நிர்வகித்து வந்த குடும்பத் தலைவனின் பொறுப்பில் அனைத்து அதிகாரங்களும்

கையளிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், குடும்பச்சொத்து குறித்த பிரச்சனைகளுக்கு கூட்டாகவே முடிவு எடுக்கப் பட்டன. கருத்தளவில் ஆண்களுக்கு சொத்தில் சமபங்கு என்றிருந்தாலும் செலவுப் பங்கீடு என்பது ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் சேர்த்துதான். பெண் உறுப் பினர்களின் தேவைகள், நன்கொடைகள், அன்பளிப்புகள் அல்லது சில உறுப்பினர்களின் சிறப்புத் தேவைகள் ஆகிய வற்றிற்கான செலவினங்கள் பொதுப் பணத்திலிருந்தே எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆகவே, தன்னைக் காட்டி லும் மற்றவர்களுக்கு அதிகச் செலவு செய்யப்பட்டிருக் கிறது என கூட்டுச் சொத்தில் வாரிசுரிமை பெற்ற ஒருவர் சொல்லிவிடமுடியாது. கணவன் மறைந்த சமயத்தில் மனைவியே தலைவியாகச் செயல் பட சில **மிடக்சாரா** சிந்தனை முறைப் பள்ளிகள் அனுமதிக்கின்றன.

உயில் எழுதும் உரிமையானது இந்து மரபுக்கு முற்றி லும் அன்னியமானது. இந்து எனப் பெயரிடப்பட்ட ஒரு சட்டத்தில் இது சேர்க்கப்பட்டிருப்பது ஒரு முரண்சுவை தான். **படாஸ்கர்** இப்புதியசட்ட விதியை ஆதரித்துப்பேசிய போது இதற்கு ஒரு உணர்ச்சிகரமான சாயலைத் தர முயற்சித்தார்.

''உயில் எழுதும் உரிமை அளிக்கப்பட்ட உடனேயே அதன் உடன் நிகழ்வாகச்சொத்துப்பங்கீடும் நடைபெறும். ஆகவே இது இச்சட்டத்தின் நோக்கத்தையே பயனற்ற தாக்கிவிடும் என இந்த அவையில் உள்ள மதிப்பிற்குரிய பல உறுப்பினர்கள் கருதுகிறார்கள். ஆனால் நான் எப்பொழுதுமே சொல்லி வருவதுபோல மனித இயல்பின் மீது எனக்கு நன்னம்பிக்கை உண்டு. ஒரு தந்தை மகனை யும் மகளையும் சமமாகவே மதிப்பார் என்றே கருது கிறேன். இந்த விசயத்தை தந்தையின் முடிவிற்கே விட்டு விடுவது நல்லது. நியாயமான சமமான வழியில் அவர் செயல்படுவார் என்பது எனது நம்பிக்கை. இந்த

நோக்கத்தில் வெற்றியடைவதற்கு ஒரு தந்தையைத் தவிர வேறு யாரைத்தான் நான் நம்புவது''[90]

தந்தைகளின் நியாய உணர்வுகளின் மீது நம்பிக்கை வைத்துப்பேசிய இதே சட்டஅமைச்சர்தான், இந்தப் புதிய சட்டப்பிரிவின் நோக்கம் யாருக்கு சொத்து சேரவேண்டும் என்பதை தீர்மானிக்கும் உரிமையை தந்தைகளுக்குத் தருவதே என்றும் அதேபேச்சில்குறிப்பிட்டார். இச்சட்ட உரிமை இதற்கு முன்னதாக நடைமுறையில் இல்லாதது மகளின் வாரிசுரிமையை பறிப்பதும் ஆகும். அவர் பின் வருமாறு வாதிட்டார். 'இந்த சட்ட முன் வரைவிலுள்ள 30ஆம் பிரிவை பயன்படுத்தி கூட்டுக் குடும்பச்சொத்தில் தன் நலன் காக்க ஒரு ஆண் உயில் எழுதிக்கொள்ளலாம். தற்போது நடைமுறையிலுள்ள **மிடக்சாரா** மரபு முறையை பின்பற்றி வருபவர்கள் இச்சட்டம் நிறைவேறிய பின்பும், பழைய முறையை பின்பற்றிக்கொள்ள உரிமை உண்டு''[91]

ஒரு அரசாங்கம் முன்னெடுத்த ஒரு சட்டமுன்வரைவு எப்படி தனக்குள்ளே ஒரு சூழ்ச்சி வலையைக் கொண்டிருக் கிறது என்பதை மிக வெளிப்படையாக விளக்குவதற்கு இச்சட்ட அமைச்சரைவிட வேறு ஒருவர் கிடைக்க மாட்டார். பெண்களின் வாரிசுரிமையைப் பறிப்பதற்கு இந்த உயில் ஒரு நிரந்தர வழிமுறையாக இருந்து வரு கிறது. தந்தை எழுதும் உயிலோடு மகள் திருமணத்தின் போது சொத்தில் பங்கு கேட்பதில்லை என மகளிடம் உயிலில் கையெழுத்து வாங்குவது ஒரு பொதுவான நடை முறையாக இருந்து வருகிறது.

புதிய சட்டத்தின்படியோ அல்லது இதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த மரபு முறைகளின்படியோ நடந்து கொள்ளலாம் என்ற விருப்பத்தேர்வு (choice) அளிப்பதன் நோக்கம் உண்மையென்றால் **மருமக்கள் தாயம், அலிய**

**சந்தானம் நம்பூதிரி** போன்ற மரபு முறைகளுக்கு இவ்வாய்ப்புஏன் மறுக்கப்பட்டது?இப்மாதிரியான மரபுமுறைகளை பின்பற்றும் குடும்பங்களில் ஒவ்வொரு இறப்பிற்குப் பின்பும் சொத்துப் பிரிவினை ஏற்படும் என்பதுபோல தோன்றும். ஆனால் வாரிசுரிமையல்ல, மாறாக சொத்து கைமாற்றப்படும் என இச்சட்டம் சொல்கிறது. இவ்வாறாக, இந்தமுறைகளில் காணப்பட்ட பிறப்புவழி வாரிசுரிமை ஒழிக்கப்பட்டன. இந்துச் சட்டத்தின் உண்மையான முன்வரைவு இந்த அம்சத்தைத் தான் கொண்டிருக்கிறது. ஆனால் இதற்கு எதிர்ப்பு வந்ததைத் தொடர்ந்து சில பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட்டன. தாய்வழிக் குடும்பச் சமூகங்களில் இருந்து இச்சட்டத்திற்கு போதுமான எதிர்ப்பு வரவில்லை. ஆகவே இச்சமூகங்கள் பெருமளவு அழிந்துவிட்டன. மேலும் **மிடக்சாரா** மரபிலிருந்தி ஆண், பெண் ஏற்றத்தாழ்வு அம்சங்கள் பரவவும், வலுப்பெறவும் இச்சட்டம் உதவியது.

பகுத்தறிவுப் பூர்வமான சமத்துவ சட்டவிதிகளைக் கொண்டு ஒரே சீரான பொதுச்சட்டம் கொண்டு வந்து. அதை பொதுமக்கள் தன் விருப்பப்படி பின்பற்ற வழி செய்வதே உண்மையான விருப்பத்தேர்வாய் இருந்திருக்க முடியும். மிகப்பலர் ஆண்டுக்கணக்காக இந்த யோசனைகளை முன் வைத்தனர். ஆனால் அரசாங்கம் இதனை கடுமையாக மறுத்துவிட்டது. 1945இல் எழுத்துப்பூர்வ அறிக்கைகளைத் தொகுத்தபோது எண்ணற்ற அறிக்கைகள் சட்ட விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் என்றும், புதிய சிந்தனை முறைகளை ஏற்றுக்கொள்ளும் இந்து உணர்விற்கு வழிவகை செய்யும்படி இச்சட்டத் தொகுப்பு இருக்கவேண்டும் என்றும் வாதிட்டு இருந்தன. திரு. **டி. ஜீ. ஆரவாமுதன்** என்ற சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் இப்மாதிரியான அணுகு முறையின் நன்மையை பின்வருமாறு முன்வைத்தார்:

''பல்வேறு சிந்தனை முறைகளின் சிக்கலான தொகுப்பே இந்துச் சட்டமாகும். பல கணவன் முறையிலிருந்து பல மனைவிகள் முறைவரை பலவிதமான சிந்தனை முறைகளும், நடைமுறைகளும் இதில் இருக்கின்றன. பாராளுமன்றம் மூலமாக ஒரு புதிய சட்டம் இயற்றும் பணி நடந்து வருப்போதிலும் ஒரு புதிய இந்துச் சிந்தனை முறை உருவாவதற்கு இவையெல்லாம் ஒரு தடையாயில்லை. எந்த ஒரு சிந்தனை முறையும், மற்றொரு சிந்தனை முறை மீது அதிகாரம் செலுத்தியதில்லை. ஆகவே, புதிய இந்துச்சட்டத்தொகுப்பு, ஒருவர் விருப்பப்பட்டால் மட்டுமே பின்பற்றக் கூடியதாக, ஒருவர் மீது கட்டாயமாக திணிக்காத ஒரு இந்து சிந்தனைப்பள்ளியாக இருக்கவேண்டும்.[92]

இச்சட்டத் தொகுப்பு மிகுந்த சனநாயகத்தன்மை கொண்டதாகவும, சட்டத்தொகுப்பை உருவாக்கியவர்கள் அதைமக்களிடம் சொல்லவேண்டிய கடமைப்பொறுப்பை உள்ளடக்கியதாகவும் இருக்கவேண்டும் என வாதிடப்பட்டது. சென்னையைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. **வி.நாராயணர்** பின்வரும் ஆலோசனையை முன் வைத்தார். ''பெரும்பான்மையான மக்கள் தங்களின் தற்போதைய மரபு வழக்கங்களை கைவிட்டுவிட முற்போக்காளர்கள் தூண்டி விடட்டும். தற்போதைய இந்து இயக்கத்தின் தனிச்சிறப்பம்சமான பல்வேறு சிந்தனைகளையும், மரபுகளையும் (மக்கள்) படிப்படியாக கைவிடட்டும்.''[93]

சட்டத் தொகுப்பை ஒருவரின் விருப்பத்திற்கே விட்டுவிடவேண்டும் என்ற ஆலோசனை ஒரு கற்பனையல்ல. அனைத்துச் சமூகத்தினர் மத்தியிலும் சிறப்புத் திருமணச் சட்டம் ஒன்று இருக்கிறது. விருப்பப்பட்டால் அதைப் பின்பற்றலாம். விருப்பத்தேர்வு நடைமுறையில் இருப்பதற்கு இது ஒரு உதாரணமாகும். உண்மையிலேயே இந்த அரசாங்கம் சமத்துவ விதிகளையும் பால்நீதியையும்

உருவாக்க உண்மையான விருப்பம் கொண்டிருந்தால் சீர் திருத்தம் என்ற போலியான மாற்றங்கள் செய்வதை விட்டுவிட்டு பொதுவான சமத்துவ விதிகளைக்கொண்ட ஒரு சட்டத்தொகுப்பை உருவாக்கி இருக்கவேண்டும். இம் மாதிரியான ஒரு சட்டத்தொகுப்பே ஒருவர் விருப்பத் தோடு பின்பற்றுவதற்கு வாய்ப்பாக இருந்திருக்கமுடியும். இக்கருத்தை அரசாங்கம் தீவிரமாக எடுத்துக்கொண்ட தாகத் தெரியவில்லை. 1950 ஆண்டுகளின் கடைசியில் இக் கருத்துக்கள் முன் வைக்கப்படுவது ஏறத்தாழ நின்று விட்டது. 1951இல் **அம்பேத்கர்** இக்கருத்தை மறுத்தபோது எந்த ஒரு உறுப்பினரும் பதில் தர முன்வரவில்லை.

''பெண்களுக்கு தேர்ந்தெடுக்கும் அதிகாரம் இருக் கிறதா? இல்லையா? இச்சட்டத்தின் கீழ் கணவனுக்கு இது பொருந்தவில்லையென்றால் மனைவிக்குத் தன் விருப்பப்படி செயல்பட சுதந்திரமுண்டா? இது முழுக்க முழுக்க குளறுபடியானது. நமது சட்டம் சில வழிகளில் அசிங்கமானதாக இருக்கலாம். ஆனால் எந்தவிதத்திலும் இது அழகுக்குறைவானதாக இருக்கக்கூடாது. இது பார்ப் பதற்குமிக அழகாக இருக்கும்''[94] நடைமுறையில் இருந்து திடீரென அழகியலுக்குத் தாவியதானது அரசாங்கம்இந்த ஆலோசனை குறித்து அடிப்படையிலேயே அக்கறையின் மையைக் கொண்டிருந்ததையே காட்டியது. இச்சட்ட முன் வரைவின் (மசோதா) தொடக்கத்தில் பெண்களுக்கு சம உரிமைதரும் நோக்கம் இருந்தது. ஆனால் இந்த நோக்கத்தை பயனற்றுப் போகச் செய்த இச்சட்டத் தின் நேர்மையின்மையைப் பார்க்கும்பொழுது இதில் அழகியலுக்கு எந்த இடமும் இல்லை.

# பொது சிவில் சட்டத்திலிருந்து விலகிச் செல்லல்

**வி**ருப்பப்படி பின்பற்றுதல் என்ற கருத்தானது உண்மையில் தீவிரமான பிரச்சனைகளை எழுப்பியது. இந்த விருப்பத்தை அனுமதிப்பது யார்? ஒரு குடும்பமா? ஒரு நிறுவனமா? அல்லது குடும்பத்தில் உள்ள தனி நபர்களா? தங்களின் மரபு முறைகளில் பெண்களுக்கு ஏதேனும் அதிருப்தி இருந்தால் அம்மாதிரியான நேரங்களில் விருப்பபூர்வ சமத்துவ சிவில் சட்டத்தை பின்பற்றிக்கொள்ளும் சிறப்பு உரிமையை பெண்களுக்கு அளிப்பது ஒரு சாத்தியமான வழியாகும். பல்வேறு மரபு முறைகளில் உள்ள ஓரவஞ்சனைகளை பாரபட்சம் அகற்றுவது என்ற புதிய சட்டத்தின் இலட்சியத்திற்கு இந்தச் சாதகமான ஓரவஞ்சனை (அதாவது பெண்களுக்கு சிறப்பு உரிமை தருவது) நடவடிக்கை ஒத்துப்போகும். ஒரு குடும்பம் மரபு வழக்கங்களை பின்பற்றுவதா அல்லது சமத்துவச் சட்டத்தை பின்பற்றுவதா என்பதைத் தீர்மானிக்கும் சிறப்பு அதிகாரம் ஒவ்வொரு குடும்பத்திலும்/சமூகத்திலும் உள்ள பெண்களுக்கு அளிப்பதாகவே இருக்கும். பால் சமத்துவக் கருத்தின் அடிப்படையில் ஒவ்வொரு சமூகமும் தங்கள் மரபு முறைகளை உருவாக்கிக் கொள்ள இது உதவும். திணிக்கப்பட்ட கட்டுப்பாட்டைக் காட்டிலும் தன்னிச்சையான விருப்பத்தைத் தொடர இதுவே வழி.

முசுலீம்கள் உள்ளிட்ட ஒரு சில வகுப்புகள் இன்று பொது சிவில் சட்டத்தை ஒத்துக்கொள்ளும் சூழல்இல்லை. ஆனால், இந்தியக் குடியரசின் தொடக்க ஆண்டுகளில் இதற்கான வாய்ப்பு மிகச் சாதகமாக இருந்தது. யாருக்காக இப்பொழுது சிவில் சட்டம் உருவாக்கப்பட்டதோ அவர்களுக்கு நன்மை தருவதாக அது இருந்திருந்தால், அதை எளிமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் ஒரு நிர்வாக இயந்திரத்தை உருவாக்கி இருந்தால் பெரும்பாலான மக்கள் இப்பொதுச் சட்டத்தை நோக்கி படிப்படியாக ஈர்க்கப்பட்டிருப்பார்கள். தங்களது சமூகத் தனிச்சட்டத்தின் கொடுமைகளை உணர்ந்த பெண்கள் பொதுச் சட்டத்தைப் பின்பற்ற விருப்பப்பட்டிருப்பார்கள். அதன் மூலம் அச்சமூகத்தின் உள்ளிருந்தே சீர்திருதத்திற்கான ஒரு அழுத்தம் தோன்றியிருக்கும். இம்மாதிரியான ஒரு சூழலில், எந்த ஒரு சமூகமும் ஒரு கட்டாயத்தின் கீழ் தங்கள் மரபுகளை சீர்திருத்தவேண்டியிருந்தது என்ற உணர்வை அடையமாட்டார்கள் அல்லது இம்மாதிரியான கட்டாயங்களுக்கு தாங்கள் ஆட்படவில்லை எனச் சில சமூகங்கள் வீண் பெருமை பேசுவதற்கான வாய்ப்பும் இருந்திருக்காது.

இந்துக்களுக்கு ஒரு சீரான பொதுச் சட்டத்தை உருவாக்க இந்த அரசாங்கம் பின்பற்றிய வழி அதிருப்தியை உருவாக்கியதோடு படித்த இந்துக்கள் மத்தியில் ஒரு சித்திரவதை உணர்வையும் வளர்த்து விட்டது. இதற்கான காரணம் புரிந்து கொள்ளக்கூடியதுதான். இந்த நோக்கத்தில் திரு. **வி. ஜி தேஸ்பாண்டே** எழுப்பியக் கேள்விக்கு ஒருவருமே பதில் சொல்லவில்லை.

"இந்துச்சட்டத் தொகுப்பின் பொருளைப் புரிந்து கொள்ள நான் முயற்சித்தேன். அதற்கும் இந்து என்ற பெயருக்கும் ஏதேனும் சம்மந்தம் இருக்கிறதா? இந்து மரபுகள், இந்துக் கருத்துக்கள், இந்துக்களின் தனிச்

சட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இச்சட்டம் உருவானது என்று இது சொல்கிறதா?...முசுலீம்களுக்கும், கிருத்துவர்களுக்கும், பார்சி அல்லது யூதர்களுக்கும் நடைமுறைப்படுத்த தைரியமற்ற இந்த அரசாங்கம் சில தீமையான கொள்கைகளை இந்துக்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. இந்துச் சட்டங்களின் குரல்வளையை நெரிப்பதற்கான ஒரு சதியே இந்த பொது சிவில் சட்டமாகும். இந்துக்கள் இந்தப் பெரும் காங்கிரஸ் அரசாங்கத்திடமிருந்து சிறப்பான சாதகத்தை எதிர்பார்க்கிறார்கள். இதை நாம் எதிர்த்தால் நம்மை வகுப்புவாதிகள், பிற்போக்காளர்கள் என அழைப்பார்கள். இச்சட்ட ஆதரவாளர்களோ மதச் சார்பற்றவர்கள், நடுநிலைவாதிகள், தேசியவாதிகள் என அழைக்கப்பட்டனர். இந்த மதச் சார்பற்ற அரசாங்கம் இந்துக்களின் தனி நபர் சட்டத்தில் மட்டும் தலையிடுவது ஏன்?''[95]

இந்த வாதத்தைத் தவறு எனச் சொல்லமுடியாது. இந்து என்ற முத்திரையிட்டு நிறைவேற்றப்பட்ட இச்சட்டம் ஒரு மதச் சார்பற்ற செயலாக இருக்க முடியாது. அல்லது இவர்களின் நோக்கம் இவர்களே கூறிக்கொள்ளும்படி உண்மையான மதச் சார்பற்றதும் அல்ல. இந்துச் சமூகத்தை ஒற்றுமைப்படுத்தி வலுப்படுத்த வேண்டிய அவசியம் பற்றி அடிக்கடி பேசி வருகிறார்கள். இந்த நோக்கத்தில் இந்து மகாசபையோடு இவர்கள் அணி சேருகிறார்கள். இச்சட்ட முன்வரைவை தொடர்ந்து எதிர்த்து வந்த இந்து மகாசபையைச் சேர்ந்த திரு. **என். சி. சட்டர்ஜி** அவர்கள் இந்து வாரிசுரிமைச் சட்டத்தை நிறைவேற்றியதற்காக சட்ட அமைச்சருக்கு நன்றி தெரிவித்து எதிர்பாராத விதமாகப் பேசிய பேச்சில் இந்த சட்டத்தின் வெற்றிகள் என சிலவற்றைச் சுட்டிக்காட்டினார். அவை இந்துக்களை ஒற்றுமைப்படுத்தியது, ஆண்களின் கைகளில் சொத்து குவியும் நிலையை உருவாக்கியது, குடும்பச் சொத்தில் ஆண்களுக்கு மேலதிக தன்னிச்சையான அதிகாரங்களைத் தந்தது ஆகியன ஆகும்.

''நான் இந்துச்சட்டம் பற்றி படிக்கும் மாணவனாக இருந்தபோது அச்சட்டத்தின் உன்னதமான பன்முகத்தன்மையைக் கண்டு வியப்படைந்தேன். **மயூக்கா** முறைக்கும் **டயாபகா** முறைக்கும் உள்ள வேறுபாடுகள், **மிதிலா திராவிட** சிந்தனை முறைகளுக்கிடையிலான வேறுபாடுகள் ஆகியவற்றைக் கண்டு ஆச்சரியப்பட்டதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளவேண்டும். ஆனால், இதற்கெதிரான சிந்தனையும் கொண்டிருந்தேன். நான் அகண்ட இந்துத்தானத்தில் நம்பிக்கைக் கொண்டவன். ஒரே சீரானப் பொதுச் சட்டத்தை விரும்புகிறவன். **டயாபகா** மரபைப் புகுத்துவதற்காகவும் கூட்டுக் குடும்ப முறையை முழுக்க ஒழிப்பதற்காகவும் திரு. **பி. என். ராவ்** வாதிட்டார். நான் மிக மகிழ்ச்சியடைகிறேன். உண்மையில், நீங்கள் வணிகத்தையும் வியாபாரத்தையும் வளர்க்க விரும்பினால், உண்மையில், நீங்கள் புதிய இந்தியாவை உருவாக்க விரும்பினால், உண்மையில், நீங்கள் உங்கள் தொழிற்சாலைகளையும், தனியார் துறைகளையும் வளர்க்க விரும்பினால் பழம் சட்டமுறைகளைக்கொண்டு இவற்றைச் செய்யமுடியாது.''[96]

இந்துப் பண்பாட்டின் சிறப்பம்சங்களில் ஒன்றான பன்முகத் தன்மையின்மீது இங்கே சிறிதளவே அன்பு காட்டப்பட்டிருக்கிறது. இது ஒரு ''பழமையான சட்ட முறை'' என்ற காரணத்தைக் காட்டி இந்துப் பண்பாடு இறுமாப்போடு மறுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக ஆண்கள் கட்டுப்படுத்தும் வணிகத்தையும் வியாபாரத்தையும் கொண்ட புதிய இந்தியாவைப் பற்றி ஒரு பார்வை இருக்கிறது. ஆதிக்கம் செலுத்தும் மேற்கத்திய நாடுகளைப் போல இந்துச் சமூகத்தையும், மறு ஒழுங்கமைப்புச் செய்ய விரும்பும் இந்து மகாசபையின் கருத்துக்கு வெறுப்பூட்டாத வகையில், ஒரே ஒரு வகை இந்து இருக்கக்கூடிய அகண்ட இந்துத்தானத்தைப் பற்றிய பார்வை இதில் காணப்படுகிறது. இந்துப் பண்பாட்டின்

வலிமையே அதன் பன்முகத்தன்மைதான் என்ற கருத்துக்கு எதிராகவே இந்த சட்டமுன் வரைவின் ஆதரவாளர்கள் வாதிட்டார்கள். இவர்கள் அனைவரும் அடிக்கடி ஒரே மாதிரியான தர்க்க வாதத்தையே முன் வைத்தார்கள். இச்சட்ட முன்வரைவின் ஆதரவாளரான திரு. **கே. சந்தானம்** அவர்கள் 'ஐக்கியம் பற்றியும், ஒருமைப்பாடு பற்றியும் உணர்ச்சிகரமாக வாதிட்டபோது இவ்வாதத்திலுள்ள ஆபத்தான அம்சத்தை ஒரு எதிர்தரப்பாளர் சுட்டிக்காட்டினார். திரு. **சந்தானம்** பின்வருமாறு கூறினார். இந்தியாவின் முக்கியம் ஒருமைப்பாடு வலிமை ஆகியவற்றின் அடிப்படை மீதே இந்த பெரும் அரசியல் அமைப்புச் சட்டம் இருக்கிறது. அதைப் போலவே இச் சட்ட முன்வரைவும் இந்துச் சமூகத்தை ஐக்கியப்படுத்தவும், ஒருமைப்படுத்தவும், உறுதிப்படுத்தவும் ஆன கொள்கைகளின் அடிப்படையில் இருக்கிறது. பல்வேறு பிரேதச குழுக்களில் இருப்பவர்கள். இந்து சமூகத்தின் அழிவிற்கே காரணமாய் இருக்கிறார்கள். ஐயா, இந்துச் சமூகத்தின் எதிரிகள் இதைத் தவிர வேறு நல்லது ஒன்றையும் எதிர்பார்க்க முடியாது.''

திரு. **ரோகினிகுமார்சவுத்திரி**, ''மதிப்பிற்குரிய உறுப்பினர் வகுப்பு வாதத்தையே பேசி வருகிறார். முசுலீம்களுக்கும் மற்றவர்களுக்கும் எதிராக அனைத்து இந்துக்களும் ஒன்றுபடுவது பற்றியே பேசுகிறார்'' எனக் குறிப்பிட்டார்.[97]

**சந்தானத்தின்** நோக்கம் இதுவாக இல்லாமலிருந்திருக்கலாம். ஆனால் பின்னால் வளர்ந்துவந்த ஒரு முக்கியமான போக்கை **சவுத்திரி** உணர்ந்தே இருக்கிறார். முசுலீம்கள் மத்தியில் மட்டுமல்ல, இந்துக்களிடையேயும் இப்போக்கு வளர்ந்ததற்கு இந்துச்சட்ட உருவாக்கம் ஒரு முக்கியக் காரணமாக இருந்திருக்கிறது. இந்துச் சட்டத் தொகுப்பிற்கு எதிராகவும் அதைச்சீர் திருத்தவும் வாதிட்ட

அனைவருமே மரபு ரீதியாக நடைமுறைகளிலிருந்த சமத்துவக் கூறுகளை உயர்த்திப்பிடித்தார்கள் என்று கூறிவிடமுடியாது. அல்லது இந்துச் சட்டத் தொகுப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்த அனைவருமே இந்திய கலாச்சாரத்தின் வலிமையான பன்முகத்தன்மையினால் உற்சாகம் பெற்றவர்கள் என்றும் சொல்லிவிடமுடியாது. ஆணாதிக்கத்தையும், சலுகைகளையும், தக்கவைத்துக் கொள்ள பெரும்பாலும் விரும்பினர். பெண்கள் விடுதலை என்பது குடும்பத்தில் இணக்கமின்மைக்கு வழிவகுத்து சமூக அமைப்பை ஆட்டங்காணச் செய்துவிடும் என்ற அச்சத்திலேயே காங்கிரஸ் கட்சிக்குள்ளிருந்த வலதுசாரி பிரமுகர்களான திரு. **ராசேந்திர பிரசாத்**'போன்றவர்களும் இந்து மகாசபை, சனசங்க பாராளுமன்ற உறுப்பினர்களும் பெரும் எதிர்ப்பைக் காட்டி வந்தார்கள்.

சமூகத்தில் பெண்களின் பங்கு பற்றி பழமையான கருத்து கொண்டிருந்தவர்களும் திருத்தப்பட்ட சட்டத் தொகுப்பு ஏற்படுத்தும் விளைவுகளைப் பற்றித் தீர்க்க தரிசனமான முடிவுகளைக் கொண்டிருந்தவர்களும் ஒன்று சேர்ந்தது, துரதிருஷ்டம் தான். நவீனச் சீர்திருத்த வாதிகள் சொல்லியதைக் காட்டிலும் மேலதிகமான பாதுகாப்புகளை பெண்களுக்கு அளித்துவந்த தென்னிந்திய மரபு முறைகளைச் சேர்ந்தவர்கள்தான் இதில் அதிகமாக இருந்தார்கள். இந்துச் சட்டத்தொகுப்பு விவாதத்தின் போது எண்ணற்ற உறுப்பினர்கள் இந்தியக் கலாச்சாரத்தின் பன்முகத்தன்மையில் பொதிந்துள்ள கூறுகளை வலுப்படுத்தவேண்டும் எனப் பாராட்டத்தக்க விதத்தில் விரிவாக வாதிட்டனர். இன்றோ அவர்களில் பலர் ஒருமைப்பாடு என்ற கவர்ச்சிகர கருத்தையேகொண்டிருக்கிறார்கள். ஒரு காலத்தில் மக்களின் விருப்பத்திற்கு இடம் தரவேண்டும் அல்லது கருத்துக்கணிப்பு செய்யவேண்டும் என வாதிட்டவர்கள் இனறோ சீரான பொது சிவில் சட்டத்தை வலுக்கட்டாயமாகத் திணிக்கவேண்டுமென வன்மையாக வாதிடுகிறார்கள். இந்த முக்கியமான வருந்தத்தக்க மாற்றத்திறகு காரணம் அரசாங்கத்தின் கருத்துக்கள் மிகப் பரவலாக ஒத்துக்கொள்ளப்பட்டதே ஆகும்.

# அரசாங்கம் முன்னெடுக்கும் சீர்திருத்தத்தின் எல்லைகள்

சமூகத்தை நவீனப்படுத்துவது என்ற பெயரில் அரசாங்கம் தம் கரங்களில் மிக மிக அதிகாரங்கள் எடுத்துக்கொண்டது, வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் இதுவே உண்மை.

மக்களின் வாழ்க்கையில் தலையிட்டு அதைக் கட்டுப்படுத்த செய்த முயற்சிகள் சட்டத்துறையிலும் வெளிப்படையாகத் தெரிகிறது. முற்போக்காளர்கள் என தங்களைத் தாங்களே அழைத்துக்கொண்டவர்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை ஒரு முதலாளிய எதிர்ப்பு நடவடிக்கையாக மிகச் சாதாரணமாக அடையாளம் கண்டார்கள். அரசாங்கம் சோசலிச சொல் அலங்காரங்களைப்பயன்படுத்தியது இதற்கு காரணமாய் அமைந்தது. சமூகச் சீர்திருத்தத்தில் அரசாங்கத்தை ஒரு கருவியாகப் பார்க்கும் முயற்சியில் முற்போக்காளர்கள் மக்களையே வஞ்சித்து விடுகிறார்கள். அதிகாரப்பறிப்பும், சீர்திருத்தமும் ஒன்றே ஆனதல்ல என்பதை இவர்கள் உணரவில்லை. இந்தச் சீர்திருத்தவாதிகள் எவருமே தங்கள் எதிர்ப்பாளர்களின் கருத்துக்களை தீவிரமாக மறுத்துப் பேசவில்லை. இந்துக்கள் என அழைக்கப்பட்ட பெரும்பான்மையான மக்கள்— குறிப்பாக கிராமப்பகுதியைச் சேர்ந்தவர்கள்- தங்களது சொந்த மரபு வழக்கங்கள் பெருமளவுக்கு மாறப்போகிறது என்பதைப் பற்றி எந்த

விழிப்புணர்வும் அற்றவர்களாக இருந்தார்கள். அல்லது அரசாங்கம் அதிகாரத்தைக் குவிப்பதன் மூலம் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் தலையிடுவதை உணர்ந்திருக்க வில்லை. தங்கள் குழந்தைகளுக்கு ஒரு காப்பாளரை (கார்டியன்) நியமிக்கவேண்டி அல்லது தங்களது உறவினர்களுக்கு தங்களையே காப்பாளர்களாக நியமித்துக்கொள்ள உயில் எழுத வேண்டும் என்ற தேவைகள் ஏற்பட்டன. இம்மாதிரியான பிரச்சனைகளில் ஏற்படும் கேலித்தனமான விளைவுகளைப் பற்றி இச்சீர்திருத்த வாதிகள் போதுமான அளவில் பாதிக்கப்படவில்லை. இதற்குக் காரணம், ஆங்கில ஆட்சியாளர்களைப் போலவே இவர்களும் சமூக சீர்திருத்தத்திற்கு பதிலியாக இச்சட்டங்களைக் கருதி வந்தார்கள்.

காகிதத்தில் செய்யப்படும் மாற்றமே உண்மையான மாற்றமாகும் என நம்புவதே இன்றளவும் இந்தியச் சமூக சீர்திருத்தவாதிகளின் நோய்க்கூறாக இருந்து வருகிறது. உடன்கட்டை ஏறுதலாகட்டும் அல்லது வரதட்சணையாகட்டும் அல்லது காவல்துறை அடக்குமுறையாகட்டும் எந்தவொரு பிரச்சனைக்குமே தீர்வு புதிய சட்டத்தை இயற்றுவது அல்லது இருக்கும் சட்டத்தை திருத்துவது என்பதாகவே இருக்கிறது. இப்பிரச்சனைகளின் அடிப்படை எதார்த்தத்தை கவனமாகப் பார்க்க வேண்டும் என்ற அம்சத்திற்கு சிறிதளவே கவனம் செலுத்தப்படுகிறது. இச்சட்டங்களின் உண்மையான விளைவுசம்மந்தப்பட்ட மக்களின் மத்தியில்—இந்த இடத்தில் இந்துக்கள் மத்தியில்—ஒரு கவலைஉணர்வை தருவதே ஆகும். இச்சட்டம் எண்ணற்ற ஓட்டைகளைக் கொண்டிருந்தாலும் இது இந்துக்களின் நடைமுறையில் கணிசமான மாற்றம் எதையும் விளைவிக்கவில்லை. மாதிரிக்கு, நான்கு மனைவிகள்வரை மணம் செய்துகொள்ள முஸ்லீம்களுக்குள்ள உரிமை இந்துக்களிடையே முசுலீம் எதிர்ப்புணர்வை விசிறிவிட காரணமாய் அமைந்தது.

முசுலீம் சமூகம் பெருகி வருவதற்கு முக்கியக் காரணமாக இது திட்டமிட்டு முன்னிறுத்தப்பட்டது. இந்துத் திருமணச் சட்டத்தின் கீழ் பலதார மணமுறை சட்ட விரோதம் என்ற போதிலும் முசுலீம்களிடையே (5.7 சதவீதம்) உள்ளதுபோல இந்துக்களிடையேயும் (5 சதம்) பலதார மணமுறை பொதுவாக இருந்து வருகிறது.[98] இருந்தபோதிலும், முசுலீம்களின் தனிநபர் சட்டம் பெயரளவிற்குக்கூட மாற்றப்படவில்லை என இந்துச் சமூகம் தவறான எண்ணம் கொண்டிக்கிறது.

முசுலீம் பெண்கள் (மணவிலக்கு உரிமைப்பாதுகாப்பு) சட்டம் 1986 போன்ற சட்டங்களை இயற்றுவதன் மூலம் ஒரு பொய்யான ஆதாயத்தைக் காட்டி முசுலீம் தலைமையை காங்கிரஸ் தவறாக வழிநடத்துகிறது, சீரான பொதுச்சட்டத்திற்கு அல்லது முசுலீம் தனிச்சட்டத்திலே கூட எந்த ஒரு மாற்றம் செய்வதற்கும் முசுலீம் சமூகம் எதிர்ப்பு காட்டுவதற்கு இம்மாதிரியான நடவடிக்கைகள் காரணமாய் அமைந்துவிடுகிறது. (ஆங்கில ஆட்சியின் கீழ் இந்துச் சட்டத் தொகுப்பு உருவாகிய அதே வளர்ச்சிப் போக்கில்தான் முசுலீம் சட்டத் திருத்தமும் இப்பொழுது நடைபெறுகிறது. இதற்கும் குரானுக்கும் குறைந்த உறவே இருக்கிறது) ஆகவே இம்மாதிரியான போக்கினால் முசுலீம் நாடுகளில் இடம்பெற்ற சீர்திருத்தங்களைக்கூட இந்தியாவில் நடைமுறையில் சாத்தியம் இல்லாத அளவிற்கு அணிசேர்க்கை மையப்பட்டுள்ளது. முசுலீம் சமூகத்திலுள்ள பெண்களின் எதிர்ப்பு அமைதிப்படுத்தப்படுகின்றது. அல்லதுஇந்து முசுலீம் மோதல் என்ற அச்சத்தின் காரணமாக முசுலீம் பெண்களே அமைதியாக இருந்து விடுகிறார்கள். இப்பிரச்சனையில் முசுலீம்கள் மத்தியில் நிலவும் போர்க்குண உணர்வுகள் முசுலீம்கள் குறித்த தப்பெண்ணங்களை உறுதிப்படுத்தவே செய்கிறது. சீரானப் பொதுச் சட்டத்தை அரசாங்கம் கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற

இந்துக்களின் விருப்பத்தையும் இது உறுதி செய்கிறது. 1950களில் பாராளுமன்ற விவாதத்தின் போதே இந்தப் போக்கு தென்பட ஆரம்பித்துவிட்டது. திரு. **நசுருதின் அகமது** போன்ற பல முசுலிம் உறுப்பினர்களின் சமரச முயற்சிகளையும் தாண்டி இது தலைதூக்கியது. சுய பாதுகாப்பு என்ற நோக்கத்தில் **நசுருதின் அகமது** போன்றவர்கள் இச்சட்டத்தின் இந்து எதிர்ப்பாளர்களுக்கு முழுக்க ஆதரவளித்தனர். சனசங்கக் கட்சியைச் சேர்ந்த திரு. **யு. எம். திரிவேதி** அவர்களின் பின்வரும் பேச்சு முசுலீம் எதிர்ப்பு வலிப்பு நோய்க்கு உதாரணமாகும்.

''மோசமான ஒழுங்கு கொண்ட வகுப்புகளின் ஒழுக்க மட்டத்தை உயர்த்த நீங்கள் விரும்புகிறீர்கள். நல்லது. யார் ஒழுக்கக் குறைவானவர்கள்? அவர்களால் (முசுலீம்கள்) நான்கு மனைவிகளை திருமணம் செய்ய முடியும். செய்தும் வருகிறார்கள். ஆனால், நீங்களோ இந்துச் சமூகத்தை தாக்க விரும்புகிறீர்கள். தலாக் தலாக் என்று வீதியில் கூவிக்கொண்டே தன்மனைவியை மண விலக்குச் செய்யும் முசுலீம்களைக் கட்டுப்படுத்தப் போவதில்லை''[99]

இந்தப் பிரச்சனை (ஒரு பொருளில் பார்த்தால் இது பிரச்சனையே அல்ல; இரு சமூகங்களிலும் சட்டப் புரிதலுக்கும் உண்மையான நடைமுறைக்குமிடையே பெருத்த வேறுபாடு இருந்துவருகிறது) இந்துக்கள் மத்தியில் முசுலீம்கள் பெருக்கம் அடைந்து வரும் சிறுபான்மையினர் என்ற தீயை வளர்த்துவிட்டது. பல தெளிவான வழிகளில் முசுலீம்கள் ஓரவஞ்சனைக்கு உட்பட்டு வரும் போதிலும் இது (முசுலீம் வெறுப்புணர்வு) நடைபெற்றது. பொதுச் சிவில் சட்டத்தை முசுலீம் சங்கம் ஒரு சாபக்கேடாகவே பார்த்துப் பழகிவிட்டது. முசுலீம் தலைவர்களோ ஒரு பொருளுள்ள மாற்றத்தை முன்வைக்கவில்லை. சில முசுலீம் நாடுகளில் உள்ளதுபோல பெண்களுக்கு

நல்ல பாதுகாப்பைத்தரும் சில மாற்றங்களை முசுலீம் சட்டத்தில் செய்ய முயற்சிக்கவில்லை.

எப்படியாயினும், பெண்களின் உரிமைகள் பற்றி ஒரு விவாதத்தைத் தொடங்குவதிலும், ஒரு கருத்தை உருவாக்குவதிலும் இந்த இந்துச்சட்டத் தொகுப்பு சில சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியது. பல தீர்க்கதரிசனமான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் முன்வைப்பதற்கு இந்த விவாதம் ஒரு காரணமாய் அமைந்தது. இந்த ஆலோசனைகள் சட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்ற போதிலும் விவாதத்திற்கு ஒரு உயிர்ப்பைத் தந்தன. பாராளுமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் இந்த ஆண்டுகளில் நடைபெற்ற வாதங்களில் முன்வைக்கப்பட்ட பல்வேறு கருத்துக்களில் முற்போக்கானவை மட்டுமே அதிர்ச்சியூட்டும் விதத்தில் தூக்கியெறியப்பட்டன கீழே ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். திரு. **பி. எல். ராவ்** குழுவிடம் தரப்பட்ட எழுத்துப்பூர்வ அறிக்கையில் உமையாள்புரத்தைச் சேர்ந்த திரு. **சுப்பிரமணிய அய்யர்** என்ற வழக்கறிஞர் ஒரு ஆலோசனையை முன் வைத்தார்.

''ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்களுக்கு சில பாதகமான தீமைகள் இருக்கின்றன. ஒரு ஆண் தெருவில் படுத்து உறங்கலாம். ஆனால் ஒரு வீட்டிற்குள்ளே கூட பெண்ணுக்கு பாதுகாப்புத் தேவைப்படுகிறது. இதைப் போலவே ஆண்களுக்கு குறைந்தளவு ஆடைகளே போதும். ஆனால் பெண்களுக்கு ஆடை என்பது மிகப்பெருந் தேவையாகும். மறுபடியும், ஒரு ஆண் எங்கு வேண்டுமானாலும் பிச்சை எடுத்துப் பிழைத்துக்கொள்ளலாம். ஆனால் ஒரு பெண் இதைப்போலவே பிச்சை எடுக்க முடியுமா? ஆகவே, ஆணைக்காட்டிலும் பெண்ணுக்கு வசிப்பிடம், ஆடை, சொத்து ஆகியவற்றில் உரிமைகள் தேவை என உங்களால் கருத முடியவில்லையா? சொத்துக்களுக்கு முழு வாரிசாக பெண்கள்தான் இருக்கவேண்டும்.

ஆண்கள் அல்ல என உங்களால் கருதமுடியவில்லையா; முசுலீம்களிடையே திருமணத்தின்போது சொத்தில் பெண்களுக்கு என ஒரு பகுதி ஒதுக்கிவைக்கப்படுகிறது. கணவனின் கடனோ அல்லது அவன் எந்த நெருக்கடியில் இருந்தபோதிலும் இந்த சொத்திற்கு எந்த இடையூறும் இருக்காது. ஆண்களைக் காட்டிலும் பெண்களே சொத்தின் உரிமையாளர்கள் என்பதை பொது அறிவே சொல்கிறது. இது ஒரு சாதாரண தர்க்கம். ஆண்களைக் காட்டிலும் பெண்களே சொத்தின் உரிமையாளர்களாய் இருக்கவேண்டும் என்ற கருத்து இந்துச் சட்டக் கொள்கைகளின் அடிப்படைகளுக்கு எதிரானது அல்ல. தற்போதுள்ள நடைமுறை மரபுகளில் இது ஒரு வெடிப்பை ஏற்படுத்தும் என்றபோதிலும் தயவு செய்து இச்சீர்திருத்தங்களுக்கு அழுத்தம் தாருங்கள்''[100]

அரசியலிலும் சமூகத்திலும் பெண்களின் சமத்துவத்தை சட்டப்பூர்வமாக்கும் இந்து சீர்திருத்த மரபு தொடர்ந்து முன்னெடுத்துக் செல்லப்பட்டு வருகிறது. இம்மரபு விடுதலை இயக்கக்காலத்திலேயே நிலைநிறுத்தப்பட்டு இருந்தது. இந்துத் திருமணச்சட்டத்தில் தம்பதியினரின் சம்மதத்தின் பேரில் மணவிலக்குத் தருவது போன்ற திருத்தங்கள் படிப்படியாக நடைமுறைப்படுத்துவதற்கு இது வழியமைத்துத் தந்தது. □

# தொகுப்புரை

இந்துக்களுக்கு எந்த ஒரு விருப்பத்தேர்வும் அளிக்கப் படாமல் செய்யப்பட்ட இந்துச் சட்டத்தொகுப்பு, இந்துக் களின் ஒற்றுமை என்ற பெயரால் அதன் பன்முகத் தன்மையை தூக்கியெறிய முயற்சித்தது; இச்சட்டத் தொகுப்பு பற்றிய திசை திருப்பும் சொல் அலங்காரங்கள் ஆகிய இவை அனைத்தும் இதுவரை எதிர்மறை விளைவு களையே ஏற்படுத்தி இருக்கின்றன.

1) இப்பொழுது இந்துப் பெண்களுக்குச் சமமான சட்ட உரிமைகள் இருக்கின்றன என்ற தவறான கருத்தை இந்துக்களிடையே இது ஏற்படுத்தியது. ஆனால் உண்மை யில் நிலைமை அவ்வாறில்லை.

2) திருத்தப்பட்ட இந்துச்சட்டம் மதச் சார்பான தல்ல அல்லது ஒரு தனிச் சமூகத்திற்கானதுமல்ல; மாறாக அது ஒரு மதச் சார்பற்ற சட்டம் என்ற மாயையை இது உருவாக்கியது இதன்படி முசுலீம் வகுப்புச் சட்டம் மதச் சார்பானது என்றாகிவிட்டது. ஆகவே பிற்போக்கான இதை (முசுலீம் தனிச் சட்டத்தை) இந்துமயப்படுத்து வதன் மூலமே மதச் சார்பற்றதாக்கமுடியும் என்ற மாயையும் உண்டானது.

3) இது இந்துக்களிடையே ஒரு கேலிக்குரிய கவலையை விட்டுச் சென்றிருக்கிறது. முசுலீம் ஆண்கள்

அனுபவிக்கும் உரிமைகள் இந்து ஆண்களிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டது; ஆகவே, முசுலீம் ஆண்களைக் காட்டிலும் இந்து ஆண்கள் கீழான நிலையில் இருக்கின்றனர் என இந்துக்கள் நம்புகிறார்கள். இந்துக்களுக்கும், முசுலீம்களுக்கும் இடையே ஒரு பெரும் பிளவை ஏற்படுத்தியதல்லாமல் இச்சட்டம் சம்பந்தப்பட்ட வேறு சில முக்கியப் பிரச்சனைகளை பார்க்கலாம்.

1. இந்து மரபும், இங்கிலாந்து நாட்டுச் சட்டமும் சேர்ந்த 'ஒட்டுக்கலவையே'[101] இச்சட்டத் தொகுப்பு ஆகும். பல விசயங்களில் இந்த இருமுறைகளில் இருந்தும் பகுத்தறிவு விரோத அம்சங்களே சேர்க்கப்பட்டிருக்கின்றன.

2. பெண்களுக்கு சம உரிமை கோரிய இச்சட்ட எதிர்ப்பாளர்களை தாஜா செய்ய, சுய முரண்கொண்ட, வலுவற்ற, நடைமுறைக்கு ஒவ்வாத, நடைமுறையில் எதிர்மறை விளைவைக் கொடுக்கக்கூடிய சில அம்சங்கள் இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டன.

3. பிரதேசங்களில் வட்டார அளவில் இயங்கி வந்த எண்ணற்ற சட்ட மரபுகளை இச்சட்டத் தொகுப்பு அழித்துவிட்டது. அவற்றில் சில, பெண்களுக்கு சில அம்சங்களில் சிறப்பான பாதுகாப்பு உரிமைகளைத் தந்திருந்தன. புதிய சட்டத்தில் உள்ள மக்களின் உரிமைகளைப் பற்றியத் தகவல்களைச் சொல்ல மாற்று நிர்வாக அமைப்புகளை இது ஏற்படுத்தவில்லை.

4. இந்து மரபுகளில் உள்ள முற்போக்குக் கூறுகளின் தொகுப்பே இச்சட்டம் என இச்சட்டத்தை உருவாக்கியவர்கள் அறிவித்தக் கருத்துக்கள் பொய்யாய் போனது. உண்மையில் பெரும்பாலான பழம் சாத்திரங்களும் அதே சமயத்தில் சம காலத்தில் நடைமுறையில் இருந்த

மரபு நடைமுறைகளும் இச்சட்டத்தைக் காட்டிலும் பெண்களுக்கு மேலதுக பாதுகாப்பு உரிமைகளைத் தநதருநதன. காலாவதியாகப் போன ஆங்கில நீதிமுறையும் இந்து மரபுகள் பற்றிய ஆங்கிலேயரின் தவறான விளக்கமும் இணைந்ததே இந்த இந்துச் சட்டத் தொகுப்பாகும்.

5. இந்துச் சட்டங்களும் மரபுகளும் ஒரு பழமைவாத வார்ப்பில் தொகுக்கபபட்டன. சீ1 திருத்த வாதிகள் தாங்கள் என்ன செய்ய முயற்சிக்கிறோம் எனறு சொன்னார்களோ; அதைச் செய்திருநதால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. பல்வேறு சாத்திர நடைமுறை மரபுகளில் இருந்த முறபோக்குக் கூறுகளின் ஒன்று திரட்டப்பட்ட வடிவமே இச்சட்ட சீர்திருத்தம் என்றே அறிவித்து இருந்தார்கள். ஆனால் இதற்கு நேர் எதிரான வழியைத் தேர்ந்தெடுத்தாாகள்.

திருத்தப்பட்ட இச்சட்டத் தொகுப்பு நடைமுறைக்கு ஒவ்வாத, ஒரு அருவருக்கத்தக்க ஒன்றாக மாறியதற்கான காரணங்களைப் பார்க்கலாம்.

1. திருமணம், வாரிசுரிமை ஆகிய விசயங்களில் விக்டோரியா காலத்திய ஆங்கிலப் பழமைவாதக் கருத்துக்களையே இச்சட்டத் தொகுப்பாளர்கள் முற்போக்கானவை என எண்ணி இருந்தனர். இக்கருத்துக்கள் ஏனைய மேற்கத்திய நாடுகளின் சமூக மரபுகளோடு ஒப்பிடும் போது மிகவும் பிற்போக்கானவையாகும். இவ்வாறாக, நமது ஆங்கிலோ இந்துச்சட்டத்தை போர்ச்சுக்கள் வசம் இருந்த பகுதிகளில் நிலவி வந்த திருமண வாரிசுரிமை சட்டங்களோடு ஒப்பிடும்போது நமது சட்டம் பரிதாபகரமான உரிமைகளையே தந்தன. போர்ச்சுக்கீசியரின் ஆட்சியின்போது நிறைவேற்றப்பட்டகோவா சிவில் சட்டம் திருத்தப்பட்ட இநதுச்சட்டங்களைக்

காட்டிலும் மேலதிகமான சமத்துவ அம்சங்களைக் கொண்டிருந்தது.

2 இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் இருந்த ஆதிக்க வாதிகளின் மரபு நடைமுறைகளையே இச்சட்டத் தொகுப்பாளர்கள் எடுத்துக்கொண்டார்கள். இம்மரபு நடைமுறைகள் பெருமளவிற்கு பெண்களுக்கு உரிமை களைத் தராதவையாய் இருந்தன. ஆனால் இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் குறிப்பாக வடக்கு, வட கிழக்குப் பகுதிகளில் இருந்து வந்த மரபு நடைமுறைகள் பெண்களுக்குப் போதுமான பாதுகாப்பைத்தருபவையாய் இருந்தன. இந்துச் சட்ட சீர்திருத்தவாதிகளின் இப்போக் கிற்குக் காரணம் இவர்கள் ஆங்கில நிர்வாகிகளிடம் இருந்தே சீர்திருத்தத்திற்கான உதவேகத்தை மரபுரிமை யாய் பெற்றிருந்தனர். இந்த ஆங்கில நிர்வாகிகளின் புரிதல்களோ குறிப்பிட்ட பிரதேசம், சாதி ஆகியவற்றைச் சார்ந்திருந்தது. குறிப்பிட்ட சாதிகளும் சமூகங்களும் பெண்கள் மீது கண்டிப்பான பர்தாமுறை, விதவைத் திருமணத்திற்கு எதிர்ப்பு இன்னும் பல்வேறு கட்டுப் பாடுகளை சுமத்தி வந்தன. 19ஆம் நூற்றாண்டில் இம் மாதிரியான பெண்களையே ஒரு முன்னுதாரணமாக விடாப்பபடியாக இவர்கள் முன்னிறுத்தினார்கள். கேரளத் தைச் சேர்ந்த நாயர் பெண்கள், மணிப்பூரைச் சேர்ந்த மைத்தி பெண்கள், ராஜஸ்தானைச் சேர்ந்த மீனா பெண்கள் அல்லது சமணமதப் பெண்கள் ஆகிய இவர்கள் மேற்குறித்த அடக்குமுறைகளுக்கு உள்ளாகாதவர்கள். இந்துச்சட்டத் தொகுப்பாளர்கள் நடைமுறையில் இம் மாதிரியான பெண்களே இல்லை என்றோ அல்லது இவர்கள் இந்தியர்கள் அல்ல என்றோ கருதி வந்தனர். இந்தியா முழுக்க முன்னர் குறிப்பிட்ட பெண்கள் நிலை தான் நீடித்து வருகிறது என்ற சிந்தனைப் போக்கின் அடிப் படையில் இந்திய விடுதலைக்குப் பின்பும் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்பட்டதால் அவை குறைவான முன்னேற்றத்

தையே கொண்டிருந்தன. இவ்வாறாக பல வழிகளிலும் சட்ட சீர்திருத்தம் ஓர் அடி பின்னடைவே என்பதை நிரூபிக்கிறது.

1950களில் (விடுதலை இயக்கக் காலத்தைப் போலவே) இருந்த அரசியல் வாதிகளில் குறிப்பாக ஆளும் காங்கிரஸ் கட்சிகளில் இருந்தவர்களில் மிகப்பெரும் எண்ணிக்கையினர் வழக்கறிஞர்களே. ஆங்கிலச் சட்டங்களை மட்டும் அவர்கள் படித்தவர்களாய் இருந்ததால் மரபு நடைமுறைகளைப் பற்றி ஒன்றுமே அறியாதவர்களாய் இருந்தனர். காலனிய ஆட்சியில் இருந்தே இந்த மேட்டுக்குடி மக்களே (Elite) முன்னணியில் இருந்து வந்ததால் காலனிய ஆட்சியாளர்களின் கருத்தையே மரபாகப் பெற்றிருந்தார்கள். இந்திய மக்களுக்கு எதிராக அறியாமையையும் ஆதிக்க உணர்வையுமே இவர்கள் கொண்டிருந்தார்கள். இதன் விளைவு இவர்கள் முன்னெடுத்த பெரும்பாலான சீர்திருத்தங்களின் தாக்கங்கள் ஆங்கிலேயரின் அடியொற்றியே இருந்தது. அதன் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:

1. ஆங்கிலேயரின் ஒழுங்குவிதிகளையே இந்தியச் சமூகமும் பின்பற்றும் நோக்கில் அதை மறுவார்ப்புச் செய்ய முயற்சித்தது.

2. ஆங்கிலேயரின் சட்ட ஒழுங்குகள் முற்போக்கானவை ஆகவே அதி உன்னதமானவை என்ற கருத்தே கொண்டிருந்தனர். ஆனால் உண்மையில் இக்கண்ணோட்டம் பிற்போக்கான மாற்றங்களையே அறிமுகப்படுத்தின. நடைமுறையில் இருந்த மக்களின் உரிமைகளையும் பறித்துவிட்டன.

3. சட்டங்கள் இயற்றுவது, தண்டனைகளைப்பற்றிய அச்சுறுத்தல்கள் போன்ற அரசாங்க நடைமுறைகளே முழுக்க நம்பப்பட்டது. மக்களுக்காக இயற்றப்பட்டச்

சட்டங்களைப் பற்றி அவர்களிடம் விளக்குவது போன்ற எந்த முயற்சியும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இவ்வாறாக, இந்தச் சட்டங்கள் ஒன்று கொடுங்கோன்மைக்கு ஆதாரமாக இருந்துவிட்டது அல்லது மக்களால் புறக்கணிக்கப்பட்டது.

புதிய சட்டங்களில் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஒரு சில உத்திரவாதங்களைக் கூட உண்மையில் நடைமுறைப்படுத்த முடியவில்லை. காரணம் இந்திய விடுதலைக்குப் பின்பும் நாம் பின்பற்றிவந்த ஆங்கிலேய சட்ட எந்திரத்தை மேம்படுத்த சீர்திருத்தவாதிகள் ஒன்றுமே செய்யவில்லை. இந்த நிர்வாக இயந்திரம் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதைக் காட்டிலும் அவர்களை அச்சுறுத்தவும், கசக்கிப் பிழியவுமே உருவாக்கப்பட்டதாகும். உயர் மட்டத்தில் அதிகாரத்தைக் குவித்து வைத்திருந்த நீதிமன்ற இயந்திரத்தை கலைத்துவிட்டு கிராம உள்ளூர் அளவில் நிறுவனங்கள் நிறுவ முயற்சிக்காமல் இந்திய ஆட்சியாளர்கள் ஆங்கிலேயரின் நிர்வாக இயந்திரத்தையே மேலும் முன்னெடுத்து முழுமையாக்கினர். தொலைதூர நகர்ப்புற மையங்களிலுள்ள அன்னியமொழியில் நடக்கின்ற இந்த நீதிமன்றங்களில் பணத்தையும் காலத்தையும் செலவிட கிராமத்தார் தயாராக இல்லாததால் இந்தச் சட்டங்கள் அவர்கள் வாழ்க்கையில்-குறிப்பாக குடும்பச் சிக்கல்களில்-தலையிடவே இல்லை. இருதாரமணம், குழந்தைத்திருமணம்,வரதட்சணை ஆகியவை சட்டவிரோதமானவை; அவற்றிற்கு கடும் தண்டனை உண்டு என்று அறிவிக்கப்பட்டும் நீண்ட காலமாக இவை நடைமுறையில் இருந்தே வந்தன. சட்டத்திற்கும், சமூக நடைமுறைக்கும் இடையேயிருக்கும் இப்பெரும் வேறுபாட்டை மக்களின் பிற்போக்குத் தன்மைக்கு ஒரு சான்று என அரசு. ஆதரவு சீர்திருத்தவாதிகள் சொன்னார்கள். இந்தச் சீர்திருத்தவாதிகள் தங்களின் முட்டாள்தனமான செயல்பாடுகளை ஒப்புக்கொண்டதேயில்லை. சட்ட

விரோதம் என அறிவிக்கப்பட்ட குழந்தைத் திருமணங்களைக் கூட ஏற்றுக் கொள்ளலாம் என இவர்கள் சொல்லியிருப்பதிலிருந்து இவர்கள் முட்டாள்தனத்தைக் கண்டு கொள்ளலாம்.

இந்துச்சட்டத்தின் தொகுப்பாளர்கள் நடைமுறைப்படுத்திய தந்திரம், தவறான வழியில் சென்ற சொல் அலங்காரம் ஆகிய இவை விதைத்த விதையின் கசப்பான அறுவடையை இன்று நாம் அனுபவித்து வருகிறோம். கெடுவாய்ப்பாக இன்றைய சீர்திருத்தவாதிகளும் இவ்வழியையே பின்பற்றி வருகிறார்கள். சம்பந்தப்பட்ட சமூகத்திலிருந்து எதிர்ப்பும் தீவிரமான எதிர் வினையும் எழுந்து வந்த போதிலும் அனைத்துச் சமூகங்களுக்கும் ஆனசீரானப் பொதுச்சட்டத்தை திணிக்க வலியுறுத்தி வருகிறார்கள். இந்த முரட்டுப் பிடிவாதத்திற்கு ஒரு காரணம் இருக்கிறது. (இந்துச்சட்ட) சீர்திருத்தத்திற்கு ஆதரவாளர்களாக **நேரு, அம்பேத்கர்** தலைமையிலான குழுவை பெண் உரிமைக் காவலர்கள் என்றும், சீர்திருத்தங்களை எதிர்த்த அனைவரையும் பெண்களின் சமஉரிமைக்கு எதிரான கடும் பழமைவாதிகள் என்றும், முற்போக்கான வரலாற்று ஆசிரியர்கள் படம் பிடித்துக் காட்டினார்கள். இந்துச் சட்டத் சீர்திருத்தம் குறித்து நடந்த விவாதத்தை இப்படி முன்னிறுத்திக் காட்டியதேமேலேசுட்டிக் காட்டியுள்ள பிடிவாதத்திற்கு ஒரு காரணமாக அமைந்துவிட்டது. பாராளுமன்ற விவாதங்களை நான் ஆய்வு செய்ததில் பின் வரும் கருத்தைநிலைநிறுத்த விரும்புகிறேன். தங்களைத்தாங்களே சீர்திருத்தவாதிகளாக முன்னிறுத்திக் கொண்டவர்கள் சொல்லி வருவதைப் போல சமூகத்தை மிகச் சமத்துவமான, மனிதாபிமான ஒழுங்குகளுக்கு முன்னேற்றுவது மிகமிகச் சிக்கலான கடமையாகும். மக்களிடையே புதிய சமூகக் கருத்தொற்றுமையை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டிருப்பதே சீர்திருத்தம் என்பதற்கு உண்மையான பொருளாகும். மேலிருந்து திணிக்கப்படும்

அரசாங்க நடவடிக்கைகளிலேயே மாயை கொண்டிருந்தவர்கள், இந்த அம்சத்தை தீவிரமாக எடுத்துக்கொள்ளவே இல்லை.

மிகப்பெரும் எண்ணிக்கை கொண்ட மக்களின் சார்பாக தாங்கள் பேசுவதாக சீர்திருத்தவாதிகள் உரிமை கொண்டாடினாலும் அவர்கள் மக்களுக்கு நல்லது செய்ததைக் காட்டிலும் தீமைகளே அதிகம் செய்தார்கள். மக்களின் மரபுகளைப் பற்றியோ அவர்களின் நிறுவனங்களைப் பற்றியோ எந்த உண்மையான அறிவும் இவர்களுக்குக் கிடையாது. எந்த சமூகத்திற்காக சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டதோ அந்தச் சமூகத்தைப் பற்றி ஒரு ஆழமான அறிவில்லாததால் மிக நல்ல நோக்கம் கொண்ட சீர்திருத்தம்கூட நாசத்திலேயே முடிவடைந்தது. எப்போதெல்லாம் சீர்திருத்தங்களில் மக்கள் செயலூக்குமான பங்கெடுக்காமல் பார்வையாளர்களாக இருந்து வருகிறார்களோ அப்போதெல்லாம் அங்கு எதிர்பார்த்த விளைவுகள் கிடைக்காது. குறிப்பாக, சீர்திருத்தத்தை முன்னெடுப்பவர்கள் அன்னிய மேட்டுக்குடியினராக இருந்தாலோ அல்லது ஆங்கிலம் படித்த இந்திய மேட்டுக்குடியினரைப் போல மக்களின் வாழ்க்கையிலிருந்து அன்னியப்பட்டு இருந்தாலோ அங்கெல்லாம் எதிர்பார்த்த விளைவுகள் கிடைக்காது. சீர்திருத்த வாதிகளாகவோ அல்லது புரட்சியாளர்களாகவோ தங்களைத் தாங்களே கருதிக்கொள்பவர்கள் தங்களது அனைத்துச் செயல்களும் மக்களின் நன்மைக்கே என்று கருதிக் கொண்டே உண்மையில் மக்களுக்கு இடையூறே செய்து வருகிறார்கள். இந்த சுய சீர்திருத்த வாதிகளின் உரிமைப் பாராட்டல்களை மிகக் கவனமாக ஆய்வு செய்ய வேண்டும். இவர்களின் நடவடிக்கைகள் நடைமுறையில் எப்படி சமூகத்தைப் பாதிக்கிறது என்பதை குறிப்பான ஆதாரங்கள் மூலம் ஆய்வு செய்யவேண்டும். சீர்திருத்தங்களின் நன்மைகள் பற்றிய இவர்களின் சொல் அலங்காரங்

களை உண்மையென அப்படியே எடுத்துக்கொள்ளக் கூடாது.

இன்றைய சமூகப் பொருளாதார அரசியல் குழப்பத் திற்கு முக்கியக் காரணம் இந்திய மக்களின் அபிலாசை களையும் உண்மையான நிலமைகளையும் குறித்து இந்த மேட்டுக்குடியினர் காட்டிவரும் அலட்சியமும், அறியாமை யுமே ஆகும். சமூகச் சீர்திருத்த வாதிகளாக தங்களைத் தாங்களே நியமித்துக்கொண்ட தற்போதைய தலைமுறை யினரிடையே வாழ்ந்து வருபவர்களில் நானும் ஒருவன் என்ற முறையில் பின்வரும் கருத்தை மிக மிக முக்கியமான தாக உணர்கிறேன். இந்த நாட்டு மக்களை மிகத் தீவிர மாக நாம் ஆய்வு செய்யவேண்டும். நமது செயல்பாடுக ளையும், சீர்திருத்த முயற்சிகளையும் தொடர்ந்து முழுமை யான ஆய்விற்கு உட்படுத்தி வரவேண்டும். □

''நேரு நினைவு காட்சியகம் & சங்கம்'' 'தென் ஆசிய ஆய்வு மையம்', 'டெக்அஸ் பல்கலைக்கழகம்', 'புனித அந்தோணியர்' கல்லூரி' (ஆக்ஸ்போர்டு) ஆகியன இணைந்து மே 30 முதல் ஜூன் 1 முடிய ஆக்ஸ்போர்டில் ஒரு கருத்தரங்கை நடத்தின. **''இந்தியா- முதல் பத்தாண்டுகள் 1947-57''** என்ற தலைப்பின் கீழ் நடைபெற்ற அந்தக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரையின் திருத்தப்பட்ட வடிவமே இக்கட்டுரை.

ஃ

# அடிக்குறிப்புகள்

1. ''இந்தியாவில் மதம், சட்டம், அரசாங்கம்''— ஜெ. டங்கன் டெர்ரீட் ப்ரீபிரஸ், நியூயார்க் 1968, பக்கம் 225.
2. அதே நூல், பக்கம் 233-35.
3. அதே நூல் பக்கம் 240.
4. அதே நூல் பக்கம் 244.
5. அதே நூல் பக்கம் 251.
6. யஜ்னவாக்யரின் சாத்திரம் பற்றி திரு. விஜ்ஞனேஸ்வர் என்பவர் எழுதிய விரிவுரை நூலே மிடக்சாரா என்பது. 11ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இது எழுதப்பட்டது. அனைத்து சாத்திர விதிகளையும் உட்செரித்து எழுதப்பட்ட நூலே டயாபகா என்பது. ஜிமுத்தவாகனர் என்பவர் 12ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இதை எழுதியுள்ளார். பார்க்க, திரு. முல்லாவின் ''இந்துச்சட்டத்தின் அடிப்படைகள்'' 15ஆம் பதிப்பு, 1986, பக்கம் 86.
7. இந்திய அரசியல் நிர்ணய சபை விவாதங்கள் தொகுப்பு : 5, எண் : 1, 1948, பக்கம் 36, 47.
8. மக்களவை விவாதங்கள் தொகுப்பு : 4,1956, பகுதி:2 பக்கம் 6860.
9. திரு. முல்லாவின் ''இந்துச்சட்டத்தின் அடிப்படைகள்''.
10. அதே நூல்.
11. மக்களவை விவாதங்கள் தொகுப்பு: 4, 1956, பகுதி: 2, பக்கம் 6951.

12. பாராளுமன்ற விவாதங்கள் தொகுப்பு: 5, 1954, பகுதி: 2, பக்கம், 6973—76.
13. அதேநூல், பக்கம் 7253—54.
14. இந்திய அரசியல் நிர்ணய சபை விவாதங்கள் தொகுப்பு:5, எண்: 1, 1948, பக்கம் 3647,
15. மக்களவை விவாதங்கள் தொகுப்பு: 4,1956 பகுதி: 3, பக்கம் 6922.
16. இந்திய அரசியல் நிர்ணய சபை விவாதங்கள் தொகுப்பு:6, 1949, பகுதி:2, பக்கம் 542.
17. பாராளுமன்ற விவாதங்கள் தொகுப்பு: 15, 1951, பகுதி: 2, பக்கம் 3185.
18. அதேநூல், பக்கம் 3186.
19. அதேநூல், பக்கம் 2951.
20. இந்திய அரசியல் நிர்ணய சபை விவாதங்கள், தொகுப்பு: 5, எண்: 4, 1948, பக்கம் 3652-53.
21. முல்லாவின் அதேநூல், பக்கம் 10—11.
22. அதேநூல், பக்கம் 67.
23. அதேநூல், பக்கம் 23.
24. அதேநூல், பக்கம் 11.
25. அதேநூல், பக்கம் 11.
26. அதேநூல், பக்கம் 12.
27. அதேநூல், பக்கம் 12.
28. அதேநூல், பக்கம் 15.
29. மகாத்மாகாந்தி, 'அரிசன்' நவம்பர் 16, 1935, மகாத்மாகாந்தி தொகுப்பு நூல்கள் வெளியீட்டுத் துறை, இந்திய அரசாங்கம், தொகுப்பு: LXII பக்கம் 121.
30. காந்தி 'யங் இந்தியா' அக்டோபர் 6, 1921. மகாத்மாகாந்தி தொகுப்பு நூல்கள், தொகுப்பு: 21, பக்கம்: 246.

31. இந்திய அரசியல் நிர்ணய சபை விவாதங்கள் தொகுப்பு.5, எண்:4, பக்கம் 3652.
32. பகவான்கங்காபாய் வருவாய் (1908) பம்பாய், 300; டட்டாரே (1922), பம்பாய் 541, 558, முல்லா புத்தகம், பக்கம் 57—58.
33. முல்லாவின் அதேநூல்கள். பக்கம் 325.
34. திரு.வெங்கட்ராய சர்மாவின், ''இந்துச்சட்டக்குழு விடம் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து பூர்வ அறிக்கை தொகுப்பு: 2, 1945, சென்னை 1947.
35. அதேநூல், பக்கம் 453.
36. பாராளுமன்ற விவாதங்கள் தொகுப்பு: 15, 1951, பகுதி: 2, பக்கம் 3101.
37. அதேநூல், பக்கம் 3102.
38. அதேநூல், பக்கம் 3110.
39. இந்துச் சட்டக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து பூர்வ அறிக்கை, பக்கம் 360.
40. பாராளுமன்ற விவாதங்கள் தொகுப்பு: 15, 1951, பகுதி;2, பக்கம் 2716.
41. பாராளுமன்ற விவாதங்கள் தொகுப்பு: 5, 1954 பகுதி: 2, பக்கம் 7150—51.
42. அதேநூல், பக்கம் 7224—25.
43. அதேநூல், பக்கம் 7225—26.
44. அதேநூல், பக்கம் 7227.
45. அரசியல் நிர்ணய சபை விவாதங்கள் தொகுப்பு: 1949, பகுதி: 2, பக்கம் 538—39.
46. நாராயன்லேவிங் (1878) 2 பம்பாய் 140; கேசவ்பாய் காந்தி (1915) 39 பம்பாய் 538, 29 ஐசி 952(15) ஏபி 107, முல்லா, அதே பக்கம் 565
47. தெகாய்த் மன் மோகினி பசந்தகுமார், 1901, 28 கல்கத்தா 751 முல்லாவின் அதேநூல், பக்கம் 755.

48. பெய்ஜிசியோநாராயன் (1886) 8 78; மோதிலால் பய்கேன்சல் (1902) 4 பம்பாய் எல்ஆர்· 107, பிந்தாகதவுன்சிலா (1891) 13,126, 164, முல்லாவின் அதேநூல், பக்கம் 567.

49. பாராளுமன்ற விவாதங்கள் தொகுப்பு:5, 1954, பகுதி: 2, பக்கம் 7132.

50. ''அரியானாவில் விதவை மறுமண பழக்கம்''— பிரேம்சௌத்ரி, மனுசி எண். 80, 1994.

51. இந்திய அரசியல் நிர்ணய சபை விவாதங்கள் தொகுப்பு: 6, 1949, பகுதி: 2, பக்கம் 504.

52. இந்துச்சட்டக் குழுவிடம்சமர்பிக்கப்பட்ட எழுத்து பூர்வ அறிக்கை பக்கம் 500,

53. இந்திய அரசியல் நிர்ணய சபை விவாதங்கள் தொகுப்பு:2, 1949 பகுதி:2 பக்கம் 831,

54. பாராளுமன்ற விவாதங்கள் தொகுப்பு:5, 1954, பகுதி:2, பக்கம் 7124.

55 மக்களவை விவாதங்கள் தொகுப்பு: 4, 1956, பகுதி:2, பக்கம் 6905.

56. இந்திய அரசியல் நிர்ணய சபை விவாதங்கள் தொகுப்பு:5, 1948, பகுதி;2, பக்கம் 3648—50.

57. ''உரிமைகள் ஏதுமின்றி துன்பப்படல்; சிங்புங் பகுதி இனப்பெண்கள், திரு. மதுகிச்வர், ''எகானமிக் அன் பொலிடிக்கல் வீக்லி'' Vol: XXII, எண் 3,4,5, சனவரி 17,21,31, 1987, பழங்குடிப் பெண்களுக்கு நிலத்தில் சம உரிமை அளிக்கப் படாததை எதிர்த்து ''மனுசி'' சார்பாக உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது 1981.

58. மக்களவை விவாதங்கள் தொகுப்பு:6, 1956, பகுதி;2 பக்கம் 102.

59. அதேநூல், பக்கம் 153—57.

60. பெசந்த் நாராயன் (1914) 41 ஐஏ 314, 38 சென்னை 807, 819, 241சி 290(14) ஏபிசி 41, முல்லாவின் அதேநூல், பக்கம் 1059.

61. மக்களவை விவாதங்கள் தொகுப்பு;1956, பகுதி:2, பக்கம் 158.

62. அதேநூல்;

63. அதேநூல், பக்கம் 210—11.

64. அரசியல் நிர்ணய சபை விவாதங்கள் தொகுப்பு;2, 1949, பக்கம் 828.

65. மக்களவை விவாதங்கள் தொகுப்பு; 10,1956,

66. முல்லாவின் அதேநூல், பக்கம் 621.

67. மக்களவை விவாதங்கள் தொகுப்பு: 10, 1956, பகுதி: 2, பக்கம் 3004.

68. இந்திய அரசியல் நிர்ணய சபை விவாதங்கள் தொகுப்பு:2, 1949, பகுதி;2, பக்கம் 835.

69. அதேநூல், பக்கம் 835.

70. மக்களவை விவாதங்கள் தொகுப்பு; 10, 1956, பகுதி; 2, பக்கம் 2893-2900.

71. அதேநூல், பக்கம் 2961.

72. பாராளுமன்ற விவாதங்கள் தெகுப்பு: 5, 1954, பகுதி: 2, பக்கம் 7197-7205.

73. இந்திய அரசியல் நிர்ணய சபை விவாதங்கள் தொகுப்பு : 6, 1949, பகுதி : 2, பக்கம் 508.

74. இந்திய அரசியல் நிர்ணய சபை விவாதங்கள் தொகுப்பு : 2, 1949 பகுதி : 2, பக்கம் 841.

75. மக்களவை விவாதங்கள் தொகுப்பு: 4, 1956, பகுதி:2, பக்கம் 7227

76. அதேநூல் பக்கம் 6880-81

77. இந்திய அரசியல் நிர்ணய சபை விவாதங்கள் தொகுப்பு : 6, 1949, பகுதி : 2, பக்கம் 469-70.
78. மக்களவை விவாதங்கள் தொகுப்பு: 4, 1956, பகுதி: 2, பக்கம் 7567
79. இந்துச் சட்டக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துப்பூர்வ அறிக்கை தொகுப்பு : 2, 1945, சென்னை, 1947, பக்கம் 356.
80. அதே நூல் பக்கம் 757
81. அதே நூல், பக்கம் 491
82. அதே நூல், பக்கம் 734
83. ''இந்துச் சட்டத்தொகுப்பின் பொருளாதாரம்''— தி ஈஸ்ட்டர்ன் எகானமிஸ்ட், மார்ச் 28, 1949.
84. இந்துச்சட்டத் தொகுப்பு மூன்றாவது சுற்று— தி ஈஸ்ட்டர்ன் எகானமிஸ்ட் ஏப்ரல் 1, 1955.
85. மக்களவை விவாதங்கள் தொகுப்பு: 4, 1956, பகுதி: 2, பக்கம் 6869.
86. அதே நூல் பக்கம் 6846.
87. அதே நூல், பக்கம் 7613.
88. ''தி இந்துஸ்தான் டைம்ஸ்'' மே 4, 1956 பக்கம் 1.
89. தி இந்துஸ்தான் டைம்ஸ் மே9. 1956, பக்கம் 1.
90. மக்களவை விவாதங்கள் தொகுப்பு: 4, 1956, பகுதி: 2, பக்கம் 6969—70.
91. அதே நூல் பக்கம் 6968—69.
92. இந்துச் சட்டக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துபூர்வ அறிக்கை பக்கம் 390.
93. அதே நூல், பக்கம் 444.
94. பாராளுமன்ற விவாதங்கள் தொகுப்பு; 15, 1951, பகுதி: 2, பக்கம் 2948.

95. மக்களவை விவாதங்கள் தொகுப்பு:9, 1954, பகுதி:2 பக்கம் 2243—49.

96. மக்களவை விவாதங்கள் தொகுப்பு:4, 1956. பகுதி:2 பக்கம் 7656—57.

97. இந்திய அரசியல் நிர்ணய சபை விவாதங்கள் தொகுப்பு: 6, 1949, பகுதி:2, பக்கம் 477,480.

98. பெண்களின் தகுதிபற்றிய ஆய்வுக்குழுவின் அறிக்கை, இந்திய அரசு 1975.

99 பாராளுமன்ற விவாதங்கள் தொகுப்பு: 5, 1954, பகுதி: 2, பக்கம் 7085, சனசங்கத்தைச் சார்ந்த யூ. எம். திரிவேதி.

100. எழுத்துப் பூர்வ அறிக்கை, அதேநூல், பக்கம் 408.

101. மக்களவை விவாதங்கள் தொகுப்பு: 10, 1956 பகுதி: 2, பக்கம் 3020.

□ □

## எமது வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | மார்க்சியத்தின் பெயரால் —அ. மார்க்ஸ் | 25-00 |
| 2. | தாழ்த்தப்பட்டோர் காந்தியிடம் ஏன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் —அம்பேத்கர் | 10-00 |
| 3. | நாகரிகமா நயவஞ்சகமா —அம்பேத்கர் | 20-00 |
| 4. | உடைபடும் மௌனங்கள் —அ. மார்க்ஸ் | 30-00 |
| 5. | போல்ஷெவிக் கட்சியின் இரட்டை நிலைபாடு —லெனின் | 20-00 |
| 6. | அரசு—குடும்பம்—பெண்ணியம் | 30-00 |
| 7. | தேசியம் ஒரு கற்பிதம் | 35-00 |
| 8. | தண்ணீர் —கே. டானியல் | 35-00 |
| 9. | டானியலின் குறுநாவல்கள் | 35-00 |
| 10. | மாவோ விடம் கற்போம்—எட்கர் ஸ்நோ | 20-00 |